

# நெஞ்சில் நிறைந்தவை...

இ.குமாரசாமி சர்மா

பிரம்மஸ்ரீ இ. குமாரசாமி சர்மா ஸ்ரீமதி பார்வதி தம்பதிகளின்
70வது அகவை சிறப்பிதழ்

பொது நூலகம்
யாழ்ப்பாணம்.

PUBLIC LIBRARY
JAFFNA

7726(P)

PUBLIC LIBRARY

# நெஞ்சில் நிறைந்தவை...




பிரம்மஸ்ரீ இ. குமாரசாமி சர்மா ஸ்ரீமதி பார்வதி தம்பதிகளின்


70வது அகவை சிறப்பிதழ்

7726 (P)

பீமரத சாந்தி விழா தம்பதியினர்




பிரம்மஸ்ரீ இ. குமாரசாமி சர்மா
ஸ்ரீமதி பார்வதி தம்பதிகள்



பிரம்மஸ்ரீ இரத்தின சபாபதிக்குருக்கள்
ஸ்ரீமதி நீலாம்பிகை அம்மா

PUBLIC LIBRARY
JAFFNA



பிரம்மஶ்ரீ சீதாராமசாஸ்திரிகள்
ஶ்ரீமதி சீதாலட்சுமி அம்மா



# நெஞ்சில் நிறைந்தவை...



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கொண்டின்ய கோத்ரம்
பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள் குமாரசாமி சர்மா
ஸ்ரீமதி பார்வதி தம்பதிகளின்
70வது அகவை
**"பீமரதசாந்தி"**
**சிறப்பு மலர் 2014**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | நெஞ்சில் நிறைந்தவை |
| ஆசிரியர் | - | பிரம்மஸ்ரீ இ. குமாரசாமி சர்மா - பி.ஏ. (ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர், ஆலய குரு) |
| விடயம் | - | ஆசிரியர் கண்ட அனுபவங்கள், பார்த்த நிகழ்ச்சிகள், பல்துறை ஆக்கங்கள், பத்திரிகைகளில் ஆசிரியரால் எழுதி பிரசுரமான கட்டுரைகள் |
| முகவரி | - | 45 பி.ஏ. தம்பிலேன் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். |
| வெளியீடு | - | பிரம்மஸ்ரீ இ. குமாரசாமி சர்மா அவர்களின் குடும்பத்தினர் |
| தொ.பே.இல. | - | 021 222 4973 |
| அச்சுப்பதிவு | - | நோபிள் பிறிண்டேர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |

## நெஞ்சில் நிறைந்தவை

ஐவகை

இயல் 1

இறைபக்தி

இயல் 2

கல்விமான்கள்
அரசசேவையாளர்
சில பதிவுகள்

இயல் 3

வெளிநாட்டு அனுபவ பதிவுகள்

இயல் 4

சில அறிஞர்கள்

இயல் 5

பார்த்த, அனுபவித்த
இசை நிகழ்ச்சிகள்
பதிவுகள்

உ

# தோத்திரப் பாக்கள்



## விநாயகர் துதி

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் மவரிடர்
கடிகன பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## தேவாரம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணல் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

## திருவாசகம்

பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த

செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்தோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியை
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக் னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

**திருப்புகழ்**

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்ட கடலிற் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேன்பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே

**வாழ்த்து**

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!
திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்



## வெண்பா

எண்ணிசைசேர் வண்ணை யெழினகர்க்காட் டுத்தறை
விண்ணாரானந்த விநாயகரே! - பண்ணார்ந்த வாழ்
ஊஞ்சற் பதிகமொன் றுன்மீது பாடுதற்கு
வாஞ்சித்தேன் முன்னிற்பாய் வந்து.

## திரு ஊஞ்சல்

திருவாழத் திருவளரைந் தெழுத்து வாழத்
திருநீறுங் கண்டிகையுஞ் சிறந்து வாழ
அருள்சேரும் பெருமக்கள் அன்று தந்த
அரியதிரு முறைகளொடு மறையும் வாழப்
பொருள்சேரும் புவிவாழ அடியார் வாழப்
பொருந்துமலர்த் தண்டலைசூழ் வண்ணை தன்னில்
அரியதிரு வருட்காட்டுத் தறையில் வாழும்
ஆனந்த விநாயகரே! ஆடீ ரூஞ்சல்

ஐந்ததிருக் கரங்கள் திருக் கண்கள் மூன்றும்
அழகொழுகத் திகழ் திங்கள் அணியா நின்ற
சுந்தரச்செவ் வானம்போல் துலங்கும் வேணி
சொல்லுமதம் மூன்றுபொழி தூய தோற்றம்
மைந்துநிறை வேழத்தின் வதனங் கொண்டே
வளமாருஞ் சிவனாரெண் குணமும் வாய்ந்து
அந்தணர்கள் மகிழ்காட்டுத் தறையில் வாழும்
ஆனந்த விநாயகரே! ஆடீ ரூஞ்சல்

மறைநான்கும் வாய்ந்ததிருத் தூண்களாக
வளர்சைவ ஆகமங்கள் விட்ட மகா
குறைதவிரெண் ணெண்கலைகள் கயிற தாகக்
கூறுமா றங்கமவை பலகையாக
நிறைசேரும் பிரணவமே பீட மாக
நிகரில்லா அழகொழுகும் ஊஞ்சல் மீரே
அறைதருநல் வளக்காட்டுத் தறையில் வாழும்
ஆனந்த விநாயகரே! ஆடீ ரூஞ்சல்.

சடைகாட்டுத் த[illegible]ளிசேர் திங்க ளாட
தாட்டுணை[illegible]ழலாடச் சதங்கை யாட
மடைகாட்டுங் கருணைபொழி வதனம் ஆட
மலர்க்கண்க ளவைமூன்றும் மலர்ந்தே யாட
படைகாட்டும் அங்குசபா சங்க ளாடப்
பைங்கிளிகள் பூவைதமிழ்ப் பாட்டுப் பாட
அடைவுறுசீர் அணிகாட்டுத் தறையில் வாழும்
ஆனந்த விநாயகரே! ஆடீ ரூஞ்சல்

அன்பென்னும் இன்பொருளே தகளி யாக
ஆர்வமதே நெய்யாக அதனுள் தேக்கி
இன்புருகு சிந்தையிடு தியா ஞான

எழிலாரும் விளக்கேற்றிப் பெரியோர் போற்ற
என்கண்ணே! மணியே! ஏ ரம்பா! எந்தாய்!
என்பொன்னே! கணபதியே என்றென் றேத்தும்
அன்பர்களுக் கருள்காட்டுத் தறையில் வாழும்
ஆனந்த விநாயகரே! ஆடீ ரூஞ்சல்

மலைமகளும் ஈசனுமோர் வடந்தொட்டாட்ட
வள்ளியுடன் கந்தனுமோர் வடந்தொட் டாட்ட
கலைமகளும் பிரமனுமோர் வடந்தொட் டாட்டக்
காசினியோர் கணிகளிப்பக் கவினார் ஊஞ்சல்
மலர்மகளும் மாலுமொரு வடந்தொட் டாட்ட
மருதமரக் கிளிகளுடன் குயில்கள் பாட
அலைவளஞ்சேர் தருங்காட்டுத் தறையில் வாழும்
ஆனந்த விநாயகரே! ஆடீ ஊஞ்சல்.

சிவனார்தேர் அச்சதனை முறிய வைத்தாய்
திருமுறைகள் பெறுவதற்கு வழியுஞ் செய்தாய்.
சிவனார்தம் மாங்கனியைச் சிறப்பிற் பெற்றாய்
சிந்தாத மணியதுவாய்த் திகழ்ந்து நின்றாய்
எவரேனு மேத்துவார்க் கருள நின்றாய்
இன்னருளைப் பாலித்துக் காக்க நின்றாய்
அவரவருக் காகுவன அறிந்தே நல்கும்
ஆனந்த விநாயகரே! ஆடீ ரூஞ்சல்.

வள்ளியினை யடைவதற்கு மனமே கொண்ட
மாமுருகன் கர்டினிலே வேண்ட வந்நாள்
உள்ளியவள் முன்னேயோர் வேழ மாக
உரனோடுஞ் சென்றவனைக் காத்த அண்ணால்
தெள்ளியநற் றிருமாலன் றிழந்த சங்கைத்
திருவருள்செய் தடையச் யெ் திருவார் மைந்த!

அள்ளதிருப் பணிக்காட்டுத் தறையில் வாழும்
ஆனந்த விநாயகரே! ஆடீரூஞ்சல்
இந்திரனுக் கருள்புரிந்த இறைவா! முக்கண்
ஏந்தலே! விண்டுவிண்சக் கரத்தை யீந்தாய
சந்திரசிட் சாரட்ச கப்பேர் தாங்கிச்
சந்தனநற் பொதிகைமுனிக் கருளினோயே
மைந்துடைய ராவணன்றன் கர்வம் போககி
மாமேரு வெற்பதனில் நூல்வ ரைந்தோய்!
அந்தமிலா வருட்காட்டுத் தறையில் வாழும்
ஆனந்த விநாயகரே! ஆடீ ரூஞ்சல்

காசிபநன் முனிவரது மனைவி விந்தை
கருத்தரித்த முட்டையினைக் கையாற் கீறி
வீசொளிசேர் மயிலாக்கி விரைந்தே யேறி
வெகுள்நாகர் சிறையிட்ட ஆன்னாள் மைந்தர்
மாசகல வவர்தம்மைச் சிறையி னீக்கி
மயூரேசர் எனும்பெயருந் தரித்துக் கொண்டோய்
ஆசில்பொன் னிறப்பணிக்க னோடை வாழும்
ஆனந்த விநாயகரே! ஆடீ ரூஞ்சல்.

## வாழி விருத்தம்


சித்திபுத்தி யெனுஞ்சந்தி யிருவருஞ்சேர்
சித்திதரும் விநாயகராந் தேவன் வாழி
பத்தியொடு பணிபவர்க்கே யருளும் வைத்துப்
பத்தியிலார் தமக்குமறக் கருணை வைத்தே
எத்தினமும் பாலிக்கும் இறைவன் வாழி
இணையில்பதி யோர்வாழி மறையோர் வாழி
அத்திபலா சூழ்காட்டுத் தறையும் வாழி
அடியார்கள் ஆளினங்கள் வாழி வாழி.
திருச்சிற்றம்பலம்



பிரம்மஸ்ரீ இ. குமாரசாமி சர்மா




தம்பதியினர்



காட்டுத்துறை விக்னேஸ்வரர் ஆலயம்



கும்பாபிஷேகம்



தேர் வெள்ளோட்ட நிகழ்வில்



ஞான வைரவர் ஆலயம்



குருவை வணங்கல்




70 வது அகவை வைபவம் - பீமரத சாந்தி




பீமரத சாந்தி நிகழ்வு



கோகுலபாலன் ஸ்ரீவித்யாவுடன்



முரளிதரன் சிந்துஜா திருமணம்



முரளிதரன் சிந்துஜா திருமணம்



மூத்த மகன் நந்தகோபன்
லண்டனில் உயர்பட்ட விருது
பெற்றபோது...



பிரான்ஸில்
ஸ்ரீ. ஸ்ரீமதி குமாரசாமி சர்மா தம்பதிகள்

# முன்னுரை

நாம் லண்டன் சென்ற பொழுது எமது 70 வயது பீமரத சாந்தி நிகழ்வு ஈஸ்ட்காம் முருகன் கோவிலில் நவம்பர் மாதம் 2011 ஆம் ஆண்டு வெகு சிறப்பாக பல உறவினர்கள், எமது பிள்ளைகள், குருமார்கள் ஆசிகளுடனும் வாழ்த்துக்களுடனும் பிரம்மஸ்ரீ நாகநாதக்குருக்கள் தலைமையில் நடாத்தப்பட்டமை எமது வாழ்நாளில் மறக்கமுடியாத சம்பவமாகும். அன்று "நெஞ் சில் நிறைந்தவை" எனும் நூல் சிறு வடிவில் வெளிவந்தது. பல வசதி குறைவினால் இந்த நூல் பெரிதாக வெளியிட முடியாது போயிற்று.

எனது வாழ்நாளில் பல நிகழ்வுகள் நான் பார்த்து மகிழ்ந்த சம்பவங்கள் என்பனவற்றை வெளியிட வேண்டும் என எண்ணினேன். காட்டுத்துறை விக்கினேவரர் கோயில், நான் கல்வி பயின்ற பாடசாலை அனுபவங்கள், அரச அதிபர்களின் சேவைகள் யாவும் எனது மனதில் நிறைந்து இருந்தன. நாங்கள் வெளிநாடுகளுக்குச் சென்றபோது அங்கு எம் மக்களின் வாழ் வியல் நிலைகள் நாம் பார்த்து ரசித்த இசை நிகழ்ச்சிகள் என் பன யாவற்றையும் வெளியிட எனது மனம் தூண்டியது.

நான் கற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கல்வி கற்பித்த ஆசிரியர்கள், அதிபர் கள் பற்றி அவர்கள் கற்பித்த தன்மைகள் பற்றி பத்திரிகையில் எழுதியன தினக்குரல், வீரகேசரி ஆகியவற்றில் வெளிவந்தன. பின்னர் யாழ் மாவட்டத்தில் எழுபதாம் ஆண்டு முதல் அரச

அதிபராக இருந்து மக்களின் மனங்களைக் கவர்ந்த அரச அதிபர்களின் அபார சேவைகள் பற்றிய எழுதிய கட்டுரைகள் தினக்குரல், உதயன் பத்திரிகையில் வெளிவந்தன. இவற்றை பார்த்த பலர் எனக்கு நன்றி கூறி உற்சாகப்படுத்தி மேலும் பல செய்திகளை வெளியிடுமாறு கூறினர்.

எமது பிள்ளைகளான நந்தகோபன், கோகுலபாலன், முரளிதரன் ஆகியோரது ஆதரவினால் நாம் இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ், இந்தியா முதலான நாடுகளுக்குச் செல்லும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. நாம் அந் நாடுகளுக்குச் சென்றபோது அங்கு புலம் பெயர்ந்து சென்றுள்ள ஈழத்தமிழ் மக்களின் வாழ் வியல், கலைகள், கலாச்சாரங்கள் அவர்களது பொருளாதார முயற்சிகள், அங்கு நாம் கண்ட காட்சிகள் என்பன பற்றி எழுதி யவையும் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

எம் மனதைக் கவர்ந்த சில அறிஞர்கள் அவர்களது சேவைகள் அவர்களது சிறப்புக்கள் பற்றி எழுதிய கட்டுரைகள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. எமக்கு இசை நிகழ்வு களில் அதிக ஈடுபாடு ஆர்வம் உண்டு. நடன நிகழ்வுகள், அரங் கேற்றங்கள் என்பன எங்கு நடைபெற்றாலும் பார்த்து ரசித்து அவை பற்றிய விமர்சனங்கள் பல பத்திரிகைகளில் எழுதி யுள்ளேன். எமது நாட்டின் மூத்த, இளங்கலைஞர்கள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டனர். அதனால் எமது நாட்டில் இசை நிகழ்வுகள் அரங்குகள் குறைவடைந்து தரமும் குன்றி விட்டன. இங்கு இருக்கின்ற இளங்கலைஞர்களின் கலை ஆற் றலை அவர்களின் முயற்சிகளைப் பாராட்டும் முகமாக இங்கு நடைபெறுகின்ற இசை நிகழ்ச்சிகள் பற்றியும் அவர்களது திறமைகளையும் பாராட்டி ஆய்வு செய்து பத்திரிகைகளில் எழுதி யுள்ளேன்.

இவ்வாறு பத்திரிகைகளில் வெளிவந்தவற்றை தொகுத்து பிரித்து எமது எழுபதாவது அகவை ஞாபகமாக "நமது நெஞ்சில் நிறைந்தவை" என்னும் சிறப்பு மலராக வெளியிடுகின்றோம்.

இந்நூலுக்குரிய ஆசியுரைகளையும் வாழ்த்துக்களையும் வழங்கி உதவிய எமது மதிப்பிற்குரிய சிவ ஸ்ரீ.தா.மகாதேவக் குருக்கள் அவர்களுக்கும் பிரம்மஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா சிரேஷ்ட விரிவுரையாளர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

இந்நூல் பற்றி பல கருத்துக்கள், ஆலோசனைகள் வழங்கி நூலிற்கு அணிந்துரை வழங்கி சிறப்புற உதவிய வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் அவர்களுக்கும் எமது நன்றியும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்நூலினை சிறப்புற வடிவமைத்து அச்சிட்டு உதவிய நோபிள் பிறிண்ரேர்ஸ் நிறுவனத்துக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மேலும் இந்நூல் வெளியிட சகல உதவிகளையும் புரிந்த அன்பர்கள் அனைவருக்கும் இதில் வெளிவந்துள்ள கட்டுரைகள், விமர்சனங்கள் என்பவற்றை பத்திரிகைகளில் பிரசுரித்து உதவியுள்ள உதயன், தினக்குரல், வீரகேசரி, தினகரன், தமிழமுதம், நமது முரசொலி முதலான பத்திரிகைகளுக்கும் எமது மனமுவந்த நன்றிகள் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

நிறைவாக எம்மை இதுவரை காலமும் சிறப்புற வாழ்வதற்கு எல்லாச் செல்வங்களையும் திருவருள் புரிந்து எம்மை இனிது காத்தருளும் எமது குல தெய்வமாகிய ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பெருமானையும் பகவதி மாரியம்மனையும் ஞான வைரவப் பெருமானையும் திரிகரண சுத்தியுடன் வணங்குவதோடு என்றும் துணை நிற்க மனமார பிரார்த்திக்கின்றோம்.

சுபம்!

7726(P)

**பிரம்மஸ்ரீ இ. குமாரசாமி சர்மா, ஸ்ரீமதி பார்வதி**

15 பி.ஏ தம்பிலேன்
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

# அணிந்துரை

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த பிரம்ம ஸ்ரீ குமாரசாமி சர்மா தமது எழுபதாவது அகவையினைச் குறிக்கும் பீமரத சாந்தி வைபவத்தை ஏற்கனவே சென்ற 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் லண்டனில் தமது துணைவியாராகிய ஸ்ரீமதி பார்வதி, பிள்ளைகள் மற்றும் சுற்றத்தவர் சகிதம் கொண் டாடி மகிழ்ந்ததை நினைவுகூரும் வகையில் "நெஞ்சில் நிறைந்தவை" என்ற கட்டுரைத் தொகுப்பு நூலொன்றினை வெளியிடவுள்ளதையறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். முதற்கண் பீமரத சாந்தி வைபவத்தைக் கொண்டாடி மகிழ்ந்த விழாத் தம்பதியினருக்கு எமது மனமுவந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக. அவர் வெளியிடும் இந்நூல் அவரது வாழ்வில் சந்தித்த நிகழ்வுகளின் பதிவாகவும் நெஞ்சில் நிறைந்தவையாகவும் அமைந்து பீமரத சாந்திக்குப் பொருத்தமாகவுள்ளமை குறிப்பிடற்பாலது.

பிரம்மஸ்ரீ குமாரசாமி சர்மா வண்ணார்பண்ணை காட்டுத் துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பெருமானது ஆலய பிரதம குருவாக விளங்கிய பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள் அவரது துணைவியார் ஸ்ரீமதி நீலாம்பிகை அம்மாள் ஆகியோரது நான்கு புதல்வர்களில் மூன்றாவது புதல்வராவார். இவருக்கு ஒரு சகோதரியும் உள்ளார். இவர் தமது கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பெற்று பேராதனையில் உள்ள இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பட்டதாரியாக வெளியேறியவர். மேலும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை

யைச் சேர்ந்தவராகிய வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி.க. சீதாரமசாஸ்திரிகள் ஸ்ரீமதி சீதாலட்சுமி அம்மா தம்பதிகளது புதல்வியர்களுள் ஒருவராகிய ஸ்ரீமதி பார்வதியை திருமணஞ் செய்து மூன்று புதல்வர்களைப் பெற்று அவர்களுக்குக் கல்வி யறிவூட்டி உரிய காலத்தில் அவர்களது திருமண வைபவங் களை நிறைவேற்றி மனநிறைவு கொண்ட தம்பதியினராக வாழ்ந்து வருகின்றனர். அவர்களது புதல்வர்களாகிய பிரம்மஸ்ரீ நந்தகோபன், பிரம்மஸ்ரீ கோகுலபாலன், பிரம்மஸ்ரீ முரளி தரன் ஆகியோர் தமது துணைவியர் சகிதம் வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்ற காரணத்தால் விழாத்தம்பதியினர் பீமரத சாந்தியை தமது வெளிநாட்டுப் பயணத்தின்போது கொண்டாடி மகிழும் வாய்ப்பினை பெற்றமை இறைவன் திருவருளன்றி வேறில்லை. விழாத்தம்பதியினர் பேரக்குழந்தைகளைக் கண்டு மகிழும் பேறு பெற்றமை அவர்களது வாழ்வில் கிட்டிய மற்று மொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இத்தகைய ஒரு நிறைவான வாழ்க்கைப்பயணத்தில் பீம ரத சாந்தியை நிறைவேற்றி இந்நூலை வெளியிடுவது வரவேற் கக்கூடியதொன்றாகும். பிரம்மஸ்ரீ குமாரசாமி சர்மா திட்டமிடல் உதவிப்பணிப்பாளராக யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த காலத்தி லும் ஓய்வு பெற்ற காலத்திலும் தமது வாழ்வில் சந்தித்த நிகழ் வுகளை நெஞ்சில் நிறைந்தவையாகக் கருதிப் பதிவு செய்யும் வகையில் அவற்றை உடனுக்குடன் கட்டுரை வடிவில் உரு வாக்கி உள்ளூர் நாளேடுகளிலும் தேசிய நாளேடுகளிலும் வெளிவந்தவற்றைத் தொகுத்து தமது அனுபவங்களையும் மனவுணர்வுகளையும் கலாரசனையையும் ஏனையவர்களோடு பகிர்ந்து கொள்ளும் வகையில் இந்நூலினை வெளியி டுவது நல்லதொரு முயற்சியாகும். பல்வேறு நிகழ்ச்சிகளின் அனுபவங்களையும் மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க விட யங்களையும் இலக்கிய வடிவில் வெளிக்கொண்டு வரும் முயற்சி இலக்கிய உலகில் உரிய வரவேற்பைப் பெற்றுள் ளமை குறிப்பிடற்பாலது. தென்னிந்தியாவில் உள்ள இலக்கிய

வல்லுனர்கள் தாம் வாழ்ந்த பிரதேசத்திலும் ஏனைய மாவட்டங் களிலும் உள்ள சிறப்புமிக்க ஆலயங்கள் பற்றியும் வரலாற்றுப் புகழ்மிக்க இடங்கள் பற்றியும் சஞ்சிகைகள் ஊடாக வாசகர் களுக்கு வழங்கி பின்னர் அவற்றை நூல் வடிவில் வெளியிட்டு இலக்கியரசிகர்களது வரவேற்பைப் பெற்றுள்ளனர். இது போன்று பிரம்மஸ்ரீ குமாரசாமிசர்மா அவர்களும் தாம் வாழ்ந்த சூழலில் உள்ள கோயில்கள் தாம் கல்வி கற்ற கல்லூரி பற்றி யும் கல்விமான்கள் பற்றியும் மனங்கவர்ந்த அரச அதிபர்கள் பற்றியும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களது வாழ்வு பற்றி யும் தமது மரியாதைக்குரிய பெரியார்கள் பற்றியும் இசை நிகழ்ச்சிகள் விழாக்கள் மற்றும் பரத நாட்டிய அரங்கேற்றம் ஆகியவைபற்றியும் நாடகங்கள் பற்றியும் உள்ளடங்கலாக ஏறக் குறைய இருபத்து ஐந்து கட்டுரைகள் இந்நூலில் இடம்பெறச் செய்துள்ளார்.

ஆசிரியர் யதார்த்த பூர்வமாக தமது தலைப்புக்கேற்ற விடயங்களை அணுகியுள்ளமை பராட்டிற்குரியது. கட்டுரைகள் பல அளவிற் சிறியவையாயினும் ஆசிரியரது பயனுள்ள அனு பவ வெளிப்பாடாக அமைகின்றமை சிறப்பம்சமாகும். இத்த கைய அனுபவப் பதிவுகள் காலந்தோறும் நினைவுகூரத்தக்க வகையில் அமைவதோடு எமது சமூகத்தில் வாழும் மக்களது சமய, சமூக மற்றும் பண்டுபாடு சார்ந்த விழுமியங்களை எதிர் கால சந்ததியினரும் அறிவதற்கு வழியமைத்துக் கொடுக்கின் றன என்பது குறிப்பிடற்பாலது.

பிரம்மஸ்ரீ குமாரசாமி சர்மா தமது மூத்த சகோதரராகிய பிரம்மஸ்ரீ சந்தான கோபால சர்மாவோடு இணைந்து காட்டுத் துறை ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பெருமானது ஆலயத் திலும் ஸ்ரீ பகவதி அம்பாள் ஆலயத்திலும் இவற்றுடன் வண்ணார்பண்ணை பி.ஏ தம்பி ஒழுங்கையில் உள்ள ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்திலும் அர்ச்சகராகவும் பணிபுரிந்து சமயப் பணியாற்றி வருபவர். அவருக்கு உறுதுணையாக ஸ்ரீமதி

பார்வதி விளங்கிவருகின்றார். இயல்பாகவே அமைதியுடன் திகழும் பிரம்மஶ்ரீ குமாரசர்மா அனைவரோடும் இன்முகத்தோடு பழகும் சுபாவமுள்ளவர். எனவே காலத்திற்கேற்ற இத்தகைய முயற்சியை மேற்கொள்ளும் பண்பு அவரிடம் உள்ளமை மகிழ்ச்சிக்குரியது. பாராட்டிற்குரியது.

பிரம்மஶ்ரீ குமாரசாமி சர்மா ஸ்ரீமதி பார்வதி தம்பதியினர் பீமரதசாந்தியைத் தொடர்ந்து விஜயரத சாந்தி, சதாபிஷேகம் போன்ற வைபங்களையும் தமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் சுற்றத்தவர்களுடன் இனிதே கொண்டாடி மகிழ தம்பதிகள் பல்லாண்டு காலம் நலத்துடனும் இனிதே வாழ ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பெருமானது திருவருள் பொலிக என வாழ்த்துகின்றோம். நூல் வெளியீடு சகல நிலையிலும் சிறக்க எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

கலாநிதி, இலக்கியக் கலாநிதி
**வாழ்நாள் பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
*01-03-2014*



"நீ எதை நினைக்கிறாயோ அதுவே நீ ஆகிறாய். நீ உன்னைப் பலவீனன் என்று நினைத்தால் பலவீனனாக நீ ஆகிவிடுவாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே நீ ஆகிவிடுவாய்"

● சுவாமி விவேகானந்தர்

# வாழ்த்துரை

**பிரம்மஸ்ரீ இ. சந்தான கோபால சர்மா**
**பிரம்மஸ்ரீ ஸ்ரீமதி இ.ஜம்புகேஸ்வர சர்மா- பெக்களூர்**
**பிரம்மஸ்ரீ ஸ்ரீமதி இ. பகவதீஸ்வர சர்மா பரிஸ்**
**ஆகியோர் வழங்கிய வாழ்த்துச் செய்தி**

எமது சகோதரர் பிரம்மஸ்ரீ. இ. குமாரசாமி சர்மா மிகவும் சாந்தமான குணமாக எல்லோருடனும் அன்பாக, பண்பாக பலருக்கும் உதவிகள் புரிபவராக, தன்னடக்கம் உள்ளவராக இனியவராக வாழ்ந்து வருகின்றார். அரச சேவையில் நல்ல பதவி வகித்து சிறப்பாக சேவை ஆற்றி ஓய்வு பெற்றதன் பின்னர் ஆக்கபூர்வமான பல சேவைகளை புரிந்து காட்டுத் துறை விக்கினேஸ்வர பிள்ளையார் மற்றும் ஸ்ரீபகவதி மாரியம் மன், ஞானவைரவர் கோயில் குருத்துவப் பணிகளை சிறப்பா கச் செய்து வெளிநாடுகளில் உள்ள தம் பிள்ளைகளிடம் பல தடவைகள் சென்று வந்து அங்கு தான் கண்டு வந்த அனு பவங்களை காட்சிகள் பலரும் அறியும் வண்ணமாக செய் திகளை பத்திரிகைள் மூலம் வெளிவரச்செய்து சிறப்புடன் வாழ்கின்றார்.

அவருக்கு உறுதுணையாக அவரது வாழ்க்கைத் துணைவி ஸ்ரீமதி பார்வதி (ராணி) அமைந்துள்ளமை அவருக்கு மிகவும் பெருமையினை சேர்க்கிறது. மேலும் அவர்களுக்கு அன்பான அறிவான பிள்ளைகள் வெளிநாடுகளில் தொழில் புரிந்து வருகின்றனர் அவர்களது பீமரதிசாந்தி வைபவம் பல

ரும் பாராட்டி ஆசிகள் கூற மனைவி சகோதரர் நெருங்கிய உறவினர்கள் யாவருடனும் லண்டன் ஈஸ்ட்காம் முருகன் ஆல யத்தில் சிறப்பாக நடைபெற்றது. அவரும் அவரது குடும்பத் தினரும் நீடுழிகாலம் நலமாக வாழக் காட்டுத்துறை விக்கி னேஸ்வர பெருமான் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்கின் றோம்.

## அன்பு

நமது தெய்வீக இயல்பை உணர்த்துவதில் அன்பு உயர்ந்த இடம் வகிக்கிறது.

பொதுவாக, நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் வேண்டிய அளவு அன்பு உள்ளது என்றுதான் எண்ணுகிறோம். ஆனால் நிஜ வாழ்க்கையில் வரம்போது இது எவ்வளவு தவறு என்பதைப் புரிந்துகொள்ளலாம். அன்பு என்ற ஆயுதத்தை மட்டும் சரியாக, சரியான இடத்தில் பிரயோகிக்க முடியுமானால் நமது பிரச்சினைகளுள் மிகப் பலவற்றிற்கு இடமில்லாமல் போயிருக்கும்.

அன்பு என்பது வெறும் உணர்ச்சிப்பெருக்கு அல்ல. நம்மில் பல நிலைகளில் பின்னிக்கிடக்கின்ற ஓர் உணர்வு அது. அன்பு என்பது உடல் நிலையில் இருவருக்கிடையில் உள்ள கவர்ச்சியாக, சற்று உயர்ந்த நிலையில் தாய் - சேய் பாசமாக, இன்னும் உயர்ந்த நிலையில் நட்பாக, மிக உயர்ந்த நிலையில் மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையில் உள்ள பக்தியாக வெளிப்படுகிறது.

பொதுவாக அன்பு என்பதை, இருவரைப் பிணைக்கின்ற ஒரு சங்கிலியாக நாம் எண்ணுகிறொம். அதாவது அன்பு செய்பவர் ஒருவர், அன்பு செய்யப்படுபவர் இன்னொருவர் என்று இருவர் உள்ளனர். ஆனால் இப்படிக் கருதுவதில் இரு பிரச்சினைகள் உள்ளன.

1. அன்பு ஒரு கடமையாகவிடுகிறது அதாவது, அன்பு நமது இயல் பல்ல, கடவுளோ அல்லது வேறு யாரோ ஒருவரோ அதனை நம் மீது திணித் துள்ளனர் எனவே நாம் அன்பு செய்ய வேண்டும். இது அவ்வளவு சிறப்பான கோட்பாடாகத் தெரியவில்லை.

2. பிறரிடம் காட்டுவதுதான் அன்பு, நம்மை நாம் நேசிப்பது சுய நலம் என்றாகி விடுகிறது. எனவே அன்ப என்பது நம்மை நாம் வெறுத்து பிறர் நலம் நாடுகின்ற ஒரு முயற்சி என்றாகிறது. அதாவது, நம்மில் இருந்து நாம் தப்பி ஓடும் முயற்சி என்றாகிவிடுகிறது.

# என் தந்தை எழுதாமறை

வேழமுகன் கோவிலிலே வேளைதவறாது அவன்
தாழ்பணிந்து சேவை செய்தோர் நம்பி அவர்-
வாழ்ந்து நின்று வாழ்வுதனை வாழையடி வாழையாக
தோளினிலே சுமந்த அவர் புதல்வர் இன்-
நால்வரிலே ஒருவர் நல்ல தமிழ் அறிஞர்
நம்மை எல்லாம் ஆளாக்கிய நம் தந்தை அவர்
ஏழுபத்து ஆண்டு அகவைதனை பாடி
இனியவைப்பேன் உங்கள் மன சிந்தை

அன்றொருநாள் எந்தனது சிந்தனையில்
அலையலையாய் எழுந்து வந்த நினைவலைகள்
எம்தந்தை கடந்து வந்த பாதைதனை
இக்கவிதை வரிகளிலே இயம்பிடுவேன்
கல்விதனை பயில்வதற்கு பேராதனை
பல்கலை கழகமதை நாடினரே
கைபிடித்த என்னன்னை பார்வதியை
கண்ணிமைபோல் பேணியவள் காத்தாரே

மூத்தவனாய் உற்றவனாய் நந்தனையும்
முனைவோடு கோகுலபாலனையும்
ஆசையுடன் அடுத்தவனாய் முரளியையும்

அவனியிலே ஆளாக்கி வைத்தாரே
எத்தனையோ வெளிவாய்ப்பு கிடைத்திடினும்
இனிப்பிரியேன் என் குடும்பம் என இருந்து
நித்தமும் தம் புதல்வர் கல்விக்காய்
நிழல் போல அவர்தம்மை தொடர்ந்தாரே
எத்தனையோ குண்டுகள் மத்தியிலும்
எறும்புபோல தான் சேர்ந்த செல்வங்கள்
அத்தனையும் கண்மணிபோல் காத்திட்டு
அதனையும் எம் கல்விக்காய் கொடுத்தாரே
கைபிடித்த மனைவியவள் பெற்றோரை
தன் பெற்றோர் போலவே தன்னுடனே
எத்தனையோ போர்ச்சூழல் இடரினும்
இயல்புடனே அவர்தம்மை காத்தாரே

அப்பப்பா
பெண்பிள்ளை உமக்கில்லை என்றிருந்த
பெரியகுறை இனியில்லை உங்களிற்கு
ஒன்றிற்கு மூன்றாக கண்டு கொண்டீர்
உங்கள் மகள் தாரணியை, வித்தியா, சிந்துவை
கண்ணுக்கு கண்ணான உம் பேத்தி
ஹரிணி பேரர் சஷாங்சித்தாத்தையும் கண்டு கொண்டீர்
இன்று போல் என்றுமே குழந்தை உள்ளம்
இனியும் கொண்டு ஆண்டு நூறு வாழ்ந்திடுவீர்

இங்கனம்

**திரு.கு. நந்தகோபன், ஸ்ரீமதி தாரணி (லண்டன்)**
**திரு.கு. கோகுலபாலன், ஸ்ரீமதி. ஸ்ரீவித்யா (கனடா)**
**திரு.கு. முரளிதரன், ஸ்ரீமதி சிந்துஜா (அவுஸ்திரேலியா)**



PUBLIC LIBRARY




**பிரம்மஸ்ரீ குமாரசாமி சர்மா அவர்களின் மரதசாந்தி விழாவின் போது வழங்கப்பட்டது**

உ

சாந்தம் தவழும் சிரித்த முகம்
அதனிடத்தே
மாந்தர் மயங்கும் முகிழ்ந்த நகை
எஞ்ஞான்றும்
தீந்தமிழை யாங்கோர் மழலையெனவே
பேசும்
காந்தம் உமிழ்ந்திடும் கண்கள் படைத்தவன்
எங்கள் குமார்

அடைந்ததா எழுபது? ஆரிதனை
நம்பிடுவர்
உடை சரியாய் உடுத்தத் தெரியாத நாள் தொட்டே-
நாமறிவோம்
அட! இன்றோ அகவை எழுபதென்றால்
யாரிதனை நம்பிடுவர்
கடந்ததோ வருடங்கள் சற்றிதனைச்
சிந்தை செய்வோம்

எங்கள் குமார்க்குஞ்சு எங்களுக்கு எஞ்ஞான்றும்
இளைஞன் தான்
தங்கமிவன் தண்ணளியும் தயவும்
கொண்டோன்
இங்கிதமாய் எவரையும் எளிதில்
ஆட்கொள்வான்
துங்கமதக்கரியானைக் கடவுளையே கைதொழுவான்
குறைகள் தேரான்
முத்துக்கள் மூன்றென்ன மக்கட் பெருஞ்செல்வம்
அமைந்ததுவே
அத்தன் அரன் மகன் ஆனைமுகவன்
அருட் கொடையால்
வித்தகமாய் இத்தரையில் வாழ்வாங்கு
சிறந்து வாழ்ந்தே
பத்தைப் பெருக்கிடும் ஏழாம் அகவை
அடைந்தனனே

எழுபது போதாது ஆயிரம் பிறையிங்கு
காண வேண்டும்
பேறுபல செல்வங்கள் பெற்றே பெருவாழ்வு
வாழ வேண்டும்
மறுபடியும் நாமெல்லாம் உங்களை
வாழ்த்திடவேண்டும்- ஐயா
தருமப்பயிர் என்றும் தழைத்திட வேண்டும்
இவ்வையகத்தே

சுபம்!

**தி. நடனசபாபதிசர்மா**
**ந. கிரிஜாம்பிகை**
பிரான்ஸ்

# வாழ்த்துரை

பீமரத சாந்தி கண்ட பிரம்மஸ்ரீ இ.குமாரசாமி சர்மா 1941ம் ஆண்டு நவம்பர் 25ல் பிறந்த பிரம்மஸ்ரீ இ. குமாரசாமி சர்மா வண்ணார்பண்ணையில் காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோவில் பிரதம குருவாக விளங்கிய பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள் அவர்களின் புதல்வராவார். இவர் ஆரம்பக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியில் பயின்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியாகி 1971ல் அபிவிருத்தி உத்தியோகத்தராக பதவி பெற்று யாழப்பாணத்தின் பல பிரதேச செயலகங்களில் பணிபுரிந்து பின் திருகோணமலை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் திட்டமிடல் உத்தியோகத்தராக நான்கு வருடங்கள் கடமை புரிந்தார். 1992ம் ஆண்டு உதவித் திட்டமிடல் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று ஊர்காவற்றுறை பிரதேசசெயலகத்தில் பணிபுரியும் போது அங்கு பல அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப் படுத்தி அம்மக்களின் மதிப்பினைப் பெற்றார்.

இவரது பிள்ளைகளான நந்தகோபன், கோகுலபாலன், முரளிதரன் ஆகிய மூவரும் யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியியலாளர்களாக பட்டம் பெற்று இன்று லண்டன், கனடா, அவுஸ்திரேலியா முதலிய நாடுகளில் பொறியியலாளர்களாக சேவையாற்றி வருகின்றனர். இவர்கள் உதவிகளினால் தமது தாய், தந்தையினர் இருவரும் இந்தியாவின் பல புண்ணிய

ஸ்தலங்களான தென் இந்திய ஸ்தலங்கள் காசி, மைசூர், பெங்களூர், குருவாயூர் முதலான ஸ்தலங்களை தரிசிக்கும் வாய்ப்பும் லண்டன், கனடா, பிரான்ஸ் முதலிய நாடுகளுக்குச் செல்லும் சந்தர்ப்பங்களும் கிடைத்தன.

இவர் பேராதனை குறிஞ்சிக் குமரன் எனும் பெயரிலும் பகவதி மாரியம்மன் திருக்கோவில் எனும் பெயரிலும் அருள் மிகு ஸ்ரீஞானவைரவர் திருக்கோவில் வரலாறு எனும் பெயரிலும் நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார். ஸ்ரீஅம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோயில் அருள்மிகு ஞானவைரவர் கோயில் குருவாக பணிபுரிந்து வருவதும் இவர் தொண்டாற்றும் சேவைகளாகும். இவர்களது பீமரத சாந்தி விழா 2011ம் ஆண்டு நவம்பர் மாதம் லண்டனில் உள்ள ஈஸ்ட்காம் முருகன் கோவிலில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பீமரத சாந்தி விழாவினை ஒட்டி அவர் பத்திரிகைகளுக்கு எழுதி வெளிவந்த கட்டுரைகள் "நமது நெஞ்சில் நிறைந்தவை" எனும் சிறப்பு மலராக வெளியிட்டுள்ளார். இந்நூலானது தனது வாழ்வியல் அனுபவங்களினூடாக ஏற்பட்ட அனுபவங்களை பகிர்ந்துகொள்ளும் சாதனமாக அமைந்துள்ளது.

எமது குருநாதர் பேராசிரியர் பிரம்மஸ்ரீ கைலாசநாதக் குருக்களின் குருவாக விளங்கிய பிரம்மஸ்ரீ கி. சீதாராமசாஸ்திரிகள் அவர்களின் மருகராக விளங்கி வைதீகப் பண்புகளைப் பேணி பாதுகாத்து வளர்த்து வருகின்ற பீமரதசாந்தி கண்ட குமாரசாமி சர்மா தம்பதிகள் சதாபிஷேகம் பூர்ணாபிஷேகம் என்பன கண்டு நோயற்ற நல்வாழ்வு வாழ எல்லாம்வல்ல ஸ்ரீ கமலாம்பிகா சமேத கைலாசநாதப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரம்மஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா**
சிவன் கோவில் நல்லூர்
பி.ஏ. சிறப்பு எம்.பி.எல்
சிரேஷ்ட விரிவுரையாளர்
சமஸ்கிருதத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் அவர்களின்

# வாழ்த்துரை



வண்ணார்பண்ணை காட்டுத்துறை விக்னேஸ்வரபிள்ளை யார் கோவில் பிரதம குருவாக விளங்கிய பிரம்மஸ்ரீ இரத்தின சபாபதிக் குருக்கள் பெருமை மிக்க வைதீக பாரம்பரியத்தில் பிறந்தவர். அவருடைய மகன் பிரம்ம ஸ்ரீ இ. குமாரசாமி சர்மா வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகளின் குமாரத்தி சௌபாக்கியவதி ராணியம்மாவை (பார்வதி) திருமணஞ் செய்துகொண்டதன் மூலம் மேலும் பெருமை பெற்றவராகிறார். அவருடன் இணைந்து தாம்பத்ய சிறப்பை அனுபவித்து நன் மக்களுக்கு பெற்றோராகும் பெருமை பெற்றவர்கள்.

இவர்களின் எழுபதாவது ஆண்டு பூர்த்தி பீமரதசாந்தி வைபவம் சமீபத்தில் லண்டன் ஈஸ்ற்ஹாம் முருகன் கோவிலில் பிரம்மஸ்ரீ நாகநாத சிவக் குருக்களால் நடாத்தி வைக்கப்பட்டது. இவர்களது புதல்வர்கள் மூவரும் வெளிநாடுகளில் பெருமை மிக்க உத்யோகம் பெற்று சிறப்பாக வாழ்ந்து வருகிறார்கள். பிரம்மஸ்ரீ குமாரசாமி சர்மா அவர்களும் இளமையில் அரசாங்க உத்தியோகம் பார்த்து ஓய்வுபெற்றபின் சமயப்பணி செய்து வருகிறார். மனமொருமித்த தம்பதிகளாக வாழ்ந்துவரும் இத் தம்பதியினர் தாம்பத்தியத்திற்கு எடுத்துக்காட்டாக இவர் செய்த

பெரும்புண்ணியம் இவருக்கு அறிஞர் இரத்தினசபாபதிக் குருக்கள் தந்தையாராக கிடைத்ததும், பிரம்ம ஸ்ரீ சீதாராம சாஸ்திரிகளின் புதல்வி மனைவியாக கிடைத்ததும் இவர்களது கிரகத்தில் பல வைதீக கிரியைகளை நான் நடாத்தி வைத்திருக்கிறேன். அப்போது அவர்கள் காட்டும் சிரத்தை என்னை மெய் சிலிர்க்க வைத்தது. நான் செய்த பெரும் புண்ணியம் எனக்கு பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் குருவாக அமைந்தது. நான் அவருடைய பிரதம மாணவன் என்ற முறையில் என்னை தன்னுடைய மூத்த சகோதரன் ஸ்தானத்தில் வைத்து போற்றுகிறார் ராணி அக்கா. என் சகதர்மனியிடம் பெருவிருப்பு கொண்ட இத்தம்பதியினரை உள்ளன்போடு போற்றுகிறேன்.

பிரம்மஸ்ரீ குமாரசாமி சர்மா தன்னுடைய பீமரத சாந்தி வைபவத்தை ஞாபகப்படுத்தி வெளியிடும் "நமது நெஞ்சில் நிறைந்தவை" என்னும் நூல் வெளியீட்டு வைபவம் சிறப்பாக நடாத்த ஆசீர்வதித்து தர்மசாஸ்தா அவர்களுக்கு எல்லா பேறுகளையும் கொடுக்க பிரார்த்திக்கிறேன்.

**சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்**
காயத்ரீபீடம் தர்மசாஸ்தா குருகுலம்
அதிபர் இணுவில் சுன்னாகம்.

"உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ, அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக்கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்கும் கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனைப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்துநிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு."

● சுவாமி விவேகானந்தர்



# இயல் 01

- இறைபக்தி
- வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரர் கோயில்
- விநாயகர் வழிபாடு
- அம்மன் வழிபாடு
- நவராத்திரி பண்டிகை
- தீபங்கள் ஏற்றுங்கள் பாவங்கள் போகட்டும்

# வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வர பிள்ளையார் கோயில்

**வரலாறு, வழிபாடு, விசேட பண்டிகைகள் பதிவுகள்**



எங்கும் நீக்கமற நிறைந்து உலகுயிர்களை இயக்கி அருளும் முழுமுதல் ஆதியும் அந்தமுமில்லாத அரும் பெரும் சோதியாம் இறைவனை பேரன்பால் வழிபட்டு நலம் பெறக்கருதி வருகின்ற மக்களது உள்ளத்தை நெகிழ்வித்து ஆன்றோருள்ளத்தில் கோயில் கொண்டருளி விளங்கும் மிகப் பழமை வாய்ந்த ஆலயம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ விக்னேஸ்வர பெருமான் ஆலயமாகும். மனிதசக்திக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியே இறைவன். ஆன்மாக்கள் இறை வனிடத்தில் கூட்டி உய்விக்கும் இடங்களே ஆலயங்கள் பசுவின் உடம்பெங்கும் பரந்திருக்கும் குருதிதானே அதன் மடியிலிருந்து பாலாக பரிணமித்து வருகிறது. அவ்வாறே சர்வியா பகனான இறைவன் ஆலயங்களிலே நாம் ஆராதிக்கும் மூர்த்திகளிடமிருந்தே அருள் சுரந்து தருகிறான். அருள் வழி பாட்டுக்கு ஆலயம் இன்றியமையாதாகின்றது. ஆலயம் என் பது தொழுபவர் நெஞ்சில் மட்டுமல்ல உண்மையாகவே

சமுதாயத்திற்கும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். ஓர் ஊருக்கு உண் மையான அழகையும் ஒளியையும் கொடுப்பன ஆலயங்களே. இவ்வாறு யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடமேற்குப் பகுதியில் காட்டுத்துறை என வழங்கும் இடத்தில் கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீ அம் பலவாண விக்கினேஸ்வர பிள்ளையார் கோயிலானது ஏறக் குறைய ஒன்றரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக எம் முன்னோர்களால் கோயில் அமைத்து தம் குல தெய்வமாக வழிபாடு செய்து வருகின்றனர். சிறிய கொட்டிலில் அமைந்த விநாயகரது திருக்கோவில் படிப்படியாக விரிவடைந்து திருப்பணிகள் பல நிறைவு பெற்று கொடியேற்றம் முதலான மகோற்சவங்கள் மிகவும் சிறப்பாக நிகழும் வண்ணம் துரித வளர்ச்சி அடைந்துள்ளது. ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வர பிள்ளையார் கோயில் திருத்தல வரலாறு எனும் பெயரில் முதல் முறையாக நிகழ்ந்த தேர்திருவிழாவன்று 1988ஆம் ஆண்டு (11-07-1988) பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் என்பவரால் நூல் எழுதி வெளியிடப்பட்டது. அந்நூலில் கோயில் வரலாறு பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வர பிள்ளையார் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள இடம் காட்டுத்துறை என வழங்கப்பட்டது. விநாயகப் பெருமான் மீது ஆழ்ந்த பக்தி கொண்ட முன்னோர்களால் குலதெய்வமாக வைத்து வழிபடும் நோக்கில் எழுந்ததே இவ்வாலயம். வண்ணார்பண்ணை வட மேற்கில் ஓடை ஒழுங்கையில் அமைந்துள்ள இவ்வாலயம் பொன்னிறப் பணிக்கனோடைப் பிள்ளையார் கோயில் என்றும் ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோவில் என்றும், காட்டுத்துறை ஆனந்த விநாயகர் கோவில் என்றும் பற்பல பெயர்களால் அழைக்கப்படுகின் றது. இக் கோவிலின் தொடக்கம் கி.பி 1856ஆம் ஆண்டு என கூறப்படுகின்றது. திரு.மூத்தம்பி சோமநாதர் என்பவரால் கோயில் அமைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இதன் முகாமை

யாளராக திரு.சங்கரப்பிள்ளை சரவணமுத்து என்பவருடைய பெயரும் கூறப்பட்டுள்ளது.

திரு. மூத்தம்பி சோமநாதர் என்பவர் விநாயகப் பெருமான்மீது கொண்ட அளவற்ற பக்தியினால் 1880 ஆம் ஆண்டு பெருந் தொகையான அசைவுள்ள அசைவற்ற ஆதனங்கள் கோயிலுக்கு வழங்கினார் என்பதனை 11067 இலக்க உறுதியின் படி அறிய முடிகின்றது. இக் கோயிலின் வளர்ச்சிக்கென இதன் சுற்றாடலில் சுமார் 24 பரப்பு காணியை தர்ம சாதனம் செய்துள்ளார். தற்பொழுது கோயிலை சுற்றியுள்ள குடியிருப்பாளர்கள் குடியிருக்கின்ற கோயில் ஆதனம் அதில் வசிப்போருக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மேலும் காங்கேசன் துறைவீதியில் 458ம் இலக்கத்தில் உள்ள இக்கோயில் 3 பரப்புக்காணியும் கோயிலுக்குரிய ஆதனமாகும். அத்துடன் ஐயனார் கோயில் வீதியில் ஆலடிச் சந்தியில் உள்ள இரட்டைக்கேணி என வழங்கப்பட்ட பகுதியில் உள்ள ஆதனங்களும் கோயிலின் ஆதனங்களாகும்.

அறங்காவலர்களாக இக் கோயிலினைப் பரிபாலித்தவர்களான நாவற்குழியூர் திரு.சோமலிங்கம் என்பவரும் கொக்குவில் திரு. சின்னையா என்பவரும் கோயில் புனருத்தாரண வேலைகள் செய்துள்ளனர். பின்னர் திரு.சோ. சடாட்சரம் அவர்களும் திரு. சின்னையா அவர்களுமாக கோயில் திருப்பணிக் கைங்கரியங்களை குறிப்பாக ஸ்தூபி ஆலய கட்டிடங்கள் என்பனவற்றை அழகுற அமைத்தனர். கோயிலின் முன் மண்டபம் திரு. சின்னையா அவர்களால் அமைக்கப்பட்டது. இத்தகைய புதுப்பொலிவுடன் இக் கோயிலின் கும்பாபிஷேக வைபவம் 1953 ஆம் ஆண்டு சிறப்பாக நடந்தேறியது.

நாவற்குழியூர் திரு. சோ. சடாச்சரம் சுது மலை திரு. சி. சரவணமுத்து என்பவர்களின் முயற்சியினால் கோவிலில் பல முன்னேற்றகரமான திருப்பணி வேலைகள் நடைபெற்றுள்ளன. புதிதாக வசந்த மண்டபமும் கர்ப்பக்கிரகமும் அமைக்கப்பட்டு விமானமும் கட்டப் பெற்றன. அறங்காவலராக வந்த திரு.சரவண

முத்து அவர்களின் மூத்த புதல்வன் ஸ்ரீனிவாசன் கோயிலின் திருப்பணி வேலைகளையும் கோயில் மகோற்சவங்களையும் சிறப்பாக நிகழ்த்தினார். இவர்களின் முயற்சியினால் புனரா வர்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 24.08.1986 ஆம் ஆண்டு கோப்பாய் பிரம்மஸ்ரீ நீ.சச்சிதானந்தக் குருக்கள் தலைமையில் இனிது நடந்தேறியது.

இவ் ஆலயத்தின் கொடியேற்றம் நிகழ்த்தப்பட்டு தேர்த் திருவிழாவில் விநாயகப் பெருமான் பவனி வரும் காட்சியினைப் பார்க்க வேண்டும் என விருப்பம் கொண்டிருந்தார் திரு.சடாட்சரம். அதனால் அவரின் முயற்சியினால் கட்டுத்தேர் உருவாக்கப்பட்டது. கொடி மரம், யாகசாலை, சண்டேஸ்வரர் சந்நிதானம் ஆகியனவற்றை நிர்மாணிப்பதில் திரு ஸ்ரீநிவாசன் முன்வந்து உருவாக்கினார். திரு.சடாட்சரம் அவர்களின் புதல்வர் திரு. சோமலிங்கக்குமார் என்பவர் தந்தையாரின் திருக்கோவில் பணிகளுக்கு மிகவும் பக்கபலமாக விளங்கினார். இக்கோவிலின் முதற் கும்பாபிஷேகம் ஆனி மாத ரோகிணி நட்சத்திரத்தில் நிகழ்ந்தபடியால் அதனை அந்தமாகக் கொண்டு இக் கோவிலின் கொடியேற்ற தேர், தீர்த்தம் என்பன நடைபெற்று வருகின்றன. இவ்வாலயத்தின் கொடியேற்றம் முதன் முதலாக 03.07.1988 ஆண்டு நிகழ்ந்தது. எம்பெருமான் தேரில் ஆரோகணித்து திருவீதி திருவுலாவரும் தெய்வீக நிகழ்வு 11.07.1988 ஆம் ஆண்டு நிகழப்பெற்றது. மாதம் தோறும் வரும் சதுர்த்தியில் விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் விநாயகர் எழுந்தருளி உள்வீதி வரும் நிகழ்வுகளும் தவறாது நடைபெறுகின்றன.

கோவிலின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்த திரு.ஸ்ரீநிவாசன் அவர்களின் முயற்சியினாலும், கோயில் அடியார்கள் வழங்கிய உதவிகளினாலும் கோயிலில் பல திருப்பணிகள் செய்யப்பட்டு 2001 ஆண்டு அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேக நிகழ்வில் பஞ்சமுகவிநாயகர்

அமைந்தமையும் சிறப்பானதாகும். இக் கோவிலில் சித்திரத் திருத்தேர் ஒன்று செய்ய வேண்டும் என பலரும் விரும்பினர். பிரம்மஸ்ரீ இ.பகவதீஸ்வர சர்மா இக் கோவிலுக்குரிய சித்திரத் திருத்தேரினை தம் செலவில் செய்து கொடுப்பதாக உறுதி அளித்தார். ஆனால் அவர் எவருக்கும் கூறாது சித்திரத் திருத்தேரினை புத்தூரைச் சேர்ந்த திரு. பாலச்சந்திரன் சிற்பா சாரியார் மூலம் மிகவும் அழகாக கோவிலின் அளவுக்கு பல வேலைப்பாடுகளுடன் செய்வித்து வெள்ளோட்ட நிகழ்வு 2009 ஆம் ஆண்டு ஆனி மாதம் மிகவும் சிறப்பான முறை யில் நடைபெற்றது. பஞ்சமுக விநாயகர் இந்த சித்திரத் தேரில் மிகவும் அழகாக வீதிவலம் வரும் காட்சி 2009 ஆம் ஆண்டு உற்சவதினம் நடை பெற்றது. இவ் அரிய காட்சியில் பல்லாயிரம் மக்கள் கூடி மகிழ்ந்தும் மேளவாத்தியங்கள் பல பல கூட்டங்களாக வாசிக்கவும் பஜனைகள் பாடி ஆடி நிகழ்ந்த காட்சிகளும் கண்கொள்ளாக் காட்சியாகும். இவ் ஆலய மகோற்சவ தேர் கொடியேற்ற நிகழ்வுகளில் அன்னதான நிகழ்வும் பஞ்சமுக விநாயகருக்கு நடைபெறும் பஞ்சமுக அர்ச்சனையும் சிறப்பானதாகும். தேர்நிலைய மண்டபத்தினை திரு. சு. சுரேஸ்குமார் என்பவர் திருப்பணி செய்து உதவி புரிந்துள்ளமையும் பாராட்டத்தக்கது.

கோவில் முகாமையாளராக உள்ள திரு.ச. ஸ்ரீனிவாசன், திருமதி. சோமலிங்கசுமார் அவரது மகன் திரு.விசாகன் ஆகி யோர் கோவில் முன் முகப்பு மண்டபத்தினை மிகவும் அழகு டன் வில் வடிவில் அமைக்கவும் மண்டபத்தினை புதிதாக அமைக்கவும் மிகவும் விருப்பம் கொண்டுள்ளனர்.

திரு.ச.ஸ்ரீனிவாசன் அவர்கள் சிறிது சுகவீனம் அடைந்து இருப்பதனால் இம் முயற்சி உடன் இடம்பெறவில்லை. இவர் களது விருப்பம் அடியார்களின் உதவிகளுடனும் நிறைவு பெறவும் முகாமையாளர் மிக விரைவில் சுகம் அடையவும் எல்லாம்வல்ல காட்டுத்துறை விநாயகப் பெருமான் திருவருள் புரிய வேண்டும் என விரும்புகிறோம்.

ஐம்பது வருடங்களாக (1909-1983) காட்டுத்துறை விக்கினேஸ்வர பிள்ளையார் கோவிலின் நித்திய நைமித்தியங்

களை நேரந்தவறாமல் பக்குவமாக நிறைவேற்றி வந்தவர், பிரம்மஸ்ரீ. தி. இரத்தினசபாபதி குருக்கள் அவர்களாவர். தற்சமயம் பிரம்மஸ்ரீ இ. சந்தானகோபால சர்மா 1984 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இக் கோவிலின் அர்ச்சகராக கடமை புரிந்து வருகின்றார். இவருக்கு உதவியாக பிரம்மஸ்ரீ இ. குமாரசாமி சர்மா கடமை ஆற்றி வருகின்றார். இவ் இருவரும் இவ் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற வேண்டும் என்ற இவர்களது தந்தையார் கொண்டிருந்த விருப்பத்தினை நிறைவேற்றியுள் ளனர். அத்துடன் கோவிலின் திருப்பணிகள் உரியவாறு அமைவதற்கு இவ் இருவரும் அடியார்களின் உதவி யைப் பெற்று அவை சிறப்பாக நிறைவு பெறவும் கோவில் மகோற்சவ உற்சவங்கள் சிறப்புற அமையவும் தம்மால் முடிந்த உதவிகளைப் புரிந்து வருகின்றனர். கோவில் திருப்பணி மகோற்சவங்கள் மிகவும் சிறப்பான முறையில் நடைபெறு வதற்கு கோவில் தொண்டர்கள் இளைஞர்கள் செய்யும் பணி மிகவும் மகத்தானவை. இவர்களுக்கு விநாயகப் பெருமான் சகல சௌபாக்கியங்களையும் வழங்கவும், அவர்கள் சீரும் சிறப்பும் பெற்று வாழவும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் திருவருள் புரிய வழிபாடு செய்கின்றோம்.

இக் கோவிலில் மகோற்சவ காலங்களில் ஆரம்ப காலத் தில் மகோற்சவ குருவாக பிரம்ம ஸ்ரீ.நீ. சச்சிதானந்தக் குருக்கள் பணிபுரிந்தார். பின்னர் அவரது மகனான பிரம்மஸ்ரீ. ச. சண் முகராஜேஸ்வரக் குருக்கள் மகோற்சவ குருவாகவும் அதன் பின்னர் சிவஸ்ரீ.கே. நடராஜக் குருக்கள் மகோற்சவ குருவாக மிகவும் பக்தியுடன், சிறப்புடன் ஆசீர்வாதங்கள் கூறி சிறப் புற நடாத்திய பெருமையுடையவர். பின்னராக தற்பொழுது பிரம்மஸ்ரீ க. பாஸ்கரக்குருக்கள் மகோற்சவங்களை இவ் ஆலயத்தில் சிறப்புற நடாத்தி வருவது பாராட்டுக்குரியன. இவ்வாறு வண்ணார்பண்ணையில் கருணைப், பிழம்பாய் நடுநாயகமாக வீற்றிருந்து வரும் விக்கினேஸ் வரப்பெருமான் அடியார்களுக்கு பேரருள் புரிந்து வருகின்றார்.



# விநாயகர் வழிபாடு

விநாயகர் வழிபாடு எமது நாட்டின் சிறப்பான வழி பாடாகும். கீர்த்திமிக்க மூர்த்தி விநாயகர். எமது மக்களின் இணையற்ற வழிபாட்டில் கலந்துவிட்ட தெய்வம் கணபதி. விநாயகர் வழிபாடு மிகவும் எளிமையானது. மண், மஞ்சள், சாணம் என எதில் பிடித்து வைத்தாலும் பரிபூரணமாக அருள் பாலிக்கிறார். எனவே தான் பிடித்து வைத்தால் பிள்ளையார் என்கின்றோம். விநாயகரை வணங்கினால் எமக்கு தெய்வ வடிவம் கிடைக்கும். நினைவு ஆற்றலும் அதிகரிக்கும்.

எல்லா மூல மந்திரங்களிற்கும் ஸ்தோத்திரங்களுக்கும் "ஓம்" எனும் ப்ரணவம் முதலானது. கணபதியின் வடிவமும் ஓங்கார வடிவம். வலப்பக்கம் மோதகம் உள்ள அவருடைய துதிக்கையில் ஆரம்பித்து, அவரது இடது காதில் முடித்தால் "ஓம்" என்ற வடிவத்துடன் முடியும் அவரது திருவுருவம். எனவே அவர் முழுமுதற் கடவுளாக உள்ளார்.

விநாயகரை வழிபடும்போது அவரது மேனி நிறம் முதலிடம் பெறுகின்றது. தினமும் நம் நினைவில் வருபவர்

நிலாவண்ணர்- சசிவர்ணம்- வெண்ணிற ஆடை உடுத்தியவர். 'சுக்லாம்பரதரம்" இடையூறு என்பது பணிபுரியும்போது மட்டும் வருவதல்ல. எப்போதும் நம்முடன் இணைபிரியாத தடை ஒன்று உண்டு. அறியாமை ஆகும். அதன்நிறம் இருளின் நிறம். அறியாமை என்னும் இருள் அகல வேறு நிறம் பயன் படாது. அதனால் அது நிலா வண்ணர் ஆகும். அறியாமை அகன்றதும் செயலில் இறங்குபவனுக்கு ராஜோ குணம், உற்சாகம், பேராளுமையும் அளித்து பெரிதும் உதவுவதால் செந்தூரம் பூசிய விநாயகராகவும் செந்நிற ஆடை அணிந்து உதிக்கின்ற சூரியனின் வண்ணத்தில் அவர் தோன்றுவார். "வக்ர துண்ட" வண்ணமும் இந்த செவ்வண்ணமும் அவரது இயல்பல்ல. உதிக்கின்ற சூரியன் சிவந்தவராகத் தோன்றுவது இளங்காலையில் விழித்தெழுந்த நம் கண்ணில் கூசாதிருப்பதற் காகவே.

நான்கு கைளும்கால்களும், கட்டை, குட்டையாயிருக்குமாம் 'வாமநரூப மஹேஸ் சவர புத்ர" என்கின்றது, மூஷிகவாகன சுலோகம்- யானை உடலுக்கேற்ற பெருவாய், பெருங்கீழுதடு, தொங்குவதால் பெருவாய், பெரும்பாலும் பற்களின் மேல் வரிசையை மறைக்கின்ற மேலுதடு அசைவதில்லை. இறை வனுக்கு மூன்று கண்கள், தந்தையையும் தாயையும் போல் இவரும் மூன்று கண்களுடையவர். உடலுக்கேற்றவாறு இல்லா மல் சிறிய கண்கள்.

விநாயகர் பெரிய கோவிலில் இருப்பார். மலை உச்சியில் இருப்பார். குளக்கரையில் இருப்பார். அத னால் அவரது பெயர் பலதரப்பட்டனவாக அழைக்கப்படுவார். குளக்கரையில் இருந்தால் குளக்கரை விநாயகர், செண்பக மரத்தின் பக்கத்தில் இருந்தால் செண்பக விநாயகர், மருத் மரத்தடியில் இருந்தால் மருதடி விநாயகர், அரச மரத்தடி யில் இருந்தால் அரசடி விநாயகர், உச்சிப்பிள்ளையார், முக் குறுணிப் பிள்ளையார், காட்டுத்துறை விநாயகர் என இடத்

துக்குத் தகுந்தாற்போல அவருக்கு பெயருண்டு. மற்றக் கடவுள்களைத்தேடி நாம் போகவேண்டும். ஆனால் விநாயகர் நம்மைத்தேடி அவரே வருவார். மணலைப் பிடித்து, மஞ்சளைப் பிடித்து சாணத்தினைப் பிடித்து வைத்தால் கூட பிள்ளையார் வந்திடுவார். குழந்தை முதல் பெரியவர்வரை அனைவரையும் கவர்பவர். அவரைப் பார்த்தாலே யாருக்கும் கவலைகள் எல்லாம் போய்விடும்.

விநாயகப் பெருமானை தரிசிக்க விநாயக சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி ஆகிய இரண்டும் சிறந்தவை சங்கடஹர சதுர்த்தி அன்று விநாயகப் பெருமானை தரிசித்தால் சங் கடங்கள் தீரும் எனக் கருதுகின்றனர். விநாயகர் உலக இன்பத்துடன் பேரின்பத்தையும் அளிப்பவர். 32 வகையான கணபதி திருமூர்த்தங்களில் ஒன்று ஸ்ரீ ஹேரம்ப கணபதி, ஐந்து முகங்களுடன் திகழ்வதால், ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் என்ற சிறப்பும் இவருக்கு உண்டு. அடியவர்களுக்கு நன்மை பயக் கும், அனைத்தும் தம்மிடம் உண்டு என்பதை உணர்த்தும் வகையில் அங்குசம், பாசம், தாமரைமலர், நெற்கதிர், உடைந்த கந்தம், ரத்தின கலசம் ஆகியவற்றை ஏந்தியபடி பத்து திருக் கரங்களுடன் தரிசனம் தருகிறார், ஹேரம்ப கணபதி.

உதயன்

"ஆண்டவனைத் தேடி நீங்கள் எங்கே போகிறீர்கள்? துன்பப்படுவர்கள், ஏழைகள், பலவீனர்கள் அவர்கள் எல்லோரும் அத்தனை தெய்வ வடிவங்களே அல்லவா? ஏன் முதலில் இவர்களை ஆராதிக்கக் கூடாது? கங்கைக் கரையில் கிணறு வெட்டப் போவது உண்டா? இந்த ஏழைகளையே உங்கள் கடவுளாகக் கொள்ளுங்கள். அவர்களைப்பற்றிச் சிந்தியுங்கள். அவர்களுக்காக இடைவிடாமல் பிராத்தனை செய்யுங்கள். அப்போது ஆண்டவன் உங்களுக்கு வழிகாட்டுவார்."

சுவாமி விவேகானந்தர்



# அம்மன் வழிபாடு

உள்ளத்தையும் உணர்வையும் நோக்கி உயர்ந்து எழு மாறு செய்வதும் அம்பாளின் நேசம் கொண்டு அவளிடம் உரை யாடுவதும், அவள் தம் மெல்லிய குரலொலியை உற்றுக் கேட்டு உள்ளத்தில் உணர்ந்து ஒழுகுவதுமே வழிபாடு ஆகும். வழிபாடு என்பது இறைவிக்கும் மனிதனுக்கும் இடையே இரு வழிப் பாதை ஒன்றினை ஏற்படுத்துகிறது.

நாம் அன்புடன் நினைத்து துதிக்கும்போது நம்மை இறைவி கவனிக்கின்றாள். நம்மை தமது பாதுகாவலில் ஈர்த்து அமர்த்தி ஏற்றருள்கின்றாள். நமது தாயாகவும் தந்தையாகவும் விளங்கும் இறைவியின்பால் நாம் அன்புத் தொடர்பு கொண்டு தியானித்து உரையாடினால் அவள் நமக்கு இறங்கி ஏற்ற இனிய மறுமொழிகள் தருகின்றாள். நாம் ஏதும் அறியாமலே நம்முள்ளத்தே புகுந்து, நல்லனவும், தீயனவும் பகுத்துக்காட்டி உணர்த்துகின்றாள். வழிபாடு நம் உள்ளத்திற்கு அமைதி யையும் உணர்விற்கு ஆற்றலையும் உடலுக்கு நலத்தையும் விளைவிக்கின்றது.

இறைவியிடம் நம்மை முழுமையாக ஒப்படைத்து அடைக்கலம் புகுதலும் இறைவியின் அருளைப் பெற விரும்பி அவளைப் போற்றித் துதித்தலும், அவள் நமக்குச் செய்து தருகின்ற அளவில்லா உதவிகளுக்கு நன்றி தெரிவித்துப் பணிதலும் நம்முடைய குற்றங்களையும் பாவங்களையும் மன் னித்து பொறுத்தருளுமாறு மனம் கரைந்து உருகி மன்றாடி இரத்தலும் வழிபாடாகும். அவள் தம் திருவுள்ளம் காக்கும் வண்ணம் அறநெறி பிறழாமல் மன மொழி மெய்கள் தூயனவாய் வழிபாடு செய்தல் வேண்டும். வழிபாடு என்பது ஒருவன் தோற்றுவிக்கக்கூடிய மிகமிகச் சிறந்த வன்மை மிக்க ஓர் பேராற்றல் ஆகும். அம்பாளுடைய கருணை நமக்குத் தெரியாது. நமக்கு நல்லது வந்தாலும் கெட்டது வந்தாலும் இரண்டிற்கும் மூலம் அவளுடைய அருள்தான். 'மாத்ரு தேவோ பவ" உபநிடதம் உலகிற்கு எடுத்துரைக்கும் இந்தப் பொன்மொழி 'தாயை தெய்வ மாக வணங்கு" என்று உணர்த்தப்படும் அறிவுரை நம்மை ஈன்றெடுத்த தாயை வணங்கு என்பது மட்டும் பொருளல்ல. அகண்டாகார மான இந்த உலகத்தையும் அதில் வியாபித்து நிற்கும் உயிர்களையும் படைத்துக் காக்கும் "தாயை" வணங்கு என்பதே உட்பொருளாகும். உலக மாதாவான அந்தத் தாயை நாம் உள்ளன்போது வழிபட்டு வணங்கி வந்தால் நம் துயர் துடைத்து, அருள் அளித்து ஆட்கொண்டருளுகின்றாள் அன்னை. ஸ்ரீ தேவியின் தேஜோமயமான எழில் ரூபத்தை ஆத்மார்த்தமாக தியானித்து பொன்னடியை சரணடைந்தால் நம்முடைய மனக்கண்ணாடியில், அந்த மோகனத் திருவுருவை தரிசிக்கலாம்.



" நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை,
பிறருக்கு உதவிபுரிவதும் உலகிற்கு நன்மை
செய்வதும் தான்.



# நவராத்திரி பண்டிகை

தேவியை விஷேடமாக வழிபட்டு நாம் ஈடேறுவதற்காகிய புண்ணிய காலம் நவராத்திரியாகும். புரட்டாதி மாதத்துப் பூர்வ பக்க பிரதமைத் திகதி முதலாகவுள்ள ஒன்பது இரவுகள் நவராத்திரி எனவும், பத்தாம் நாள் விஜயதசமி எனவும் சொல் லப்படும்.

சக்தியின் திருநாமங்கள் பல பெயர் களால் அழைக்கப்படும். உமாதேவி, காமாட்சி, சிவகாமசுந்தரி, மீனாட்சி, விசாலாட்சி, லக்சுமி. சரஸ்வதி, காயத்திரி, சாவித்திரி, துர்க்கை, காளி, புவனேஸ்வரி, வலாம்பிகை, பெரிய நாயகி, மனோன்மணி, பர்வதவர்த்தினி, தையல்நாயகி, இராஜராஜேஸ்வரி, வீரலக்சுமி, விஜயலட்சுமி, தனலட்சுமி முதலான அனந்தத் திருநாமங்களைப் பெற்று ஆத்ம கோடிகளுக்கு அருள் புரிகின்றவள்.

ஒரு மனிதனின் வளர்ச்சிக்கு உடல் வலிமையும், வாழ்க் கைக்குத் தேவையான செல்வமும் அறிவு வளமும் மிகவும் அவ சியம். அதனை வெளிப்படுத்த உடல் வலிமையின் சக்தியாக ஸ்ரீ துர்க்கா தேவியையும், வாழ்க்கைக்குத் தேவையான செல் வத்தை நல்க வல்ல சக்தியாக ஸ்ரீமஹா லக்சுமியையும் அறி

வையும் ஆற்றலையும் தரவல்ல கல்வியின் தேவதையாக ஸ்ரீசரஸ்வதி தேவியையும் நாம் வழிபட்டு அந்த தேவியரின் அருள் பெற்று வலிமை, செல்வம், கல்வி ஆகிய மூன்றினை யும் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட பண்டிகையே நவராத்திரி எனப்படும்



ஒன்பது இராத்திரிகளில் முதல் மூன்று இரவுகள் ஸ்ரீதுர்க்காதேவியையும் அடுத்த மூன்று இரவுகள் ஸ்ரீமகாலட்சுமி தேவியையும் கடைசி மூன்று இரவுகள் ஸ்ரீ சரஸ்வதிதேவி யையும் ஆராதித்து பெறற்கரிய இந்தச் செல்வங்களைப் பெற வழிவகுத்துத் தரும் ஒரு அற்புதமான பண்டிகை தான் நவராத் திரி.

எளிய முறையில் பக்தியோடு ஆராதிக்க வேண்டும் என்பதுதான். நாளாவட்டத்தில் இந்த ஆராதனை ஒரு பண்டிகை யாக மாறி அதற்கு ஒரு சமூக அந்தஸ்தும் பொது வாழ்க் கையின் தொடர்பும் ஏற்பட காரணமாயிற்று.

அவரவர் விருப்பத்துக்கேற்ப தங்கள் கலைத்திறனை வெளிப்படுத்தி, அதனைப் பகிர்ந்துகொள்ள நண்பர்களையும் உறவினர்களையும் தத்தம் வீட்டுக்கு அழைத்து தாங்கள் வைத்திருக்கும் பொம்மைக் கொலுவை பார்க்கும்படி செய்து, உபசரித்து அனுப்புவது நவராத்திரி பண்டிகையின் ஓர் அம்சமாக மாறியது, தனிப்பட்டவர்கள் வீட்டில் நிகழ்ந்து கொண்டிருந்த இந்தப் பண்டிகை பின்னர் சமூக அளவில் மதிப்



கொலு - நவராத்திரி தினம்

புப் பெற்று துர்க்கா பூஜை எனும் பெயர் பெற்றது. பொது இடங்களில் ஆதி பராசக்தியை துர்க்கா, லஷ்சுமி, சரஸ்வதி வடிவில் அமைத்து, அலங்கரித்து, நித்திய ஆராதனை செய்து, பொதுமக்கள் கலந்து கொண்டு பொது பிரார்த்தனையாக கொண்டாடும் விதத்தில் இந்தப் பண்டிகை அமைந்தது.

முன்னர் இந்தப் பண்டிகையில் மக்களின் தெய்வீக ஈடுபாடும், பக்தியும் ஆன்மிக ஒரு மைப்பாடும், எளிமையுமே காணப்பட்டது. சமீப காலத்தில் ஆடம்பர நோக்கங்களும்

விளம்பர நோக்கங்களும் வியாபார நோக்கங்களும் இதில் பிரதிபலிக்க ஆரம்பித்துவிட்டன.

முதல் மூன்று நாட்களும் வெற்றியை வேண்டித் துர்க்கா தேவியையும், அடுத்த மூன்று தினங்களும் செல்வத்தை வேண்டி லக்சுமி தேவியையும், இறுதி மூன்று தினங்களும் கல்வியை வேண்டி சரஸ்வதியையும் வழிபடல் வேண்டும். ஒன்பதாம் நாளிரவு ஆயுத பூஜை எனப்படும். ஒவ்வொருவரும் தமது முயற்சிக்கு ஆதாரமான பொருள்கள் ஆயுத வகைகள், புத்தகங்கள், இரத் தினம், பொன் முதலியவற்றை வைத்து வழிப டுவர், பத்தாம் நாள் விஜயதசமி எனப்படும். அன்று ஏடு தொடக்குதல் முதலான வித்தியாரம்பங்கள் தொடங்கும். மேலும் மகிடாசுடவதம், கன்னி வாழை வெட்டுதல், மானம் பூ எனவும் இந்நாள் கூறப்படும்.

நவராத்திரி நாள்களில் கொலு வைக்கப்படுகின்ற வழக் கம் உண்டு. படைப்புக் கடவுளாகிய பிரம்ம தேவருக்கு நடந்த சகல ஆபத்துக்களையும் போக்கி, முன் படைத்தது போலவே மேலும் படைத்தற் தொழிலை நடத்த அருள் தேவியை நடுவே வைத்து அருட்சக்தியை சுற்றி இந்த உல கப் பொருளையெல்லாம் அழகுபெற வைத்து, உலகில் வாழ அருள் புரிந்த ஆதிசக்தியை வணங்குவதையே இது குறிக்கின்றது.

இந்தப் புண்ணிய தினத்தில் எவரேனும் தேவியை வணங்கத் தவறமாட்டார்கள். ஆலயங்கள், வித்தியாலயங்கள், மடாலயங்கள், வீடுகள் முதல்ாக எங்கும் வழிபாடு நடை பெறும். ஆசிரியர்கள் பலவகை விருத்தங்கள், பாடல்கள், கோலாட்டங்கள் என்பனவற்றை மாணவர்களுக்கு பயிற்றுவிப்பர். பெரியோர் இல்லங்களுக்குச் சென்று அவர்களை மகிழ்வித்து சன்மானம் பெறுவர். எமது நாட்டில் இந்து மக்கள் யாவரும் ஒருமைப்பாட்டை விளக்கும் ஓர் அன்புப் பண்டிகையாக நவ ராத்திரியினைக் கொண்டாடி வருகிறார்கள்.

● உதயன் *20.10.2012*




தீபாவளி பற்றி பல கதைகள் கூறப்பட்டாலும் தீய எண்ணங்கள் தான் நரக(ம்)ன் அவன் குடியிருக்கும் வீடுதான் உடல், மாயாவியான நரகனை (தீய எண்ணங்களை) ஒழித்து தானாக (ஆத்ம ஜோதியாக) திகழ்வதே தீபாவளி என்பதைத் எல்லோரும் ஒப்புக்கொள்வர்.

நரகாசுரன் சம்ஹாரம் பற்றி பெரியோர்களால் கூறப்படும் கதை இது. வராக அவதாரம் எடுத்த பெருமானுக்கும் பூமா தேவிக்கும் மகனாகப் பிறந்தவனே நரகாசுரன். பூமாதேவி தன் மகனுக்காகப் பெருமாளே! என் மகன் மரணமடையக்கூடாது. வரம் தாருங்கள் என்று வேண்டினாள். இறவாத வரத்தை உன் பிள்ளைக்குத் தரக்கூடாது. உன் பிள்ளையான நரகாசுரனை நானே சம்ஹாரம் செய்வேன். அப்போது நீயும் என்பக்கத்தில் இருப்பாய் என்றார் மகாவிஷ்ணு. அந்தப் பூமாதேவியின் அம் சமே சத்தியபாமா. நரகாசுரன் அரிய பெரிய வரங்களைப் பெறுவதற்காக தவம் இருந்தான். அவரைத் துதித்து வணங்கிய நரகாசுரன், சுவாமி! எனக்கு மரணம் என்பதே வரக்கூடாது என வரம் தாருங்கள் என்றான். அவன் ஆசையை உணர்ந்த பிரம்ம தேவர் சிரித்தபடியே நரகா! வந்தவரெல்லாம் தங்கிவிட்டால் இந்த பூமியில் இடமே இருக்காது. ஆகவே வேறு வரம் கேள்

என்றார். என் மரணத்துக்கு என் தாயும் காரணமாக இருக்க வேண்டும் என்ற வரத்தைத் கேட்டான் நரகாசுரன். அவன் விருப்பப்படியே வரத்தைத் தந்த பிரம்மதேவர் அங்கிருந்து மறைந்தார்.

எப்படிப்பட்ட தாயும் தன் பிள்ளையின் மரணத்துக்குத் காரணமாக இருக்கமாட்டாள். ஆகையால் எனக்கு மரணம் என்பதே கிடையாது என்ற எண்ணத்தாலேயே நரகா சுரன் அப்படிப்பட்ட வரத்தைக் கேட்டான் என்றும் கூறப்படு வதுண்டு.

வரம் பல பெற்ற நரகாசுரன் தேவர்களைத் துன்புறுத்தி னான். வருண பகவானின் வெண்குடை, தேவேந்திரனுடைய குண்டலங்கள் மற்ற தேவர்களின் உடைமைகள் என எல்லாவற்றையும் கவர்ந்து கொண்டான். அனைவரும் அல்லல் பட்டார்கள். துயரத்தில் தவித்த தேவேந்திரன் கண்ணனிடம் போய் கிருஷ்ணா! நல்லவர்களெல்லாம் நரகாசுரனால் சொல்ல முடியாத துயரத்தை அனுபவிக்கிறார்கள். நரகாசு ரனை வதைத்து நல்லவர்களைக் காப்பாற்று என வேண்டினார். கண்ணனும் ஒப்புக்கொண்டார். சத்தியபாமா தேரை ஓட்ட கண் ணன் நரகாசுரனின் இருப்பிடமான பராகஜோதிபுரத்தை நோக்கி கிளம்பினார். அங்கு சென்ற கண்ணன் அந்நகருக்குப் பாதுகாப்பாக இருந்த கிரி துர்கம், அக்னி துர்கம், ஜல துர் கம், வாயு துர்கம் ஆகிய கோட்டைகளை அழித்து நகருக்குள் நுழைந்து சங்கை ஊதினார்.

நரகாசுரனின் படைகள் கண்ணனை நாடிப் போரிட்டு மடிந் தன. படைகள் முழுவதும் அழிந்து போனதைக் கேள்வியுற்ற நரகாசுரன் சீறிப்பாய்ந்து தானே போர்களம் புகுந்தான். கோபவசப்பட்ட அவனது ஆயுதங்கள் எல்லாம் கண்ணனின் முன்னால் வலுவிழந்து போயின.

கடைசியாக கண்ணனின் கையில் இருந்து கிளம்பிய சக்கராயுதம் நரக்னை கீழே வீழ்த்தியது. சத்தியபாமா தக்க

தருணத்தில் பராக ஜோதிபுரத்தை நோக்கி தேரை ஓட்டி நரகா சுரனின் மரணத்துக்கு காரணமாக இருந்தாள். அச்சமயத்தில் அங்கு வந்த பூமாதேவி, தெய்வமே! தாங்கள் வராக அவதாரம் எடுத்த போது, நமக்கு பிறந்தவன் இந்த நரகாசுரன். இவனு டைய இந்த மரணகாலத்தில் தாங்கள் இவனுக்கு ஞான உப தேசம் செய்ய வேண்டும் என வேண்டினார். கண்ணனின் கருத்தும் கண்களும் நரகாசுரன் பக்கம் திரும்பி அருள்மழை பொழிந்தன. தெளிவு பெற்ற நரகாசுரன், பரமாத்மா, நான் மறையும் இந்த நாளை எல்லோரும் நல்ல நாளாகக் கொண்டாட வேண்டும். அன்று எண்ணையில் லட்சுமி தேவியும் தண்ணீ ரில் கங்கா தேவியும் வாசம் செய்ய வேண்டும். அனை-வரும் எண்ணெய் தேய்த்துக் குளித்து, புத்தாடை அணிந்து விளங்கேற்றி வைத்து வழிபாடு செய்து நல்லுணர்வைப் பெற வேண்டும். அன்று பூஜிப்பவர்களுக்கு எல்லாவிதமான மங்களங்களையும் நீ அருள வேண்டும் என வேண்டினான். அவன் கேட்ட வரத்தைத் கொடுத்த கண்ணன் அங்கிருந்து திரும்பினார். நரகாசுரன் முத்தியடைந்த அந்நாள் தான் தீபா வளி எனக் கொண்டாடப்படுகிறது. நம்மிடம் உள்ள தீய குணங்களை நீக்கி கண்ணன் நம்மை ஆட்கொள்வதையே நர-காசுர சம்ஹாரம் குறிக்கிறது.

பஞ்சபுதங்களால் ஆன நம் உடலில் உட்புகுந்து நமக்கு அருள் புரிகிறார். கண்ணன் என்பதையே நரகாசுர சம்ஹாரம் உணர்த்துகிறது. பஞ்ச பூதங்களால் ஆன நம் உடம்பில் பக வானைக் குடியேற்ற வேண்டும். பகவான் நம் மனத்திலுள்ள அறியாமையைப் போக்குவான். இதுவே தீபாவளியின் உட் பொருள். இதை உணர்ந்து தீபங்களை ஏற்றுங்கள். பாவங்கள் போகட்டும்.

உதயன்
*26.10.2011*

# இயல் 02

- யாழ் இந்துக் கல்லூரியில் அறுபதுகளில் மறக்கமுடியாத சில கல்விமான்கள்.

- மக்களின் மனங்களைக் கவர்ந்த அரச அதிபர்கள்





# யாழ். இந்துக் கல்லூரியில் அறுபதுகளில் மறக்க முடியாத சில கல்விமான்கள்

யாழ். இந்துக் கல்லூரி பல கல்வி அறிவியலாளர்களை தோற்றுவித்துள்ளது. அந்த வகையில் அறுபதாம் ஆண்டினை அடுத்து காலப் பகுதியில் அதிபர்களினதும் ஆசிரிய கல்விமான் களினதும் பங்கு அளப்பரியது. அவர்கள் ஆற்றிய சேவைகள் இன்றும் எமது நெஞ்சை விட்டகலாது உள்ளன. அதில் சில துளிகள் இன்றும் நிலைத்து நிற்கின்றன.

அதில் அக்கால கட்டத்தில் இந்துக் கல்லூரி அதிபராக இருந்த வி.எம் ஆசைப் பிள்ளையின் தோற்றம் நடை, உடை பாவனை என்பன மனக் கண்முன் தோன்றுகின்றன. இவர் மிகவும் எடுப்பான சிவந்த தோற்றம் உடையவர். லண்டனில் கேம்பிறிட்ஜ் பல் கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். வெண் ணிற சூட் ஆடை அணிந்தவர். மிகவும் கண்ணியமும் கட் டுப்பாடும் கொண்ட அதிபராக விளங்கி ஆசிரியர்களும் மாண வர்களும் நற் பண்புள்ளவர்களாக வெளிவரக் காரணமாக இருந்தார்.

யாழ். இந்துக் கல்லூரியினை உயர்ந்த தரத்தில் கொண்டு வர நன்கு உழைத்தார். சிறந்த நிர்வாகத்திறமையுடன் பணி யாற்றி பல மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று பயில காரணமாக அமைந்தவர் கே.வி.எம் என்றால் எல்லோருக்கும் புரியும் அவர்தான் கே.வி. மயில்வாகனம் அவர் ஆங்கில ஆசி ரியர். மிடுக்கான மீசை வைத்த கோட், சூட் அணிந்தவர். இவரது




வகுப்பில் அவருடன் ஆங்கிலத்தில் தான் பேச வேண்டும். தமிழில் பேசி னால் தண்டனை. அத னால் அதிகம் மாண வர்கள் பேசமாட்டார்கள். இவரிடம் பயின்றவர்கள் நல்ல ஆங்கில அறிவி னைப் பெற்றதுடன் ஆங் கில எழுத்துக்களை நல்ல உறுப்பாக எழுத் துக்களை எழுதப் பழ கிக்கொண்டனர்.

கே.எஸ்.எஸ் சுப்பிரமணியம் என்பவர் போடிங் மாஸ்டர் என அழைக்கப்பட்டார். கல்லூரி விடுதியில் தங்கிய மாண வர்களை ஒழுங்காக நல்ல பழக்கவழக்கமுடையவர்களாக கல் வியைப் பெற முன்னின்று மேற்பார்வை செய்துகொண்டவர். படிப்பிக்கும்பொழுது இரா மாயணம், பாரதம் போன்ற கதை களை மாணவர்கள் விரும்பிக் கேட்கும் வண்ணமாக கூறு வார். ஏ.எஸ். கனகரெத்தினம் என்றவுடன் நம் நினைவிற்கு வருவது வெண்ணிற வேஷ்டி, சால்வை, சேட் அணிந்த தடி ஊன்றி நடக்கும் ஆசிரியர்தான் இவரும் ஆங்கில அறிவினை நல்ல உச்சரிப்புடன் வாசிப்பதற்கு பயிற்றுவித்தார்.



எஸ். சேனாதிராஜா புவியியல் ஆசிரியராக - நல்ல விளக்கங்களுடன் தெளிவாக கல்வி அறிவை ஊட்டியவர் ஆவர்.

தேவன்- யாழ்ப்பாணம் என்றால் இன்றும் எல்லோர் நினைவிலும் தெரிந்தவர். அவர் ஸ்கோடா மகாதேவன் எனப் புகழ் பெற்றவர். அவரது வாகனம் ஸ்கோடா இதனால் மகாதேவன் என்பவர் சிறந்த பேச்சாளர், நடிகர், ஈழத்தமிழ், ஆங்கில அறிவு கொண்டவர். பல நாடகங்களை இக் காலத்தில் அரங்கேற்றியவர். எங்கு எந்த விழா நடன அரங்கு இருந்தாலும் அவர் தான் அறிவிப்பாளராக இருந்தார். தூயதமிழிலும் ஆங்கில உச்சரிப்பிலும் நல்ல தொனியில் அறிவிப்பினை செய்வார்.

எஸ். அருணாசலம் என்பவர் கணித அறிவை சிறப்பாக ஊட்டியவர். தமிழறிவும் மிகுந்தவர். பண்டிதர் செல்லத்துரை ஆசிரியர் தமிழ் மொழியினை சிறப்பாக இலக்கண இலக்கியங்களை ஊட்டியவராவார்.

எஸ். சிவராமலிங்கம் ஆசிரியரிடம் தமிழ் பயின்ற பலர் இன்று பல அறிஞர்களாக உள்ளனர். படிப்பிக்கும்பொழுது

புன்சிரிப்புடன் இராமாயணம், பாரதம் முதலான கதைகளை மிக சுவைபட போதித்தார். இவர் பின்னர் உப அதிபராக இருந்ததுடன் பல பட்டிமன்றங்கள் நடத்தியவராவார்.

வி. மகாதேவா - இவர் சிறந்த புவியியல் ஆசிரியராவார். இவரிடம் புவியியல் கற்றவர்கள் பலர் பல்கலைக்கழகம் சென்று புவியியல் சிறப்புப்பட்டம் பெற்று விரிவுரையாளர்களாக வும் பேராசிரியர்களாகவும் கல்விமான்களாகவும் துணைவேந்தரா கவும் வந்துள்ளனர்.

எஸ். ஸ்ரீனிவாசன் - அரசியல் சமூகக் கல்வியினை சிறப்பாக ஊட்டியவராவார். எஸ். நாராயண ஐயர் என்பவர் சிறப்பாக கணிதக் கல்வியினை மாணவர்கள் தேர்ச்சிபெற உழைத்தவர்.

எஸ். கிருஷ்ணசாமி ஐயர் கணிதத்தினை திறம்படப் போதித்ததுடன் இந்து சமயக் கல்வியினையும் ஊட்டிய பெரியா ராவார். எஸ். இராமகிருஷ்ணன் இவரும் இந்திய நாட்டவர். விஞ்ஞான அறிவு படைத்த மேதகையாளர். இவரிடம் விஞ் ஞானக் கல்வி கற்றோர் நல்ல நிலையில் உள்ளனர். எஸ். பொன்னம்பலம் என்பவரும் விஞ்ஞான அறிவினை மாணவர் களுக்கு கற்பித்தவர். இவர் இந்துக் கல்லூரியின் அதிபரா-கவும் சில காலம் பதவி வகித்தவர். எஸ். சபாரெத்தினம் அதிபராக இருந்து கல்லூரியை வளர்த்தவர். மிகவும் கட்டுப் பாடு உடையவர். அதனால் ஆசிரியர்கள், மாணவர்கள் நல்ல ஒழுக்க சீலர்களகாவும் பண்பாட்டுடனும் இருப்பதற்கு உழைத் தவராவார். என். சபாரெத்தினம் என்பவரும் அதிபராக இருந்த வர். வெண்ணிற வேஷ்டி, சட்டை சால்வை தரித்தவர். ஆங்கி லத்தில் மிகவும் புலமை படைத்தவர்.

பி.எஸ். குமாரசாமி என்பவர் வரலாற்று ஆசிரியரா-கவும் பின்னர் இக்கல்லூரியின் அதிபராகவும் பாடசாலை முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டவர். எஸ். கருணாகரன் என்பவர் சிறந்த விஞ்ஞான ஆசிரியராவார். விஞ்ஞானக்

கல்வியினை மாணவர்கள் சிறப்பாக பயிலக் காரணமானவர். விஞ்ஞான நூல்கள் வெளியிட்டு மாணவர்களின் விஞ்ஞான அறிவினை பெருக்கியவர். எஸ். கணேசமூர்த்தி வரலாற்று ஆசிரியராவார். வரலாற்று அறிவினை மிகவும் கற்றுத்தேர்ந்த அறிஞராவார்.

எஸ். வரதராஜப் பெருமாள் என்பவர் சிறந்த கணித நிபுணத்துவம் பெற்றவர். இவரிடம் கணிதம் பயின்றோர் இன்று பெரும் கணித மேதைகளாக உள்ளனர்.

வெண்மையான வேஷ்டி, சால்வை, சேட் அணிந்து மிகவும் கம்பீர நடையுடன் சுறுசுறுப்பாக கல்லூரி நிர்வாக நடவடிக்கைகளிலும் மாணவர்களின் பரீட்சை நடவடிக்கைகளிலும் தனது முழுக் கவனத்தினை செலுத்தி புவியியல் கணிதம் முதலான பாடநெறிகளை சிறப்பாக போதித்தவர் எஸ். சுப்பையா மாஸ்டர் ஆகும். இவர் சில காலம் உப அதிபராகவும் கடமையாற்றி கல்லூரியின் சிறப்புக்கு காரணமானவர் ஆவார். எஸ். சரவணமுத்து ஆசிரியர் விஞ்ஞான அறிவினை பல காலமாக இக் கல்லூரி மாணவர்களுக்கு கற்பித்து மாணவர்களை நல்நெறிப்படுத்தியவராவார்.

எம். கார்த்திகேசன் என்றால் பொதுவுடமை வாதி என்பது நினைவில் வரும் சிறந்த ஆங்கில ஆசிரியராகவும் நண்பனாகவும் எல்லோருடனும் பழகுவதற்கு இனியவராகவும் அடுக்கு மொழிகளு டன் பல கருத்துகள் பட பேசி எல்லோரையும் மகிழ்விப்பார்.

இவ்வாறாக அக்கால கட்டத்தில் ஆசிரியர்களாக இருந்த சிலரது மறக்க முடியாத சில நினைவுத் துளிகள் அவர்களிடம் கல்வி கற்ற எமக்கு இன்றும் நினைவில் தோன்றுவதனை எண்ணிப் பர்ர்க்க மிகவும் சந்தோஷமாக உள்ளது.

*தினக்குரல் 21.12.2008*
*வீரகேசரி 7.03.2010*

# மக்களின் மனம் கவர்ந்த யாழ். அரச அதிபர்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் எழுபதாம் ஆண்டு முதல் இன்றுவரை அரச அதிபர்களாக இருந்து மக்களின் மனங்களைக் கவர்ந்துள்ள சில அரசாங்க அதிபர்களின் சேவைகள், நடவடிக்கைகள், செயற்பாடுகள் என்பன இன்றும் மக்களின் மனங்களில் நிலைத்து நிற்கின்றன. உண்மையில் அரசாங்க அதிபர்கள், அரச சேவையாளர்கள் யாவரும் மக்களுக்குச் சேவை புரிவதற்கே தம்மை ஈடுபடுத்திக்கொள்கின்றனர். ஆனாலும் சில அரச அதிபர்களின் செயற்பாடுகள் எளிதில் மறக்கமுடியாதனவாகவும் நின்று நிலைப்பனவாகவும் பாராட்டத்தக்கனவாகவும் விளங்குவதைக் காணக்கூடியதாக உள்ளன. எனவே அத்தகையவர்கள் மக்களின் மனங்களைக் கவர்ந்தவர்களாக என்றும் பேசப்படுகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் அரச அதிபர்களாக சேவைகள் பல புரிந்தோர்களின் செயற்பாடுகள், அர்ப்பணிப்புக்கள் பற்றி மக்களின் உள்ளங்களில் நிலைத்து நின்றவை பற்றி அவர்கள் கூறுவன இங்கு கூறப்பட்டுள்ளன. 16.09.1970 முதல் 31.05.1975 வரையான காலப்பகுதியில் கடமைபுரிந்த திரு எம்.ரி. விமல் அமரசேகரா என்பவர் மிகமிக எளிமையானவர். எல்லோருடனும் இனிமையாகப் பழகி மக்களைக் கவர்ந்தார். சிறந்த நிர்வாகம் செய்து பற்பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நிறைவு செய்தார். அதனால் அவரை அவருடன் சேவைகள் ஆற்றிய பலரும் பயன் அடைந்த பொதுமக்களும் பாராட்டுகின்றனர்.

அரசாங்க அதிபரான திரு. திஸ்ஸ தெவேந்திரா என்பவர் 1.06.1975 முதல் 31.12.1975 வரை குறுகிய காலம் சேவை புரிந்தார். 01.01.1976 முதல் 31.12.1977 வரையான காலப்பகுதியில் திரு. எல். விஜயபாலா என்பவர் நிர்வாகத்தினை சீராக அமைத்து கடமை புரிந்தார். 01.01.1978 முதல் 01.05.1978 வரையில் திரு ஏ. ஜோசேப் அரச அதிகாரியாக கடமைகளை மட்டும் செய்தார்.

01.05.1978-01.05.1979 வரையான காலப் பகுதியில் "லயனல் பெர்னான்டோ" அரச அதிபராகச் சிறந்த நிர்வாகத்துடன் எவ்வித பாகுபாடும் காட்டாது. துணிவுடன் யாழ். மக்களுக்கு வேண்டிய சேவைகள் புரிந்துள்ளமை மக்களினால் இன்றும் நினைவுகூரத்தக்கனவாக உள்ளன. மக்களின் மனதில் இடம்பெற்ற காரணத்தினால் அவரது தாயார் தென்னிலங்கையில் காலஞ்சென்றபோது இங்கிருந்து பலர் மரணச் சடங்கில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

01.06.1979-30.06.1979 வரை டி.எம். ஆரியரெத்னா அரச அதிபராக இருந்தார். 30.06.1979 - 13.07.1981 வரை யோகேந்திரா துரைச்சாமி அரசாங்க அதிபராகச் சிறப்பாகச் சேவை புரிந்தார். மக்களுடன் நெருங்கிப் பழகித் தொடர்புகள் கொள்ளாதபோதும் தமது கடமைகளைத் தவறாது சரிவரச் செய்தமையால் பாராட்டப்பட்டார்.

தேவநேசன் நேசையா அரச அதிபரான 14.07.1981-.07.1984 வரையான காலப்பகுதியில் மக்களின் தேவைகளை இனங்கண்டு தனது சக அதிகாரிகளின் ஒத்துழைப்பையும் பெற்று, விரைந்து நடவடிக்கை எடுத்துச் சிறப்பாகச் சேவை புரிந்தமை யாவராலும் மறக்க இயலாதவை. மக்களின் உள்ளங்களில் இடம்பிடித்துப் பெருமையாக இவர் பேசப்படுகிறவர். அதுபோன்று எம் பஞ்சலிங்கம் அரச அதிபராக இருந்த 14.07.1984-01.05.1989 வரையான காலம் மிகவும் நெருக்கடி மிகுந்த காலமாக இருந்தது. அவர் மிகவும்

கண்டிப்புடனும், துணிவுடனும் சிறப்பாகச் சேவையாற்றியமை பாராட்டக்கூடியவை. இந்திய அமைதிப்படை இருந்த நெருக்கடி மிக்க சூழ்நிலை. 1988ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை யாழ். மாவட்டத்தில் பல எதிர்ப்புகளுக்கும் மத்தியில் துணிவுடன் நடத்தி, அதனால் அவருக்கு ஏற்பட்ட துயரங்களும் மறக்க இயலாதவை.

அன்ரன் அல்பிரட் 17.05.1989 - 31.08.1989 வரை மூன்று மாத காலமும் எஸ். தர்மபாலன் 01.09.1989-23.11.1989 வரையான மூன்று மாத காலமும் அரச அதிபர்களாக இருந்தனர்.

க. மாணிக்கவாசகர் 24.11.1989 - 06.03.1990 வரையான காலப்பகுதியிலும் பின்னர் 16.05.1991-17.11.1994 வரையான காலப் பகுதியிலும் அரச அதிபராக இருந்தபோது மிகக் கூரிய சிந்தனையுடன் ஆழ்ந்து யோசித்துச் சிறந்த முறையில் நிர்வாகம் நடத்திப் பொதுமக்களின் அன்பினைப் பெற்றார். பொது மக்களுடனும், தமது சக உத்தியோகத்தர்களுடனும் நன்கு நெருக்கமாகப் பழகிச் சிறப்பாக நிர்வாகம் செய்தவராவார். பற்பல அபிவிருத்தி நடவடிக்கைகள், புனர்வாழ்வுத் திட்டங்கள் என்பன ஏற்படுத்தப்பட்டன. இவரது காலப்பகுதியில் நாட்டில் மிக மிக நெருக்கடி, கொடுமைகள் என்பன நிகழ்ந்துள்ளது. இருந்தபோதும் எல்லாவற்றையும் ஏற்றுச் சகலரையும் மதித்து சிறப்பாகக் கடமைகள் செய்து பாராட்டப்பட்டவர்.

கே. பொன்னம்பலம் 18.11.1994 09.11.1995 வரையிலும் அரச அதிபராக இருந்தார். இவர் பொதுமக்களுடன் நேரடியாக அதிகம் தொடர்புகள் கொள்ளாதபோதிலும் தமது உத்தியோகத்தர்களுடன் கலந்தாலோசித்துப் பொதுமக்களின் தேவைகளை இனங் கண்டு அவற்றை மிக அமைதியாகச் செய்தவர்.

செ. பத்மநாதன் 10.11.1995 - 29.06.1997 வரையும் பின்னர் 07.02.2002 - 31.12.2004 வரையும் அரச அதிபராகச் சேவை புரிந்தவர். சிறந்த நிர்வாகக் கட்டமைப்புடன் சிறப்பான சேவை

ஆற்றியவர். மிகவும் கண்டிப்பானவர். எவரும் அருகில் செல்லப் பயப்படுவார்கள். ஆனால் அவர் மிகமிகக் கட்டுப்பாட்டுடன் சிறந்த முறையில் சிறந்த தரம்மிக்க நிர்வாகம் புரிந்தார். பொதுமக்களின் தேவைகளை இனம்கண்டு தானும் தமது சகல உத்தியோகத்தர்களும் சிறப்பாகச் சேவைபுரியவும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதற்கு இணங்கச் சிறப்பாகச் சேவைகள் புரியத் தன்னாலான சகல உதவிகளையும் புரிந்து மக்களினதும், உத்தியோகத்தர்களினதும் நன்மதிப்பைப் பெற்று நின்று, நிலைத்துநிற்கும் பெரும் புகழினைப் பெற்றவராவார். அபிவிருத்தித் திட்டங்கள், புனரமைப்பு வேலைகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக மேற்கொள்ள நடவ டிக்கைகள் பல செய்தார். அதனால் அவரும் மக்களின் மனங்களைக் கவர்ந்த அரசாங்க அதிபர் வரிசையில் போற்றப்படுகிறார்.

க. சண்முகநாதன் 30.06.1997 - 06.10.2002 வரையான காலப்பகுதியில் அரசாங்க அதிப ராக இருந்தார். சண்முகநாதன், அவருடன் சேவைபுரிந்த அனைவரோடும் அன்பாகப் பழகி அவர்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும் இயன்றளவு புரிந்து, அவர்களை ஊக்குவித்து பொதுமக்களுக்கான சேவை-களைச் செம்மையாக நிறைவேற்ற ஆவன புரிந்தமை சிறப் பானதாகும் அவர், தான் அரச அதிபர் என இனங்காட்டாது சாதாரண உத்தி யோகத்தர் போன்று எல்லோருடனும் நெருக்க மாகப் பேசிப் பழகினார். அவரை யாரும் எப்போதும், எங்கும் கண்டு பேசக்கூடியவராக இருந்தமை சிறப்பானதாகும். அவ ரது காலத்தில் பல அபிவிருத்தித் திட்டச் செயற்பாடுகள், புனரமைப்புப் பணிகள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன.

க. கணேஸ் 01.01.2005 - 30.06.2010 வரையான காலத்தில் சிறப்பான சேவைகள் பல புரிந்தமை அனைவரும் அறிந்தவை. மக்களினால் அவர் பாராட்டப்பட்டு வந்தமை பத்திரிகை வாயி லாகத் தினம் தினம் வெளிவந்தமை குறிப்பிடத்தக்க விடயம்.

# இயல் 02

- யாழ் இந்துக் கல்லூரியில் அறுபதுகளில் மறக்கமுடியாத சில கல்விமான்கள்.
- மக்களின் மனங்களைக் கவர்ந்த அரச அதிபர்கள்




# யாழ். இந்துக் கல்லூரியில் அறுபதுகளில் மறக்க முடியாத சில கல்விமான்கள்

யாழ். இந்துக் கல்லூரி பல கல்வி அறிவியலாளர்களை தோற்றுவித்துள்ளது. அந்த வகையில் அறுபதாம் ஆண்டினை அடுத்து காலப் பகுதியில் அதிபர்களினதும் ஆசிரிய கல்விமான் களினதும் பங்கு அளப்பரியது. அவர்கள் ஆற்றிய சேவைகள் இன்றும் எமது நெஞ்சை விட்டகலாது உள்ளன. அதில் சில துளிகள் இன்றும் நிலைத்து நிற்கின்றன.

அதில் அக்கால கட்டத்தில் இந்துக் கல்லூரி அதிபராக இருந்த வி.எம் ஆசைப் பிள்ளையின் தோற்றம் நடை, உடை பாவனை என்பன மனக் கண்முன் தோன்றுகின்றன. இவர் மிகவும் எடுப்பான சிவந்த தோற்றம் உடையவர். லண்டனில் கேம்பிறிட்ஜ் பல் கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். வெண் ணிற சூட் ஆடை அணிந்தவர். மிகவும் கண்ணியமும் கட் டுப்பாடும் கொண்ட அதிபராக விளங்கி ஆசிரியர்களும் மாண வர்களும் நற் பண்புள்ளவர்களாக வெளிவரக் காரணமாக இருந்தார்.




உலகில் இங்கிலாந்து பல்வேறு வளர்ச்சி வகைகளில் முதன்மை வகிக்கின்றது. அந்நாட்டின் அரசியல் நிலை, பொருளாதார, சமூக அமைப்பு, கலாசாரங்கள் என்பனவற்றை நோக்கும்பொழுது அந்நாடு நன்கு திட்டமிட்ட முறையில் வளர்ச்சியடைந்திருப்பதனைக் காணமுடிகின்றது.

லண்டன் நகரம் உலகிலேயே மிகப் பெரிய பட்டினமாக விளங்குகின்றது. லண்டன் மாநகரம் வளர்ச்சியடைய அதன் அமைவிடமே காரணமாக உள்ளது. அங்கு மிகவும் பிரசித்தி பெற்ற அரசாங்கக் கட்டிடங்கள் மிகப்பெரிய அளவில் தொடர் கட்டிடங்களாக உள்ளன. கட்டிடங்கள் நெருங்கி காணப்படுவதனால் அங்குள்ள வீதிகள் நெருக்கமாகவே உள்ளன. லண்டன் பாலத்திலிருந்து தேம்ஸ் நதியை சார்ந்த பகுதி முழுவதற்கும் லண்டனே துறைமுகப் பட்டினமாக விளங்குகின்றது.

லண்டன் சனநெரிசல் அதிகம் கொண்ட நகரமாகும். வெளிநாடுகளிலிருந்து வரும் உல்லாசப் பயணிகள் லண்டன் நகரினையும் அதன் பாரிய பழமையான கட்டிடங்களையும் வந்து பார்வையிடுவதனை தினமும் காணக்கூடியதாக

உள்ளது. இங்கு சுற்றுலா பயணிகள் எந்நேரமும் சுற்றுலா வாகனங்களில் பயணிப்பதைக் காணமுடிகின்றது. இவர்கள் லண்டன் நகரத்தின் சரித்திர பிரசித்தி பெற்ற கட்டிடங்கள், நிலையங்கள், பொழுதுபோக்கும் மையங்கள் என்பனவற்றைப் பார்வையிடுகின்றனர்.

இங்கு பிரசித்தி பெற்ற இடங்களாக பக்கிங்காம் அரண்மனையும் காவலாளிகள் மாறுமிடமும் பாராளுமன்ற வளாகம், பிக்பென் மணிக்கூட்டுக் கோபுரம், வெஸ்ட் மினிஸ்டர் பலஸ், இலண்டன் கண், இலண்டன் கோபுரம், மடம் ருசாட்ஸ், இலண்டன் பாம், எடின்பேர்க் காசில், கொலிவூட் கவுஸ், இலண்டன் மிருகக்காட்சிச் சாலை, மாட்டின் மியூசியம் ஹைட் பார்க் போன்றவை பிரசித்தி பெற்றவை.

இங்கிலாந்தில் வேறு நாட்டவர்கள் வந்து குடியேறுவதற்கு வசதி அளித்துள்ளதனால், குடியேறியவர்களின் உத வியை பயன்படுத்தி தம் நாட்டினை வளப்படுத்தியுள்ளனர். வெளிநாட்டவர்கள் அங்கு சென்று குடியேறியபொழுதும், அந் நாட்டு கலை கலாசாரங்களை அறிந்து வைத்திருப்பதுடன் மட்டு மல்லாமல் தமது நாட்டு மொழிகளை கலை கலாசாரங்களை காப்பாற்றி வருவதனையும் காணமுடிகின்றது. இங்கிலாந்தில் வெள்ளை இனத்தவருடன் கறுப்பு இனத்தவரும் சேர்ந்து வாழ் கின்றனர். அத்தோடு இந்திய, இலங்கை மக்களும் அதிக அளவில் வாழ்ந்து வருகின்றனர். இங்கிலாந்தில் ஏறத்தாழ 160, 000 தமிழ் மக்கள் வாழ்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் தமது மொழி கலாசாரங்களை பின்பற்றியபோதும், அங்கு குடியேறியுள்ள மக்களின் குழந்தைகளுடைய தமிழ் அறிவு குறைவாகவும் எமது கலை பண்பாட்டினை நன்கு அறிந்திராதவர்களாகவும் இருப்பது வேதனையாகவுள்ளது.

இங்கிலாந்து அரசாங்கம் அங்குள்ள கவுன்சில்கள் மூலம் அந்நாட்டு பிரஜா உரிமை பெற்றவர்களுக்கு வேண்டிய வசதிகள்,

சலுகைகள் என்பனவற்றை ஏற்படுத்திக்கொடுத்து இருப்பதனையும் காணமுடிகின்றது. அங்கு வாழ்பவர்கள் எம் நாட்டுடன் ஒப்பிடும்பொழுது மிகவும் உயர்ந்த வருமானம் பெறக்கூடியவர்களாக இருக்கின்றனர். அங்கு அவர்கள் வாழ்வதற்குரிய சகல அத்தியாவசிய வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. உழைப்பு இல்லாதவர்களுக்கு கவுன்சில்கள் மூலம் பண உதவி, வீட்டு வசதிகள், சுகாதார வசதிகள், கல்வி வசதிகள் யாவும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இங்கு உழைப்பவர்கள் யாவரும் தத்தமது உழைப்பு ஊதியத்தில் ஒரு தொகையினை வரியாக செலுத்துகின்றனர். அவ்வரிகள் மூலம் பல சமூக நலன்புரி சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அதுபோன்று வெளிநாட்டிலிருந்து வந்து படிப்பதற்கும் தொழில் வாய்ப்புகளை பெறுவதற்கும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கின்றனர். ஆனால் அரசியல் தஞ்சம்கோரி அங்கு சென்று குடியிருப்பதில் சில தடைகள் போடப்பட்டுள்ளன. நல்ல கல்வி, தொழில் தகைமைகள் பெற்றவர்கள், வருவாய் உள்ளவர்கள் அங்கு சென்று குடியேறி தமது உழைப்பினை மேற்கொள்வதற்கு பல வசதிகளை அந் நாடு செய்து கொடுக்கின்றது.




இங்கிலாந்தின் போக்குவரத்து சேவைகள் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன. பொதுப்போக்குவரத்து சேவைகளான பேருந்து சேவை, புகையிரத சேவை, விமான சேவை என்பன மிகவும் சிறப்பான சேவையினை ஆற்றிவருகின்றது. அங்கு வாகனங்கள் பெருந்தொகையில் பாவனையில் உள்ளன. அங்கு வாழ்பவர்கள் எல்லோரும் பெருமளவு மோட்டார்

PUBLIC LIBRARY

வாகனங்களை உடையவர்களாக உள்ளனர். ஒரு குடும்பத்தில் குறைந்தது மூன்று வாகனங்களாவது இருக்கும். இவ் வாகனங்களை நிறுத்துவதற்கு தெருவீதிகளும் வீடுகளின் முன்பக்கங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

விமான சேவைகள் மிகவும் உயர்ந்த சேவையினை ஆற்றி வருகின்றது. உலகின் பலபாகங்களிலிருந்தும் லண்டனை நோக்கி வரும் விமானங்கள் கீதுறு விமான நிலையத்தில் இறங்குகின்றன. கீதுறு மிகப்பெரிய சர்வதேச விமான நிலை யமாக உள்ளது.

இவ்விமான நிலையத்தில் ஒவ்வொரு நிமிடமும் விமா னங்கள் வந்து இறங்கி செல்வதனை பார்க்கமுடிகின்றது. இவை தவிர இங்கிலாந்தில் 1. பர்மிங்காம் விமான நிலை யம், கெற்விச் சௌத்தம்டன், லூற்றன், விமான நிலையம், ஸ்ரன்ஸிரிட் போன்ற புகழ்பெற்ற விமான நிலையங்களும் காணப்படுகின்றன.

இங்கிலாந்தின் கடைத்தொகுதிகளில் மிக வும் பிரபல்யம் வாய்ந்தவையாக ரெஸ்கோ, அஸ்ட்டாசன்ஸ்பெரி, ஆகோஸ் என்பன குறிப் பிடத்தக்கவை. இந்நிலையங்களில் எல்லா வகை யான அத்தியாவசிய பொருட்களையும் உணவு வகைகளையும் ஒரே இடத்தில் பெறக்கூடியதாக உள்ளது. இந்நிலையங்களிலும் பெற்றோல் நிலையங்களிலும் நம் நாட்டு இளைஞர்கள் பலர் தொழில் வாய்ப்பு பெற்று இருப்பதனைக் காணமுடிகின்றது. எம் நாட்டிலிருந்து இங்கிலாந்துக்கு புலம்பெயர்ந்துள்ள மக்கள் பல்வேறு இடங்களில் பரந்து காணப்படுகின்றனர். இவற்றுள் கரோ, வட கரோ, தென் கரோ, உள்ளன. ஈஸ்ட்காம், வெம்லி ஈலிங் சுவின்டன் இல்போட் சூரி போன்ற இடங்கள் குறிப்பிடத்தக்கவை.

புலம்பெயர்ந்த மக்கள் அங்கு பல்வேறு துறைகளில் தொழில் புரிகின்றனர். அங்கு தொழில் வாய்ப்பு பெறுவதற்கு அவர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன.



வெஸ்ற்மினிஸ்டர் - லண்டன்

நிரந்தர தொழில் புரிவோர், தற்காலிக தொழில் புரிவோர், ஒப்பந்த அடிப்படையில் தொழில் புரிவோர், தனியார் தொழில்புரிவோர், சுய தொழில் புரிவோர் போன்றவற்றை இதில் குறிப்பிடலாம். மணித்தியால அடிப்படையில் இங்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்றது. 1 மணித்தியாலத்திற்கு குறைந்தது 10 பவுண் வரை ஊதியம் பெறமுடியும். எனி னும் அங்கு தொழில்புரிவோர் கட்டாயமாக வரி செலுத்த வேண்டி யுள்ளது.

கவுன்சில்கள் அம்மக்களுக்கு பல வசதிகளை செய்து கொடுப்பதனையும் காணலாம். சிறுவர்கள் மாணவர்களின் கல்விக்கு அரசாங்கம் பல்வேறு கடன், பண வசதிகளை ஏற்படுத் திக் கொடுக்கின்றது. வங்கிகள் மூலம் கல்வி கற்போருக்கு கடன் வசதிகள் கொடுக்கப்படுகின்றது. அவர்கள் தொழில் வாய்ப்பு பெற்ற பின்னர் அக்கடனை திருப்பி செலுத்த வசதி கள் செய்யப்பட்டுள்ளன.

தொழில் இல்லாதவர்கள் நிதி வசதிகள், வீட்டு வசதி-களை கவுன்சில்கள் மூலமும் பெற முடிகின்றது. வயது

முதிர்ந்தோருக்கு இலவச சேவைகள் முன்னுரிமைகள் என்பன வழங்கப்படுகின்றன. வயது முதிர்ந்தோர் தமது செல்லப்பிராணியாக நாய்களையும் பூனைகளையும் வளர்த்து வருகின்றனர். இப்பிராணிகளை தமது குழந்தைகளாக வேண்டிய கவனம் செலுத்தி பாதுகாத்து வருகின்றனர்.

தமிழ் ஓலைகள் என்னும் தகவல் களஞ்சியம் இலங்கைத் தமிழரின் நலனை கருத்தில் கொண்டு அவர்களுக்கு வேண்டிய பல்வேறு தகவல்களைக் கொடுத்தும் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் ஒரு இலகுவான வழிகாட்டியாகவும் 1994ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை அளப்பரிய சேவையினை ஆற்றி வருகின்றது. இவ்வழிகாட்டி ஆண்டுதோறும் தகவல் நூலாக வெளியிடப்பட்டு வருகின்றது. இவை பிரிட்டனில் வாழும் தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல்,



ஏனைய ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ் மக்களுக்கும் கிடைக்கக்கூடியதாக உள்ளது. அங்கு ஏழைகள் என்று ஒரு-வரையும் காணமுடிய வில்லை. உழைப்பு இல்லாதவர்களுக்கு பெற் றோல் நிலையங்களிலும் நம் நாட்டு இளைஞர் கள் பலர் தொழில்வாய்ப்பு பெற்று இருப்பத னைக் காணமுடிகின்றது.

மாரிகாலமாக டிசெம்பர், ஜனவரி, பெப்ரவரி மாதங் களும் வசந்தகாலமாக மார்ச், ஏப்ரல், மே மாதங்களும் இருக் கின்றன.

பிரிட்டனில் தமிழ் மக்கள் பார்க்கக்கூடிய தொலைக்காட்சி சேவைகளாக தீபம், தரிசனம், உலகத் தமிழர் தொலைக்காட்சியும் சிறப்பாக இயங்கி வருகின்றன. அத்துடன் ஸ்கை (sky) என்னும் பெயரிலும் தொலைக்காட்சி சேவை ஒளி, ஒலி பரப்புகின்றது. இதில் இந்திய தொலைக்காட்சியில் ஒலி, ஒளி பரப்பப்படும் நிகழ்ச்சிகள் மறு ஒலி, ஒளி பரப்புகின்றன. பிரிட்டனில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை 1000 ஒளிபரப்பு சேவைகள் மூலம் 24மணிநேரமும் பார்க்க முடிகின்றது.

இங்கிலாந்தில் புலம்பெயர்ந்த மக்களின் கலை, கலாசார நிகழ்வுகள், அரங்கேற்றங்கள் என்பன தற்போது அடிக்கடி நடப்பவையாக உள்ளன. எமது மக்கள் அங்கு சென்று தமது பாரம்பரிய மொழி, கலாசாரங்களை தொடர்ந்து பாதுகாத்து வருவதனை பார்க்க முடிகின்றது. அங்கு ஆங்கில அறிவு மிக வும் முக்கியமானது.

மேலும் வைபவ உணவு சேவை நிலையங்கள், தமிழ் உண-வகம், தர்ம அமைப்புகள், சமூக சேவை அமைப்புக்கள், தமிழ் சமூக வீட்டு வசதி கழகங்கள், தமிழர் நலன்புரி அமைப்புகள், லண்டன் தமிழ்ச்சங்கம், தமிழ் அகதிகள் நடவடிக்கைக்குழு, பத்திரிகைகள், சஞ்சிகைகள், தமிழ் காடியன் புதினம், சுட ரொளி என்பனவும் சிறப்பாக இயங்கி வருகின்றன.

இந்து மதத்தவர்கள் வழிபட அங்கு பல கோவில்கள் காணப்படுகின்றன. குறிப்பாக லண்டன் முருகன் கோவில், ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம், லண்டன் சிவன் கோவில் பாலாஜி ஸ்ரீ வெங்கடேஸ்வரன் திருப்பதி கோவில்.

இங்கிலாந்தில் 4 பருவங்களையும் மிகவும் தெளிவாக பார்த்து உணரமுடிகின்றது. கோடை காலமாக யூன், ஓகஸ்ட் மாதங்களும், இலையுதிர் காலமாக செப்டெம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்களும் இருக்கின்றன.

புலம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களின் நிலைமைகள் பற்றி ஆராயும்பொழுது அங்குள்ள மக்களில் பெரும்பாலானோர் இலங்கையில் அமைதி நிலை ஏற்பட்டு நிம்மதியான வாழ்வு எப்பொழுது வரும் என்ற நினைவுடன் வாழ்கின்றனர். அங்கு குளிரில் இருந்து வேதனைப்படுவதனால் எமது நாட்டினை விரும்புகின்றனர். எமது நாட்டில் அமைதி ஏற்பட தம்மால் இயன்ற உதவிகள் புரிய ஆவலாக உள்ளனர். அங்கு சென்றுள்ள வயது முதிர்ந்தவர்கள் படும் வேதனைகள் வார்த்தைகளால் வடிக்க முடியாதவை. அவர்களில் பலர் வயோதிப இல்லங்களிலும் தம் பிள்ளைகளுடனும் மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் வாழ்ந்து வருகின்றனர். இதனால் குடும்பங்களிடையே பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. பலர் மனநோய்களால் வாடுகின்றனர். பணம் இருந்தும் ஆறுதல் இல்லாமல் வாழ்வதாக கூறுகின்றனர்.

எனவே இவை யாவும் நீங்கி எம்மக்கள் நிம்மதியாக வாழ எமது நாட்டில் வெகுவிரைவில் சுபீட்சம் கிடைக்க இறைவனை வேண்டி நிற்கின்றனர். அங்கு வாழும் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள்!

*தினக்குரல் 30.11.2008*




இங்கிலாந்து சாதனைகளால் உயர்ந்தோங்கி அரசியல் பொருளாதார மற்றும் அறிவியல் துறைகளில் பல்வகைச் சிறப்புக்களை ஒருங்கே பெற்ற நாடாகத் திகழ்கின்றது. வரலாற்றுச் சிறப்பு, உலகைக் கவர்ந்த ஆங்கில மொழி உணர்ச்சியூட்டும் இலக்கிய மரபு, மேம்மைக்குரிய மக்களாட்சி, அரசியலமைப்பின் அரணாய் விளங்கும் முடியாட்சி சீரான அரசியல் பண்பாடு, பாராளுமன்றத்தின் பிறப்பிடம், புரட்சிகரமான தொழில் வளர்ச்சி, மனிதகுலம் தழைக்க செய்த அறிவியல் மேம்பாடு போன்ற பெருமைகளுக்கெல்லாம் இங்கிலாந்து உறை விடமாகும்.

இங்கிலாந்து வேல்ஸ் ஸ்கொட்லாந்து வட அயர்லாந்து ஆகியவைகளின் கூட்டமைப்பினை ஐக்கிய இராச்சியம் எனக் குறிப்பிடு கின்றனர். தெற்கில் ஆங்கிலக் கால்வாய்,

தோவர் நீர்ப்பிரிவு கிழக்கில் வடகடல், வடக்கில் ஸ்கொட்லாந்து, மேற்கில் ஐரிசுக்கடல், அட்லாண்டிக் பெருங்கடல் ஆகிய வைகளால் இங்கிலாந்து சூழப்பட்டுள்ளது. நாட்டின் மிகப் பெரிய ஆறு தேம்சு ஆகும். மேலும் செர்ன் தைன் வேர் ஆகிய ஆறுகள் நாட்டிற்கு வளம் சேர்க்கின்றன. பல சிறந்த இயற்கைத் துறைமுகங்கள் இங்கு உள்ளன.

இங்கிலாந்தின் தலைநகரான இலண்டன் தேம்ஸ் ஆற் றங்கரையில் அமையப்பெற்று தொழிலுக்கும் வணிகத்திற்கும் ஏற்ற மையமாக உள்ளது. இலண்டன் நகரின் மக்கள் தொகை 6,765,00 என கணிப்பிடப்பட்டுள்ளது. வரலாற்றுப் புகழ்மிக்க கட்டிடங்களும் திருச்சபைகளும் இந்நகரின் அழகிற்கு மெரு கூட்டுகின்றன.

இலண்டன் சனநெருசல் அதிகம் கொண்ட நகரமாகும். வெளிநாட்டிலிருந்து வரும் உல்லாசப் பிரயாணிகள் இலண்டன் நகரினையும் அதன் பாரிய பழமையான கட்டிடங்களையும் வந்து பார்வையிடுவதனை தினமும் பார்க்கக்கூடியதாக உள் ளது. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எந்நேரமும் சுற்றுலா வாகனங்களில் பயணிப்பதனைக் காணலாம். இவர்கள் இலண்டன் நகரின் சரித்திரப் பிரசித்தி பெற்ற கட்டிடங்கள், நிலையங்கள், பொழுதுபோக்கு மையங்கள் என்பவற்றை பார்வையிடுகின்றனர்.


வரலாற்று சிறப்பு மிக்க இடங்களாக இலண்டன் கோபுரம், பாராளுமன்ற வளாகம், வெஸ்ட்மினிஸ்டர் மடாலயம், பிக்பென் மணிக் கூடு, பக்கிங்காம் அரண்மனை, இலண்டன் கண், சாரிங் கிரொஸ், திரிபால்கர் சதுக்கம், புனித பால் திருச்சபை மடம், ருசாட்ஸ், இலண்டன் பாலம், 10 டவுனிங்காலை, எடின்பேர்க் காசில் கொலிவூட் கவுஸ், மிருகக்காட்சி சாலை, மாட்டிங் மியூசியம், கைட்பார்க், இலண்டன் துறைமுகம், அருங்காட்சியகம், ஸ்கொட்லாந்து யார்ட்டு, காவல்துறை நிலையம் என்பன பிரசித்தி பெற்றன.

பருத்தி ஆலைகளுக்குப் புகழ்வாய்ந்த மான்செஸ்டர், லிவர்பூல், கம்பளி, நெசவுக்குப் பெயர்பெற்ற யார்க்சையர், நாட்டிங்காம் நிலக்கரி இரும்புத் தொழிற்சாலைகளுக்கு சிறப்புப் பெற்ற நியூகாசில், லெசஸ்ரர் தொழில் வளமும் துறை முகங்களும் கொண்ட சுந்தர்லாந்து, பால்மத்து, பிளிமத்து, போட்ஸ்மத்து, பிறிஸ்ரல், கால்நடைப் பண்ணைகள், பாற் பொருட்கள், தொழிற்சாலைகள் கிளிஸ்ரர், செஸ்டர், தெர்பி, பல் கலைக்கழக நகரங்களான ஒக்ஸ்போட், கேம்பிரிட்ஸ், லீட்ஸ் ஆகியவை இங்கிலாந்தில் குறிப்பிடத்தக்க நகரங்களாகும்.

இங்கிலாந்தில் புரட்டஸ்ரான்ட் சமயத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பான்மையினராவர். பதினாறாயிரத்திற்கு மேற்பட்ட திருச்சபைகள் உள்ளன. நாற்பது இலட்சத்திற்கு மேலான உரோமானியக் கத்தோலிக்கர்கள் நாட்டில் உள்ளனர். இரண்டு இலட்சத்திற்கு மேலான யூதர்கள் வாழ்கின்றனர். இங்கிலாந்து அனைத்து சமயப் பிரிவினர்களுக்கும் சமமான வழிபாட்டு உரிமைகளை , வழங்குகின்றது. எனவே இங்கிலாந்தில் குடியேறியுள்ள இந்து, இஸ்லாமிய, சீக்கிய. பார்சிய மக்கள் தத்தம் சமய வழபாட்டுரிமைகளைப் பெற்று வாழ்கின்றனர்.

இங்கிலாந்தில் வேறு நாட்டவர்கள் வந்து குடியேறுவதற்கு வசதிகள் அளித்துள்ளதனால் குடியேறியவர்களின் உதவி களை பயன்படுத்தி தமது நாட்டினை நன்கு வளப்படுத்தி வருகின்றன. இங்கிலாந்தில் வெள்ளை இன மக்களுடன் கறுப்பு இன மக்களும் இணைந்து வாழ்கின்றனர். அத்துடன் இலங்கை, இந்திய மக்களும் வாழ்கின்றனர்.

இங்கிலாந்தில் ஏறத்தாழ 1, 60, 000 தமிழ் மக்கள் வாழ்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இங்கு சென்று குடியேறியுள்ள புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழ் மக்கள் தமது மொழி, கலாசாரங்களை பின்பற்றி வருவதுடன் தமது குழந்தைகளும் அதனைக் கடைப்பிடிக்கத்தக்க வகையில் நடந்துவருவது போற்றத்தக்கது. அங்கு எமது தமிழ் மக்கள்



இங்கு நாம் கடைப்பிடிக்கும் கலாசார விழுமியங்களை மிக வும் கவனமாக பக்குவமாக பாதுகாத்து வருவது சிறப்பான அம்சமாகும். அங்குள்ள கோவில்கள் யாவும் மிகவும் தூய்மையான தாக கிரிகைகள் எல்லாவற்றையும் சிறப்பாக நடை முறைப்படுத்தும் வகையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

குழந்தைகள் அந்நாட்டின் மொழியான ஆங்கிலத்தினை வெகு சரளமாக பேசி வருவதுடன் வீட்டில் தம் பெற்றோருடன் தமிழில் பேசி வருவதும் சிறப்பானதாகும்.

இங்கிலாந்து அரசாங்கம் அங்குள்ள கவுன்சில்கள் மூலம் அந்நாட்டு மக்களுக்கு வேண்டிய உதவிகளை, வசதிகளை, சலுகைகளை ஏற்படுத்தி வழங்கி வருகின்றது. அங்கு வாழ்ந்து வருகின்ற மக்கள் யாவரும் மிகவும் உயர்ந்த வருமானம் பெற்று வருகின்றனர். அவர்கள் நிறைவாக வாழ்வதற்கு சலக அத்தியாவசிய வசதிகளும் எற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. கவுன்சில்கள் மூலம் பண உதவிகள், வீட்டு வசதிகள், சுகாதாரம், வைத்திய சேவை, கல்வி வசதி யாவும் அந்நாட்டில் உள்ள

சகல மக்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. உழைப்பவர்கள் யாவரும் தத்தமது உழைப்பு வருமானத்திலிருந்து ஓர் பங்கை கட்டாயமாக வரியாக செலுத்தவேண்டிய கட்டுப்பாடு உள்ளது. அந்த வரிகள்மூலம் கவுன்சில்கள் பல சமூக நலன்புரி சேவைகளை அம்மக்களுக்கு வழங்கிவருகின்றன.

வெளிநாடுகளிலிருந்து அங்கு வந்து படிப்பதற்கும், தொழில் வாய்ப்புக்களை பெறுவதற்கும் வேண்டிய வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளது. நல்ல கல்வி தொழில் தகைமைகள் பெற்றவர்கள் அங்கு சென்று குடியேறி தமது உழைப்பினை மேற்கொள்வதற்கு பல வசதிகளை அந்நாடு செய்கின்றது. அங்கு ஏழைகள் பிச்சைக்காரர்கள் என்று எவரையும் காணமுடியாது. உலகின் பல நாடுகளில் தற்போது காணப்படும் வேலையில்லாப் பிரச்சனை இலண்டனிலும் இருக்கவே செய் கின்றது. அந்நாட்டு இளைஞர்கள் அங்கு அரசாங்கத்திற்கு எதிராக கலவரம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளமை காரணமாக அரசாங்கம் வெளிநாட்டில் இருந்து வருபவர்களின் கல்வி, தொழில் வசதிகளில் சில கட்டுப்பாடுகளை தற்போது விதித்துள்ளது.

அந்த நாட்டில் வசிப்பவர்கள் தமது பாவித்த பொருட்களை வருடாவருடம் கொண்டு சென்று வீசிவிட்டு புதிய பொருட்களை வாங்குவதைப் பார்ப்பது மிகவும் வேடிக்கையாகும்.

இங்கிலாந்தில் வீதிகள் அமைப்பு, போக்குவரத்து சட்ட திட்டங்களுடன் போக்குவரத்து வசதிகளும் சிறப்பானதாக உள்ளன. எனினும் வீதிகளின் வாகன நெரிசல் மிக மோசமானது. பேரூந்து சேவைகள், புகையிரத சேவைகள், விமானச் சேவைகள் என்பன மிகவும் சிறப்பானதாக அமைந்துள்ளன. வாகனங்கள் பெருந்தொகையில் பாவனையில் உள்ளது. ஓர் குடும்பத்தில் குறைந்தது மூன்று வாகனங்களாவது வைத் திருப்பவர் வீட்டில் வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம் கிடையாது. அதனால் அவர்கள் தத்தமது வீட்டின் முன்புறம்

தெருவீதிகளில்தான் நிறுத்திவைத்திருப்பார்கள். வீதிகளில் வாகனங்கள் இரவு நேரத்தில் தொடராக செல்லும்போது அதன் வெளிச்ச ஒளிகள் பார்ப்பதற்கு மிகவும் அழகாக காணப் படும். வீதிகளில் வாகனங்கள் செல்லும்போது போக்குவரத்து கட்டுப்பாட்டு சட்டங்களை மீறினால் கண்காணிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள்.

இங்கிலாந்தில் கடைத்தொகுதிகளில் மிகவும் பிரபல்யம் வாய்ந்தனவாக ரெஸ்கோ, அஸ்டா, சன்பெரி, ஆகோஸ், பெறின்ற் கிரோஸ் வில்கின்சன், ஜக்கியா, முதலான பெரிய மாடிக் கட்டிடங்கள் இயங்கிவருகின்றன. இங்கு மக் கள் பெருமளவு தமது அன்றாட பொருட்களான உணவு, மரக்கறிகள், பழங்கள், பால்பொருட்கள், பாண்வகைகள், குளியல் அறைப் பொருட்கள் என்பவற்றை பெரும் தொகை யில் வாங்குகின்றனர். இலங்கை இந்திய மக்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருட்களை மிகுந்த தரமான-தாக இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படும் சௌத்கோல் இடத்தில் கொள்வனவு செய்கின்றனர். இங்கு இந்திய இலங்கை மக்கள் கடைகள் அமைத்து விற்பனை செய்கின்றமையும் எமது மக்கள் அங்கு சென்று பொருட்களை பெறுவதும் தத்தமது நாட்டில் இருப்பது போல தோற்றம் அளிக்கின்றமையும் சிறப்பானதாகும். இங்கு வாழ்கின்ற வெள்ளை இன மக்கள் பெரும்பாலும் கொழுப்புச்சத்துமிக்க உணவினை அதிகம் உண்பதால் போலும் பெருமளவானோர் பருத்த தோற்றம் உடையவர்களாக காணப்படுகின்றனர்.

புலம்பெயர்ந்து வாழ்கின்ற எமது மக்கள் இங்கு நல்ல வருமானத்தினை பெறுபவர்களாகவும் தொழில் முயற்சியில் சிரத்தையுடன் உழைப்பவர்களாகவும் இருப்பதனால் வள முடன் வாழ்ந்து வருகின்றனர். முதியவர்கள் மட்டும் குளிர் காலங்களில் மிகவும் சிரமப்பட்டு வாழ்கின்றனர். சிலர் குளிர் காலம் வந்தவுடன் கீழைத்தேய நாடுகளான இந்தியா, இலங்கை முதலான தேசங்களுக்குச் சென்று அங்கு சிறிது காலம் இருந்துவிட்டு வருவதையும் காணக்கூடியதாக உள்ளது.

இங்கிலாந்தின் தென்பகுதியில் உள்ள "போட்ஸ்மத்" துறைமுக நகர் உல்லாசப்பயணிகளை மிகவும் கவர்ந்த இட மாகும். சௌதாம்ரன் என்னும் நகரமும் மிகவும் பழமை வாய்ந்த பாரிய கட்டிடங்கள் பல கொண்ட பெரும் நகர மாகும். பல்வேறுபட்ட கடைத்தொகுதிகள் பெருமளவில் கொண்ட பிரமாண்டமான நகராக இது காட்சியளிக்கின்றது. இலண்டன் நகர், பர்மிங்காம் நகர், சௌதாரம்ரன் முத லான நகரங்களில் உள்ள மது விற்பனை நிலையங்களில் ஆண் கள், பெண்கள் யாவரும் ஒன்றாகக்கூடி மது முதலான பானங் களை அருந்தியும் புகைப்பிடித்தும் மிகவும் உற்சாகமாக கூட் டம் கூட்டமாக வாராந்த நாட்களில் இரவினைக் களிப்பது பார்ப்பதற்கு வேடிக்கையாக காணப்படும். அவர்கள் இவ்வா றாக சந்தோசமாக உணவினை உண்பதும் மது முதலான வற்றை உண்டு மகிழ்வதும் அவர்கள் தாம் முழுமையாக வாழப் பிறந்தவர்கள் போல தமது வாழ்க்கையினை போக்குவது சந் தோசமாக உள்ளது.

மருத்துவத்துறை இங்கிலாந்தில் நல்ல தரமானதாக அமைந்துள்ளது. அங்கு எமது நாடு போல விரும்பிய வைத்திய நிலையங்களில் சிகிச்சை பெறமுடியாது. அங்கு குடும்ப வைத் திய நிலையங்கள் உள்ளன. அங்கு சென்றுதான் தம்மை பதிவு செய்து தொடர்ந்து சிகிச்சை பெறமுடியும். ஆதார வைத்திய சாலைகளில் எல்லா நோய்களிற்கும் சிகிச்சை பெறக்கூடியதாக உள்ளது. அந்த நாட்டவர்களுக்கு இலவசமாக சிகிச்சை அளிக் கப்படும். அத்துடன் அங்கு வைத்தியர்கள், தாதிகள் யாவரும் மிகவும் சிரத்தையுடன் கவனமாக பரிசோதனை செய்வார்கள். போடஸ் மத்தில் உள்ள குவீன்ஸ் அலக்சாந்தர் வைத்தியசாலை பழம் பெருமைமிக்கதாய் புகழ்பெற்றதாயும் பல வசதிகளுடன் கூடிய நவீன வைத்திய நிலையமாக விளங்குகின்றது.

இலண்டனில் இந்து மக்கள், பெரும்பாலும் புலம் பெயர்ந்து அங்கு குடியேறியுள்ள இலங்கை மக்கள், தாம் வழிபடுவதற்கென பல ஆலயங்களை அமைத்துள்ளனர். அவர்

கள் அங்கு தவறாது அக்கோயில்களின் விசேட தினங்கள், திரு விழாக்கள் யாவற்றையும் சிறப்பாக கொண்டாடி வழிபட்டு வருவது விஷேசமாகும். கூட்டு வழிபாடுகள், பஜனைகள், அன்னதானங்கள், விஷேட வைபவங்கள் யாவற்றிலும் யாவரும் ஒன்றாகக் கூடி வழிபாடு செய்து வருகின்றனர். அங்குள்ள கோவில்களில் குறிப்பாக கனகதுர்க்கா அம்மன், ஈலிங் லண்டன், இலண்டன் ஸ்ரீமுருகன் கோவில், ஈஸ்ட்காம், இலண்டன் முருகன் கோவில், ஈஸ்ட்காம், இலண்டன் முத்து மாரி அம்மன் ஆலயம், ருற்றிங் பாலாஜி பெர்மிங்காம் கோவில் என்பனவற்றுடன் பல சிறிய ஆலயங்களையும் குறிப் பிடலாம்.

புலம்பெயர்ந்துள்ள தமிழ்மக்கள் பலர் அங்கு சென்று தமது வாழ்க்கையினை அந்த நாட்டின் சூழலுக்கேற்ப மாற்றியமைத்து வாழ்ந்துவருவதனால் தமது பிள்ளைகளையும் அந்த நாட்டின் மொழி பழக்கவழக்கங்கள், கல்வி, கலாசார பண்புகளுக்கேற்ப அமைத்து வாழ்கின்றனர். அங்கு அவர்கள் நல்ல தொழில் வசதிகள், வருமான வாய்ப்புக்கள் பெற்றவர்களாய் ஏனைய வர்களுடன் கூடி சமூக குடும்ப தொடர்புகள் என்பன பல கொண்டுள்ளபடியால் அந்த நாட்டின் குடியுரிமை பெற்றுள் ளமை காரணமாக மீண்டும் தமது சொந்த நாட்டிற்கு திரும்பி வரமுடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அங்கு குளிர் காலங்களில்இருந்து வேதனைப்படும் முதியவர்கள் படும் அல்லல்கள், துன்பங்கள் பரிதாபகரமானது. அத னால் பல முதியவர்கள் தமது பிள்ளைகளைப் பிரிந்து தமது சொந்த நாட்டில் வந்து தனியாக வாழும் நிலையும் உள்ளது. புலம்பெயர்ந்த மக்கள் தமது தாய்நாட்டின்மீது மிகுந்த பாசம் உடையவர்களாக இருப்பதால் அம்மக்கள் படும் துன்ப, வேத னைகள், துயரங்கள் என்பவற்றை கண்டு தம்மால் இயன்ற உதவிகள், ஆதரவுகள் புரிவதுடன் அவர்கள் அனுபவித்த துன்பங்கள் யாவும் நீங்கியிருக்கின்ற மக்களாவது நல்வாழ்வு வாழ வேண்டும் என விரும்புகின்றனர்.

தினக்குரல் 29.07.2012

# கனடாவில் தமிழர்களின் வாழ்வும் வளமும்



செல்வமலை - ரொறன்ரோ

கனடா வட அமெரிக்கா கண்டத்தின் வட பகுதியை முழுமையாக பெற்றுள்ள நாடாகும். இந்நாடு உலகிலேயே இரண் டாம் மிகப்பெரிய நாடாகவும், ஐரோப்பாவைப் போல் மிகப் பெரிய அளவினதாகவும் ஐக்கிய அமெரிக்காவின் அண்டை நாடாகவும் உள்ளது. பலதுறைகளில் முன்னேற்றம் அடைந்த நாடு கனடா குறிப்பாக நிலம், நீர் ஆகாயப்போக்குவரத்து துறைகளில் வியத்தகு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கனடாவின் அரசியல் முறை கூட்டாட்சி அமைப்பு ஆகும்.

ஆங்கிலம், பிரென்ஸ், ஆகிய இரண்டு மொழிகளுமே பிரதானமானது. கனடா ஓர் சிறந்த ஜனநாயக நாடு. கனடா வின் சனத்தொகை தற்போது 35 மில்லியன் ஆகும். இங்கு மூன்று லட்சம் தமிழர்கள் வாழ்வதாக கூறப்படுகின்றது. இங்கு வாழும் மக்கள் சமாதானமாகவும், சந்தோசமாகவும் வாழ்வதற்கு பல வழிகள் உள்ளன. வலுவிழந்தோர் வாழ்க்கைக்கு வலி யற்றோர், வயோதிப நிலையடைந்தோர், தொழிலற்றோர் என

பலருக்கும் அரசு பலவழிகளில் உதவி வருகின்றது. சுய-மாக சில தொழில்கள் செய்து வாழக்கூடிய வழிவகைகளும் நிறையவே உள்ளன. அரச உதவிகளும் கிடைக்கின்றன. பல நாடுகளைச் சேர்ந்த மக்களும் சமாதானமாக ஒற்றுமையாக வாழ்கின்றனர்.

கனடாவில் தமிழர் கால் பதித்த ஆண்டு 1983ஆகும். இக் காலத்திற்கு முன்பாக தொழில் கல்வி சார்ந்து கனடாவில் குடி யேறிய தமிழர் சிலர் இருந்தனர். சிறிய அமைப்பளவிலும் அவர்கள் செயற்பட்டனர். 1983க்குப் பின்னர் மெல்ல மெல்லத் தமிழ் இளைஞர்கள் அகதிகளாக கனடாவை வந்தடைந்தனர். அதிகளவான தமிழரை உள்வாங்கிய நாடுகளில் கனடா முதன்மை பெறுகின்றது. புலம்பெயர் தமிழ்சமூகம் எனும் தோற்றம் கொண்ட எம்மவர்களின் அயராத முயற்சியும் கடின உழைப்புமே தற்போதைய வாழ்புலச் சமூகத்தின் பலமான தளமாக அமைந்தது.

கனடாவின் ரொறன்ரோவை மையமாகக் கொண்டு ஆரம்பகாலத் தமிழர் வாழ்ந்த பகுதி வெலஸ்சி, பார்லிமென் சந்திப்புக்கு அருகாமையில் அமைந்திருக்கும் அடுக்குமாடித் தொடர்களாகும். பல இளைஞர்கள் ஒன்றாக ஒரே வீட்டில் வாழ்ந்தனர். வேலைக்கு ஏற்ப நேரம் குறித்து தாமே சமைத்து உண்டனர். வாடகை உணவு தொலைபேசிக் கட்டணம் போன்ற செலவுகளை மாதந்தோறும் கணக்குப் பார்த்து பகிர்ந்து கொண்டனர்.

1990ம் ஆண்டு காலப்பகுதியில் பல்கிப் பெரு கிய கனடாவாழ் தமிழர் மார்க்கம், மிசி சாகா, பிரம்டன், பிக்கரிங்க என ரொறன்ரோ பெரும்பாகம் எங்கும் குடியேறத் தொடங்கினர். பிரெஞ்சு மொழியை முதன்மையாகக் கொண்ட மொன்றியலிலும், கல்வி, தொழில் நோக்கி நகர்ந்த நகரான ஒட்டவாவிலும் மேற்குக் கரையான வன்கூவர் நகரிலும் குறிப் பிடக்கூடிய தொகையில் பலர் வாழ்ந்துவருகின்றனர். அண்

மைக்காலமாக தொழில்வாய்ப்புக்கள் கருதி அல்பேட்டா மாகாணத்திலும் சில ஆயிரம் தமிழர் குடியேறியுள்ளனர்.

கனடா வந்தவர்களில் மருத்துவர், பொறியியலாளர் போன்ற துறைசார் கல்விமான்களும் இருந்தனர். பலர் எரிபொருள் நிலையத்திலும், உணவகங்களிலும் தொழிற்சாலைத் தொழிலாளர்களாகவும் தொடங்கியிருந்தனர். கனடா ஆங்கிலச் சூழலைக் கொண்ட நாடு என்பதால் குடியேறிய தமிழர் தொழில் வாய்ப்புக்களில் வேகமாக முன்னேறினர். கடின உழைப்பு, வேகமாக மொழிப்பயிற்சி, தாயகக் கல்விப் பின்னணி என்பன எமது நாட்டு தமிழ் இளைஞர்களை உயர்த்தியுள்ளன. குறுகிய காலத்தில் பலர் தொழில்சார் துறைகளில் முன்னிலை பெற்றனர்.

நூற்றிற்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் தமிழரால் நடாத்தப்படுகின்றன. நாடெங்கும் நூற்றுக்கணக்கான மேல்நாட்டு உணவகங்களைத் தமிழர் நடாத்துகின்றனர். ஒன்ராரியோ மாகாணத்தின் விற்பனைத் துறையிலும் தமிழர் ஆற்றிவரும் பங்கு வியப்புக்குரியது. தமிழரால் தமிழருக்கென நடாத்தப்படுகின்ற வணிகத் துறையின் வளர்ச்சி பெரும் ஆச்சரியத்துக்குரியது. 4000 வணிக நிறுவனங்கள் தமிழரை முதன்மைப்படுத்தி நடாத்தப்படுகின்றன. தமிழர் பெருமளவு குடியேறிய இடமான ஸ்காபரோவின் பல புதிய வணிக நிறுவனங்கள் திறக்கப்பட்டுள்ளன. வானொலி ஒலிபரப்பு சேவைகள், தொலைக்காட்சி சேவைகள் என்பன ஸ்காபரோவில் தமிழில் நடாத்தப்படுவது பாராட்டிற்குரியது. ரொரன்ரோ பகுதியில் வீடுகள் விற்பனையைத் தீர்மானிக்கும் சக்தியாக தமிழர் திகழ்கின்றனர்.

ரொரன்ரோ பகுதியில் தமிழ் மாணவர் இல்லாத பாடசாலைகளே இல்லை எனலாம். கனடாவின் முதன்மையான பல்கலைக்கழகங்கள் யாவற்றிலும் தமிழ் மாணவர் பயில்கின்றனர். எமது மொழி, மதம், உணவு, உடைப் பழக்கவழக்கங்கள்,

கலை, கலாசார, இலக்கியங்கள் போன்ற தனித்துவம்மிக்க பல்வேறு பண்பாட்டு அம்சங்களைத் தங்கு தடையின்றிப் பேணுவதற்கு கனடாவின் பன்முகப் பண்பாட்டுக் கொள்கை வழிவகுத்துக்கொடுக்கின்றது.

எமக்கு விருப்பமான உடைகளை அணிந்து செல்வதற்கு எதுவித தடையும் கிடையாது. தமது விருப்புக் கலை இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுவதற்கும், விழாக்களில் பங்குகொள்வதற்கும் பூரண சுதந்திரம் உள்ளது. பல்வேறு கலைத் துறைகளிலும் தேர்ச்சியும் பயிற்சியும் திறனும் மிக்க கலைஞர்கள் பலரும் தத்தமது துறைசார் கலைகளை இளம் தலைமுறையினருக்கும், ஏனையோருக்கும் பயிற்றுவிக்கவும் அத்னைத் தமது தொழிலாகக் கொண்டு பொருளீட்டவும் வாய்ப்பு வசதிகள் நிறைய உள்ளன. இதன் விளைவாக ஏராளமான தனியார் நடனப்பள்ளிகளும் இசைப் பயிற்சி நிலையங்களும் பலராலும் நிறுவப்பட்டு, அதன்மூலம் தாமும் முன்னேறி பிறரையும் முன்னேற்றி வருகின்றனர். ஈழத்தமிழ்ச் சமூகத்தவரின் கல்வி, பொருளாதார, சமூக பண்பாட்டு, கலை இலக்கிய அடிப்படையிலான நிலை இப்போது கணிசமான அளவு உயர்ந்து வருகின்றது. இன்று கனடாவில் ஈழத் தமிழ் சமூகம் புத்துயிர்ப்புடன் கிளர்ந்தெழுந்து முன்னேறி வரும் ஒரு தனிக் குழுமமாக விளங்குகின்றது. கனடிய நாட்டில் வசதி வாய்ப்புக்களையும், வளங்களையும் சரிவரப் பயன்படுத்தும் சாதுரியம் மிக்க சமூகமாக விளங்குகின்றது.

பல்லின மக்கள் வாழும் கனடாவில் ஒவ்வொரு இனத்தவரும் தத்தம் கலாசாரத்தைப் பேணி செயற்பட்டு வரலாயினர். இவ்வகையில் தமிழர் தம் கலை இலக்கியங்களை பேணவும், மற்றும் அரசியல், சமூகம் என்பன பற்றி எழுதவும் தமிழ் பத்திரிகைகள் சஞ்சிகைகள் முதலான ஊடகங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

கனடிய நாட்டில் ரொரன்ரோ பெரும் பாகம் மொன்றியல் மற்றும் கியூபெக் நகரங்கள் போன்ற இடங்களில் பெருமள வில் தமிழ் மக்கள் குடியேறி வாழ்கின்றார்கள். புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் தங்களுக்குள் சிறிய திட்டங்களை வகுத்துக்கொண்டு படிப்படியாக படிமுறை வளர்ச்சி கண்டு பல்வேறு சமூக சமய அமைப்புக்கள் உதயமாகி நிறைய தமிழ் மக்களின் தேவைகளுக்கு உதவியுள்ளன.

நிரந்தர வதிவுரிமை பெற்றவர்கள் கனடியக் குடியுரிமை பெற்றவர்களாக பெருமளவில் மாறிக்கொண்டனர். குடும்ப இணைப்பு மூலம் அவர்களது குடும்ப அங்கத்தவர்களை கனடா வந்து அவர்களும் மெதுவாக கனடிய பிரஜைகளாக மாற ஆரம்பித்தார்கள். ஸ்பொன்சர் முறையில் ஏராளமானோ ரும் ஏஜன்டுகள் மூலம் இன்னும் பிரஜைகளாயினர். சுருக்கமா கக் கூறின் தமிழர் எண்ணிக்கை 1987-2009ம் காலப்பகுதியில் கனடாவில் மிக வேகமாக அதிகரித்தது. கனடாவில் ஆங்கிலம், பிரெஞ், அடுத்தபடியாக மக்களால் அதிகம் பேசப்படும் 25 மொழிகளுள் தமிழ் இடம்பெறுகின்றது. தமிழ்மொழி பேசு வோரின் எண்ணிக்கை 21 சத வீதத்தால் அதிகரித்துள்ளது. தமிழ்மொழியை பேணிவரும் மக்கள் குழுவில் பஞ்சாபியார் களுக்கு அடுத்து தமிழர்கள் இரண்டாவது இடத்தில் உள்ளனர். ரொறன்ரோ மாநகரத்தில் தமிழ் மக்கள் தொகை 5:7 அதாவது 5வது இடம் மொன்றியல் 12வது இடம்.

கல்வி, கலை, செல்வம், பாதுகாப்பு என பற்பல கார ணங்களுக்காக கனடா வந்து ரொரன்ரோ நகரில் நிலைத்துவிட்ட குடும்பங்கள் தாயகத்தின் அருங்கலைச் செல்வங்கள் இப் பகுதி எங்கும் உருவாக்கியும், போற்றிப் பாதுகாத்தும் மகிழ் கின்றார்கள். அவற்றுள் முக்கியத்துவம் மிகுந்தவை. தமிழர்களின் பண்பாட்டுத் தூண்களாய்த் திகழும் ஆலயங்களா கும். சமூக ஒன்றுகூடலைப் பொறுத்தவரை கோயில்கள் மிகப் பெரும் தொண்டாற்றின. ஆரம்பத்தில் மொன்றியலில் வட

இந்தியர்கள் நடாத்தி வந்த சக்தி கோயில்கள்தான் அனைத்து ஈழத்தமிழ் இந்துக்கள் கூடும் இடமாக அமைந்திருந்தது. மொன்றியலில் ஸ்ரீ சுவாமிநாராயணன் மந்தீர் எனும் பெயருடன் பளிங்குக் கல்லால் மிகப் பிராமாண்டமாக அமைந்துள்ள ஆலயம் அனைவரையும் திகைக்கவைக்கின்றது.

ரொறன்ரோவில் 1984ம் ஆண்டு செல்வமலையில் (றிச்மன்ட் கில்) முதலாவது கனடாவின் இந்துக்கோவில் அமைந்துள்ளது. இங்கு ஒவ்வொரு வருடமும் பிள்ளையார், முருகன், சிவபெருமான், பெருமாள் என நான்கு தடவைகள் தேர் திருவிழாக்கள் பெருவிழாவாக கொண்டாடப்படுகின்றன. செல்வமலை விநாயகர் கோவில், கனடா கந்தசுவாமி கோவில், துர்க்கேஸ்வரம் துர்க்கை அம்மன் கோவில், கனடா ஸ்ரீ ஐயப்பன் கோவில் ஸ்ரீவர சித்தி விநாயகர் கோவில், முத்துவிநாயகர் கோவில் ஸ்ரீசந்திர மௌலீஸ்வரர் கோவில், சிவா விஷ்ணு ஆலயம் என பலபல கோவில்கள் இங்கு அமைந்துள்ளன.

இங்குள்ள ஆலயங்களில் பக்தர்களுக்கு பிரசாத வகைகள், தாராளமாக கிடைக்கின்றன. இவ் ஆலயங்களில் இசை, நடனம், சமயம், கலை, கலாசாரம் என்பன நடாத்தப்படுவதன் மூலம் அவை யாவும் நன்கு வளர்ச்சி பெற காரணமாக அமைகின்றன. இக்கலைகள் எம்மைவிட்டு அகலாமல் பாது காக்கப்படுகின்றன. இவ்வாறாக கனடாவில் தமிழ் சமூகத்தவரின் மொழி, கல்வி, பொருளாதார, சமூக பண்பாட்டு, கலை, கலாசார இலக்கிய பழக்கவழக்கங்கள் போன்ற அனைத்து அம்சங்களும் தனித்துவம் மிக்கனவாக கடைப்பிடித்து வருவது எமக்கு மிகவும் மகிழ்ச்சி ஆக அமைந்துள்ளது.

நமது முரசொலி 05.12.2013



# வெளிநாடுகளில் உள்ள எம் உறவுகள்

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எமது உற வினர்கள் எமது பிள்ளைகள் ஆகியோருடன் சில காலம் சென்று தங்கி நின்ற அவர்களது வாழ்க்கை அனுபவங்களை அறியும் சந்தர்ப்பங்கள் பல கிடைத்தன. அதனால் அங்குள்ள எமது புலம்பெயர் மக்கள் நிலைகள் வாழ்க்கை முறைகள், சூழ்நிலைகள் அத்தேசத்தின் தன்மைகள் பற்றி கட்டுரைகள் எழுதியுள்ளேன். இதில் எம் உறவுகள், பிள்ளைகள் அந்த நாடுகளில் அதன் சூழ்நிலைக்கு ஏற்ப தமது வாழ்வியலை அமைத்து தொழில்கள் புரிந்து வாழ்வது பற்றியும் அந்த நாட்டு மக்களுடன் இணைந்து தமது கலை, கலாச்சாரங்களை கடைப்பிடித்து வருவதனையும் அறியும் சந்தர்ப்பம் கிடைத்தன. அவைபற்றி சில செய்திகளை எம் இன மக்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன்.

நாம் சென்ற நாடுகளான லண்டன், பிரான்ஸ், கனடா என் பன மிகவும் குளிரான தேசங்களாகும். அங்கு சென்றுள்ள எம்

உறவுகள் பலவித கஸ்டங்கள் மத்தியில் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நம் வாழ்க்கையினை அமைத்து வாழ்கின்றார்கள். லண்டன் ஓரளவு குளிரினை தாங்கிக்கொண்டு வாழமுடியும். கனடா, பிரான்ஸ் என்பன மிகவும் குளிர் அதிகம் கொண்ட நாடுகளாகும். இங்கு அரசாங்கம் குடிபெயர்ந்து அங்கு வாழ்ந்துவரும் மக்களுக்கு அதிக சலுகைகள், தொழில்வாய்ப்புகள், கல்வி வசதிகள், சுகாதார வசதிகள், வீட்டு வசதிகள், போக்குவரத்து வசதிகள் போன்ற இன்னோரன்ன பலவித உதவிகளையும் புரிவது சிறப்பானதாகும்.

இந்த நாடுகிளல் எமது நாட்டிலிருந்து புலம்பெயர்ந்த இளைஞர்கள் அங்கு கல்வி கற்று உயர் கல்வி கற்று பல கலைகளையும் பயின்று நல்ல தொழில்களில் முன்னிலை வகிப்பது சிறப்பானதாகும். இந்த வகையில் எம் புதல்வன் திரு. நந்தகோபன், லண்டனில் உயர்கல்வி பயின்று இலத்திரனியல் பொறியியலாளராக உயர்நிலையில் சேவைபுரிவது எமக்கு மிகவும் பெருமையாக உள்ளது. அத்துடன் அவரது மனைவி தாரணி அவர்கள் போட்ஸ் மவுத்தில் உள்ள குவின்ஸ் அலக்சாந்தர் வைத்தியசாலையில் டாக்டராக சேவை புரிவதும் எமக்கு பெருமை அளிப்பனவாகும். இவர்கள் 2007 முதல் பேசிங்ஸ்ரொக்கில் வாழ்ந்தும் 2010 முதல் போட்ஸ்மவுத்தில் கம்ப்சயரில் வீடு வாங்கி சிறப்பாக வாழ்ந்து வருவதும் பெருமைதருவன.

நாங்கள் 2007ம் ஆண்டு, 2011ம் ஆண்டு, 2013ம் ஆண்டு என லண்டன் சென்று அவர்களுடன் வாழும் சந்தர்ப்பம் கிடைத்தன. அதனால் லண்டன் நகரின் பிரதான சுற்றுலா மையங்களை காணும் வாய்ப்புகள் கிடைத்தன. லண்டனில் பாராளுமன்ற வளாகம் வெஸ்மினிஸ்டர் மடாலயம், பக்கிங் காம் அரண்மனை, லண்டன் கண், லண்டன் பாலம், மியூசியம் முதலான பிரசித்தி பெற்ற இடங்களை பார்க்கும் சந்தர்ப்பமும் போட்ஸ்மவுத்துறை, சௌதாம்ரன், பர்மிங்காம்

முதலான இடங்களை பார்க்கவும் முடிந்தன. எம் உறவுகள் பலர் லண்டனில் நல்ல தொழில்கள் பார்த்து வருவதும் அவர் களில் பலர் ஓய்வுபெற்று தமது பிள்ளைகளுடன் வாழ்ந்து வருவதும் காணக்கூடியனவாக உள்ளன. எம் உறவினரான ஸ்ரீலலிதா சுப்பிரமணியம் அவர்கள் பல நெடுங்காலமாக தமது பிள்ளைகளுடன் வாழ்கின்றார்கள். அவர்கள் அங்கு பலருக்கு தம்மாலான பல உதவிகள் புரிந்து வாழ்வது பல-ரையும் கவர்ந்துள்ளன. திரு. இ. சுப்பிரமணியம் அவர்கள் இலத்திரனியல் பொறியியலாளராக சொந்தமாக கொம்பனி நடாத்தி பலருக்கு வேலைவாய்ப்பினை வழங்கிவந்தார். அவர் மிக சமீபத்தில் 2012ம் ஆண்டு உயிர்நீத்தது பலரையும் சோகத்திற்குள்ளாக்கியுள்ளது. அவரது வீட்டில் நாம் அவருடன் இருந்து வாழ்ந்த காலங்கள் மறக்க இயலாதன.

திரு. இ. சுப்பிரமணியம் அவர்களின் அண்ணன் திரு. இ. தியாகராஜா பல தேசங்களில் பொறியியலாளராக சேவை யாற்றி இறுதியாக லண்டனில் சுவின்டன் நகரில் கவுன்சிலராக பல சமூக சேவைகள் புரிந்து பலரும் மதிக்கும் வண்ணம் வாழ்கின்றார். திரு. டாக்டர் இ. சுவாமிநாதன் அவர்கள் 1970ம் ஆண்டு முதல் வைத்திய நிபுணராகவும் வைத்திய சேவை ஆலோசகராகவும் மிகவும் உயர் பதவியில் லண்டனில் சேவை புரிந்து வருகின்றார்.

எம் டாக்டர் ப. அம்பிகாபதி அவர்கள் பல வருடகா லமாக லண்டனில் வைத்திய நிபுணராக சிறப்பாக சேவை புரிகின்றார். இவர் தமது குடும்பத்தினருடன் எசெக்ஸ் எனும் பகுதியில் வாழ்கின்றார். இவர் பல சமூக சேவைகள், யோ-காசன பயிற்சிகள் என பலவிதமாக சேவைபுரிவது சிறப் புக்குரியன. திரு. வை. சக்திதரன் கணினி பொறியியலாளராக வற்ஸ்வோத் எனும் இடத்தில் பெரிய கம்பனியில் முகா மையாளராக சிறப்பாக வாழ்கின்றார். இவர்கள் யாவரும் எமது நெருங்கிய உறவினர்களாக இருப்பது எமக்கு மிகவும் பெருமையாக உள்ளன.

பேராசிரியர் நாராயணசாமி அவர்கள் மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் இராசாயனவியல் பேராசிரியராக வும் ஆலோசகராகவும் அதி உயர் பதவி வகிப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இவரது வீட்டில் பல அழகான பூமரங்கள் வளர்க்கப்பட்டு வருவது பார்ப்பதற்கு மிகவும் அழகாக உள் ளன. திரு பத்நாப ஐயர் செய்யும் பொது நலசேவை மிகவும் பாராட்டத்தக்கவை. பல நூல்களை வெளியிட்டு மறு பிரசுரம் செய்து மக்களுக்கு பலவித சேவைகள் புரிவது சிறப்பானதாகும். பிரம்மஸ்ரீ ஸ்ரீதரக் குருக்கள், பிரம்மஸ்ரீ ஸ்ரீகரக் குருக்கள், பிரம்மஸ்ரீ ந. சோமாஸ்கந்தக் குருக்கள், பிரம்மஸ்ரீ பா. சர்வேஸ்வரக் குருக்கள், பிரம்மஸ்ரீ கமல நாதக் குருக்கள், பிரம்மஸ்ரீ கோபாலகிருஷ்ண குருக்கள், பிரம்மஸ்ரீ பராபரக் குருக்கள், பிரம்மஸ்ரீ வசந்தக் குருக்கள், பிரம்மஸ்ரீ முத்துக் குமாரசாமிக் குருக்கள், பிரம்மஸ்ரீ சச்சிதானந்தக் குருக்கள் முதலான எமது உறவுமுறையான பலர் லண்டனில் பல ஆலயங்களில் குருமார்களாகவும் அங்கு வாழும் இந்து மக் களின் சமய சடங்குகளையும் நிகழ்த்தி வருவது மகிழ்ச்சி அளிப்பனவாக உள்ளன.

எமது 70 வருட நிறைவு பீமரத சாந்தி வைபவ நிகழ்வு 2011ம் ஆண்டு நவம்பர் மாதம் ஈஸ்ட்காம் முருகன் கோவி லில் வெகு சிறப்பாக பல உறவினர்கள், குருமார்கள் ஆசீர் வாதங்களுடன் பிரம்மஸ்ரீ நாகநாதக் குருக்கள் அவர்களால் நடாத்தி வைக்கப்பட்டமை சிறப்பானதாகும். இந்நிகழ்வானது எமது வாழ்நாளில் மறக்கமுடியாத சம்பவமாகும்.

பிரம்மஸ்ரீ இ. பகவதீஸ்வர ஐயர் 1980ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டிற்குச் சென்று பாரிஸ் நகரில் சமயத்துறையோடு தொடர்பு டையதாக வாழ்வை அமைத்து வாழ்ந்து வருகின்றார். இவர் பாரிஸ் லாசப்பல் அருள்மிகு முத்து மாரியம்மன் ஆலய பிர- தம குருவாக தம் குடும்பத்தினருடன் பணிபுரிந்து வருகின்றார். இவரது பீமரதசாந்தி வைபவம் 2013ம் ஆண்டு ஜனவரி மாதம்

5ம், 6ம் திகதிகளில் மிகவும் பிரமாண்டமாக வெகு சிறப்பாக சாஸ்திரங்களில் கூறப்பட்ட விதிப்பிரகாரம் தெய்வங்களின் பரிபூரண அனுக்கிரகத்துடன் கோலாகலமாக நிறைவேறியது. இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் பெரும்பாக்கியம் எமக் குக் கிடைத்தமை எமக்கு மிகவும் சந்தோசமாக உள்ளன. அங்கு சென்று நாங்கள் ஒரு மாதம் தங்கி நின்று அங்குள்ள எமது உறவுகளை காணும் சந்தர்ப்பமும் கிடைத்தன.

பீமரத சாந்தி நிகழ்வினை சிறப்பித்து நடாத்தி வைத்த ஆச்சாரியர்களாக பிரம்மஸ்ரீ டாக்டர் ஜி ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் சென்னை முதன்மையாளராகவும் டாக்டர் நா. சோமாஸ் கந்தக் குருக்கள் கனடா சிவஸ்ரீ கே. பிச்சைக் குருக்கள் சென்னை பிள்ளையார்பட்டி, பிரம்மஸ்ரீ எம் என். கல்யாண சுந்தர சிவாச் சாரியார், லண்டன், ஆகியோரினால் சிறப்பாக நடாத்தி வைக்கப்பட்ட பெருமை மிகவும் அற்புதமானது. பந்து மித்திரர்கள், பெரியோர்கள் என பலரும் வந்து சிறப்பித்து அரு ளாசி வழங்கி வாழ்த்த இரு நாட்கள் மேளவாத்தியங்களுடன் விழா சிறப்பாக நடந்து இனிது நிறைவு பெற்றமை எம்மை மிகவும் மகிழ்ச்சிக்கு ஆளாக்கின.

பாரிஸ் முத்துமாரி அம்மன் கோவில் விழாக்கள் யாவும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருவதனையும் கோவிலில் அபிஷேக நிகழ்வுகள், பூசைகள், அலங்காரங்கள் முதலி யன வெகு அழகாக நடாத்தப்படுவதைக் கண்ணுற்றோம். இக் கோவிலினை பிரம்மஸ்ரீ இ. பகவதீஸ்வர ஐயா, பிரம்மஸ்ரீ ஜெயகுமார சர்மா, பிரம்மஸ்ரீ பிரேம் ஞானசுத சர்மா ஆகி யோர் குருமார்களாக உள்ளனர். நாங்கள் பாரிசில் உள்ள இவர்களது வீடுகளில் சில நாட்கள் தங்கி நின்று பாரிசை பார்க்கமுடிந்தது. பிரான்சில் உள்ள உயர் மாடிக் கட்டிடங்கள் பலவும் பழமை வாய்ந்தன. வீதிகள் மிகவும் ஒடுங்கியன. அங்கு பெரும்பாலும் பிரெஞ் மொழி கட்டாயம் அறிந்து இருக்கவேண்டும். அரசாங்கமும் அம்மக்களுக்கு பலவிதமான சலுகை முறையில் சேவைகள் புரிந்து வருகின்றன.

பாரிசில் இருந்து ரிலூஸ் எனும் இடம் 750கி.மீ. தூரம் கொண்டது. அங்கு நாங்கள் மின்சார ரெயிலில் கடுகதி வேகத்தில் சுமார் 5 மணி நேரத்தில் மிகவும் சௌகரியமாக எமது உறவினர்களான பிரம்மஸ்ரீ நடனசபாபதி சர்மா எம் சகோதரி கிரிஜாம்பிகை அவர்கள் பிள்ளைகளான கோபரமணன், பாகுலேயன், கிரீசர்மா ஆகியோருடன் தங்கி நின்றோம். இவர்கள் யாவரும் தனித்தனியாக அருகருகில் வீடுகள் அமைத்து 1985ம் ஆண்டு முதல் மிகவும் சந்தோசமாக வாழ்கின்றனர். அவர்களது வீட்டில் உள்ள காணிகள் காய்கறி விதைகளை விதைத்து தமக்குத் தேவையான உணவு காய்கறிகளை பெற்றுவருகின்றனர்.

பிரான்சில் மிகவும் சுற்றுலா பயணிகளை கவரும் இடமாக ஈவில் ரவர் மிக உயர்ந்த 980 அடி மண்டபம் பிரமாண்டமாக காட்சி அளிக்கின்றது. அதில் ஏறி மேலே சென்று பார்த்தால் பாரிஸ் நகரம் முழுவதும் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கும். பாரிசில் எமது உறவுகள் பலர் நிம்மதியாக வாழ்வதனைக் கண்டோம்.

மூன்று லட்சம் ஈழத்து மக்கள் வாழும் நாடு கனடா. அங்கு ரொறன்ரோ முக்கிய தமிழ் மக்கள் வாழும் இடமாகும். 2013ம் ஆண்டு பெப்ரவரி மாதம் நாம் ரொறன்ரோ சென்றோம். அக்காலம் அங்கு மிகவும் குளிரான பனிப்படலம் படர்ந்த பனிப்புயல் வீசும் காலமாகும். எங்கும் வெள்ளை வெளீரென பனிப்படலம் காணப்பட்டது. வீடுகளை சுற்றி படர்ந்து இருந்தது. பனிக்கட்டிகளை அப்புறப்படுத்தினால்தான் வெளியே வரமுடியும். வீதிகள் எங்கும் பனிபடர்ந்து இருக்கும். அரசாங்கம் மக்கள் பாவனைக்கென பனிக்கட்டிகளை அள்ளி அள்ளி அப்புறப்படுத்துவார்கள். உடல் முழுவதும் பெரிய கோட்டுக்களினால் மூடித்தான் வெளியில் செல்லமுடிந்தது.

திரு. கு. கோகுலபாலன் குடும்பத்தினருடன் ரொறன் ரோவில் டவுன்ரவுனில் உள்ள விளீற் ஸ்ரீட்டில் உள்ள 20 அடுக்குமாடிக் கட்டிடத்தில் வசித்து வருகின்றனர். அங்கு அவர் கணினி தொழில்நுட்பவியலாளராக பணிபுரிகின்றார். ரொறன்ரோ டவுன்ரவுனின் அழகு அங்குள்ள மிக உயரமான சி.என்.ரவர் மாடியில் தான் தங்கியுள்ளது. அதன் உயரம் 447 மீட்டராகும். அதாவது 1405 அடி கொண்ட 33 அடுக்குகள் கொண்டன. அங்கிருந்து பார்க்கும்பொழுது எங்கும் தொடர்ந்து உயர்ந்த தொடர்மாடிக் கட்டிடங்கள், வெகு அலங்காரமாக காட்சி அளிக்கும். இரவுவேளைகளில் டவுன் ரவுன் ரொறன்ரோ நகரம் மின் விளக்குகளால் மிகவும் அழகுடன், ஜோதியாக காட்சி அளிக்கும். பலபல கண்ணாடிக் கட்டிடங்கள் எங்கும் வானளாவிய உயர்ந்த வடிவான கட்டிடங்கள் காணமுடியும். ரொறன்ரோ மிகவும் பிரசித்தி பெற்ற நவீன நகரம், மிக நெருக் கடி நிறைந்த நகரமாகும்.

ரொறன்ரோ றிச்மன்ட் கில்லில் உள்ள இந்துக் கோவில் பிள்ளையார், முருகன், சிவபெருமான், பெருமாள் என நான்கு தடவைகள் தேர்த்திருவிழாக்கள் நடாத்தப்படுகின்றன. இங்கு காவடிகள், தூக்குக் காவடிகள், மேள வாத்திய கலைஞர்களின் நாதஸ்வர நிகழ்ச்சிகள் போன்ற நிகழ்வுகள் பல ஆயிரம் மக்கள் கூடி வழிபாடு செய்யும் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. இக் கோவிலின் பிரதம சிவாசாரி யாராக எமது உறவினரான சிவஸ்ரீ கேதீஸ்வரநாதக் குருக்கள் மிகவும் பக்தி சிரத்தையுடன் சேவை புரிவது மக்களினால் கௌரவிக்கப்படுகின்றது. இவர்கள் றிச்சன்ட் கில்லில் பல வருட காலங்களாக வசித்து வருகின்றார். அவருடன் சென்று நாம் வாழ்ந்த நிகழ்வுகளும் மறக்க இயலாதன.

ஒட்டாவா சென்று பல வாரங்கள் திரு எஸ். பாலசுப்பிர மணியம் குடும்பத்தினருடன் மிகவும் சந்தோசமாக வாழ்ந்தோம். அவர் பட்டயக் கணக்காளராக சேவைபுரிந்து சிறப்பாக

வாழ்ந்து வருகின்றார். ஸ்காபரோ மிசிசாக பிரம்டன் ஆகிய பகுதிகளில் உள்ள எம் உறவினர்கள் பெரிதாக வீடுகட்டி சிறப்பாக வாழ்கின்றனர். கனடாவில் நயாகரா நீர்வீழ்ச்சி மிக வும் அற்புதமானது. மிகவும் உயர்ந்த மலையிலிருந்து நீர் ஓடிவந்து வீழ்ந்து பாயும் காட்சி அழகாக இருக்கின்றது. பல் ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இந்த நீர்வீழ்ச்சியினை காண் பதற்காக தினமும் வந்து நின்று தங்கிச் செல்கின்றனர். பெரிய சுற்றுலா மையமாக நயாகரா நகரம் விளங்குகின்றது.

றொறன்ரோவில் வாழும் எம் உறவுகள் தமது மொழி, மதம், உணவு, உடை, பழக்க வழக்கங்கள், கலைகள், கலாச்சாரங்கள் முத லானவற்றை கடைப்பிடித்து வாழ்வது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளன.

எம் உறவினர்கள் பலர் தமிழ் நாட்டில் வாழ்ந்து வருவத னால் அவர்களையும் சென்று பார்த்துவரும் சந்தர்ப்பங்கள் எமக்கு பல கிடைத்தன. திருவாளர் இ." ஜெம்புகேஸ்வரன் அவர் கள் பெங்களூரில் பல வருடங்களாக காப்புறுதி ஆலோசகராக உயர் பதவியில் உள்ளார். நாம் அங்கு சென்றபொழுது அவ ருடன் சென்னையில் வருடாவருடம் இடம்பெறும் மார்கழி மாத இசைவிழா நிகழ்ச்சிகளை பார்த்து ரசித்து வருவது மிகவும் பெருமையாக உள்ளது. எமது வாழ்நாளில் நாங்கள் இந்த நாடுகளில் உள்ள எமது நெருங்கிய உறவினர்களு டன் வாழ்ந்த வாழ்க்கை மிகவும் மகத்தான நிகழ்வாக சந்தோச மடைகின்றோம்.

சுபம்

*01.04.2014*

# இயல் 04

**சில அறிஞர்கள்,**
**சேவைகள்,**
**பதிவுகள்**

- இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபரின் வேதபாராயண குருகுல பாரம்பரிய சேவை
- பேராசிரியர் கலாநிதி கா. கைலாச நாதக் குருக்கள் அவர்களின் நினைவலைகள் சில
- யாழ் - நாவலர் வீதியில் வியாகரண சரோமணி பிரம்மஶ்ரீ தி.கி. சீதாராம சாஸ்திரிகள் குடும்பம்.

## இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபரின் வேதபாரராயண குருகுல பாரம்பரிய சேவை



எமது இலங்கைத் திருநாட்டில் சம்ஸ்கிருத மொழியைக் கற்று தம்மை அர்பணித்து உலகளாவிய நிலையில் பிரசித்தி பெற்று விளங்கும் அந்தணக் குருமார்கள் பலர் வேதபாராயண குருகுல பாராம்பரியங்களை வளர்த்து அரும்பணி ஆற்றி வந்துள்ளனர். அவர்கள் அந்தணச் சிறார்களின் வேதாத்யயன கல்வியில் பெரிதும் அக்கறை செலுத்தியுள்ளனர். வேதாத்யயன பயிற்சிக்கென தமது இல்லத்தில் குருகுலம் முதலான அமைப்புக்கள், பாடசாலைகள் என்பனவற்றை உருவாக்கி நடாத்தி வந்துள்ளனர். அவர்களது சேவைகள், சமயத்தொண்டுகள் மிகவும் மகத்தானவை.

இவ்வாறு குருகுல பாரம்பரியத்தினை உருவாக்கியவர்களில் சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள், சுண்ணாகம் பிரம்மஸ்ரீ சிதம்பர சாஸ்திரிகள், யாழ்ப்பாணம் வியாகரண சிரோமணி சீதாராமசாஸ்திரிகள், நல்லூர் நியாய சிரோ-மணி கி.சுப்பிரமணிய சாஸ்திரிகள், பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள், கோப்பாய் சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள், சுன்னாகம் சிவஸ்ரீ குஞ்சிதபாதக்குருக்கள், நல்லூர் பிரம்மஸ்ரீ சிதம்பரசாஸ்திரிகள் ஆகியோர் சிறப்பாகக் கூறக்கூடியவர்கள்.

இவர்கள் வரிசையில் இன்றைய காலகடத்தில் எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் மிகச் சீரான முறையில் பல்வேறு

செயற்பாடுகளை சிவாசார்ய பாரம்பரியத்தினையும் வைதீக மரபையும் வளம்பெறச் செய்து சேவைகள் பல செய்து வரும் இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவ ஸ்ரீ தா. மஹா தேவக்குருக்களின் சமயத்தொண்டு மிகவும் பாராட்டதக்கவகை யில் அமைந்துள்ளது.

தர்மசாஸ்தா குருகுலம், காயத்திரிபீடம் என்பன இணுவில் வட்டுவினி இராஜேஸ்வரி அம்பாள் (கண்ணகை அம்மன்) ஆலயத்தில் அமைந்துள்ளது. சிவஸ்ரீ தா.மஹாதேவக்குருக்கள் மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த வர். அவரது தர்மபத்தினி திருமதி புவனாம்பிகை அம்மா, மகன்மார் மூவர். பிரமம்ஸ்ரீ ம. தாணுநாத சர்மா, பிரம்மஸ்ரீ ம. சுந்தரேஸ்வரக் குருக்கள், பிரம்மஸ்ரீ ம. ஸ்ரீவத்ஸ சர்மா, மகள் ஸ்ரீ வித்யா, மருமகன் பிரம்மஸ்ரீ பா. சர்வேஸ்வரக் குருக்கள்.

குருகுல அதிபர் அவர்களை பலரும் வாத்தியார் ஐயா என அழைத்து வருகின்றனர். அவர்களது குடும்பம் கூட்டுக் குடும்பம். இங்குள்ள ஆலய குரு குலத்தில் வேத மந்திரங்கள் எந்த நேரமும் ஒலித்த வண்ணம் இருக்கும். வேதமந்திரங்கள் அத்யயன ஸ்வர அட்சர சுத்தங்களுடன் ஒலித்த வண்ணம் இருப்பதனை உணரமுடியும். அந்தணச் சிறார்களின் வேதாத்ய யனம் காலை, மாலை இரு வேளைகளிலும் ஒலித்த வண் ணம் காணப்படும். மந்திர உச்சாடனத்துடன் வேதசிவா- கம வகுப்புக்களை வாத்தியார் நடாத்திக் கொண்டிருப்பார். அவருடன் அவரது சகோதரர் பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக் குருக் கள் மற்றும் ஸ்ரீவத்ஸ சர்மா, சிவபால சர்மா ஆகியோரும் வகுப்புக்களை பதில் ஆசிரியர்களாக நடாத்தி வருவது சிறப்பானது.

அந்தண சமூகத்தைச் சார்ந்த இளந்தலைமுறையினர். வயது முதிர்ந்தோர் எனப் பலரும் வேத ஆகமப் பயிற்சி யினைப் பெற்று வருகின்றமையும் குருகுலம் மூலம் சிவா

சார்ய பராம்பரியத்தினையும் வைதீக மரபையும் வளம் பெறச் செய்கின்றமையும் போற்றத்தக்கவை. வாத்தியார்- குருகுல அதிபரிடம் சிவாகம நுட்பங்களைக் கற்றுத் தேர்ந்த பலர் சிறந்த சிவாச்சார்யர்களாக இன்று இலங்கையின் பல பாகங் களிலும் கடல் கடந்த வெளிநாடுகளிலும் ஆலயப் பணிகளில் ஆத்ம சுத்தியுடன் ஈடுபட்டு சிறப்புடன் பராட்டத்தக்கவகையில் விளங்குகின்றனர். சிவாச்சார்ய பரம்பரைகளை புதிது புதி தாக உருவாக்கி வருவதுடன் தமது புதல்வர்கள் மூவரி னையும் சிறந்த அறிவுடைய வேதாத்யயனம் கற்றுத் தேர்ந்த சிவாச்சார்யர்களாக வெளிவருவதற்கு அரும்பாடுபட்டுள்ளார்.

குருக்கள் சிவாகம நுட்பங்களைக் கற்றுத் தேர்ந்து சிறந்த சிவாச்சார்களுடைய வழிகாட்டலைப் பெற்று தான் செய்கின்ற கிரியை நெறிகளைச் சிறப்புப் பெற்றனவாக செய்கின்றமை விசேடமாகும். தமது கண்ணகை அம்மன் ஆலயத்தில் செய்கின்ற அபிசேகங்கள், பூஜைகள், ஸ்ரீ சக்ர பூஜை என்பன மிகவும் பத்தி பூர்வமாக நடைபெறக் காரணகர்த்தாவாக விளங்குகின்றார். கிரியை, பாவனை என்பனவற்றில் இவர் செய்கின்ற பூஜைகள், உற்சவங்கள், கும்பாபிஷேக நிகழ்வுகள் தனித்துவமான சிறப்புடையன.

குருக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற கும்பாபிஷேக நிகழ்வுகள், மகோற்சவங்கள், கொடியேற்றங்கள், சிவாச்சார்ய அபிஷேகங்கள், விவாகங்கள் முதலான சகல வைபவங்கள் அத்தனையும் சிறப்புற நடாத்தி வைக்கின்ற பெருமைக்குரியவர், வேதபாராயணங்கள் சர்வசாதகராகவும், சர்வபோதகராகவும் செய்து வைக்கின்ற காரியங்கள் யாவும் யாவரும் பராட்டத்தக்க வகையில் பக்தி பூர்வமாக சிறப்பிக்கின்ற இயல்பு அவரி டம் உள்ள விஷேட அம்சம். ஆலய அமைப்புக்கள், வைதீக கிரியைகள் ஆகம கிரியைகள் தொடர்பான நெறிமுறைகள் என்பன பற்றி விரிவான விளக்கங்கள் சந்தேகங்களுக்கு தீர்வு கள் ஆலோசனைகள் என்பவற்றை வெகு நுட்பமாக அறிந்து ஆற்றுப்படுத்துபவராக திகழ்கின்றார்.

அந்தண சமூகத்தவரிடையே நிகழ்கின்ற வைதீக பூர்வாங்க கிரியைகளையும் சிறப்புற நடாத்தி வைக்கின்றமையும் இவரின் தனித்தன்மையே.

நியந்திரி எனும் அமைப்பு உருவாக்கப்பட்டு செயற்பட்டு வந்த காலங்களில் அந்தணர்களிடையே சமய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நிகழ்த்தி வந்த கருத்தரங்கு, கௌரவிப்பு, பாராட்டு நிகழ்வுகளிலும் அகில இலங்கை இந்துக் குருமார் ஒன்றியம் மாதந் தோறும் ஒழுங்குபடுத்துகின்ற கருத்தரங்கு, பாராட்டு நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு பல ஆய்வுக் கட்டுரைகளை வாசித்தும் ஆலோசனைகள், விளக்கங்கள், பாராட்டுரைகள் என்பவற்றை சிறப்பாக நடாத்தி வைக்கின்ற தன்மையும் இவரிடம் நாம் காண்கின்ற காட்சிகளாகும். ஒன்றியம் நடாத்துகின்ற அந்தணர்களுக்கான வேதாத்யயனக் கல்வியினையும் வாத்தியார் நடாத்தி வருகின்றார்.

தர்மசாஸ்தா குருகுலத்தில் பல காலமாக காயத்திரி ஹோமங்கள் நடாத்தியும் அங்கு முதிர்ந்த சிவாச்சாரியார்கள், சமூகப் பணியாளர்களை கௌரவிக்கின்ற காட்சிகளும் நடைபெற்று வந்துள்ளன. அதிபர் அவர்கள் பொது நிகழ்ச்சிகளிலும், கலை நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு அதனைப் பார்த்து மகிழ்ந்து, ரசித்து, பாராட்டிச் சிறப்பிக்கின்ற பெருமையும் இவரிடம் காணப்படுகின்ற இயல்பாகும். இவரின் செயற்பாடுகளால் கவரப்பட்ட திருகோணமலை பத்திரகாளி அம்மாள் தேவஸ்தானத்தின் தர்மகர்த்தா பிரதம சிவாச்சாரியரான சிவஸ்ரீ.சோ. இரவிச்சந்திரக் குருக்கள் மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு வசதியாக மாணவர் விடுதி கட்டி அன்பளிப்புச் செய்துள்ளமை வரவேற்கத்தக்கது.

## பிரம்மஸ்ரீ மஹாதேவக் குருக்களுடனான நேர்காணல்

**கே- தாங்கள் ஆரம்ப கால வாழ்க்கை பற்றி சில கூறுங்கள்?**

ப: என்னுடைய ஆரம்ப கால வாழ்க்கை மிகச் சோகமானது. 9 வயதில் தாயை இழந்த நான் என்னுடைய சௌகரியங்களை நினைத்தே பார்க்க முடியவில்லை. எனது தந்தையார் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் பரிசாரகராக மடப்பள்ளி ஐயாவாக கடமையாற்றிய காலம் அவருக்கு உதவியாகவும், தனித்தும் இருந்துள்ளேன். மாவிட்டபுரம் பிரமஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் அவர்களிடமும் சமஸ்கிருத பாடம் பயின்றேன். இந்தியாவின் பிரம்மஸ்ரீ கி. வாசுதேவ வாத்தியாரிடம் பயின்றேன். எனக்கு நிரம்ப குருமார்கள் அதையிட்டு நான் பெருமைப்படுவதுண்டு.

**கே:- தர்மசாஸ்தா குருகுலம், காயத்ரீ பீடம் ஆரம்பித்தது பற்றி?**

ப:- நடுத்தர வயதுச் சிவாச்சாரியார்கள் பலர் ஒன்றாக இருந்து எவ்வித ஸ்ருதி பேதமுமின்றி வேதபாராயணம், சமயக் கிரியைகளின் செய்முறைப் பயிற்சி, வைதீக கிரியைகள் சம்பந்தமாக உரையாடுவர். அவ்வப்போது எழுகின்ற சந்தேகங்கள் பிரச்சனைகள் முதலியவற்றுக்கான விளக்கங்களும் தீர்வுகளும் உரியவர்களுக்கு அளிக்கப் படுகின்றன. இப்படியாக ஒரு நிறுவனத்தை உருவாக்க வேண்டும் என்பது எனது இலட்சியமாக இருக்கவில்லை. சில சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஒன்று திரண்டு என்னை கருவியாக்கி கொண்டு விட்டன. இக் குருகுலம் பண்ணிசை மற்றும் கர்நாடக இசை போன்றவற்றையும் கற்பிக்கிற இடமாகவும் விளங்குகின்றது.

இக்குருகுலம் 35 வருடங்களாக இயங்கி வருகின்றது. ஏறத்தாள 300 மாணவர்கள் படித்து பயன் பெற்றுள்ளனர்.

மாணவர்களுக்கு போதிப்பதும், பயிற்சி அளிப்பதும், ஆன்மீக செயற்பாடுகள் என்ற வகையில் அவற்றை இல வசமாகச் செய்வதன் மூலம் நான் ஆன்ம திருப்தியை அனுபவிக்கின்றேன்.

நானும் கடமையாற்ற வேண்டிய நிரப்பந்தம். சில சமயங்களில் உடம்பு வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கும் நிலையிலுங் கூட கடமையாற்ற வேண்டியிருந்தது. அச்சமயத்திலும் நான் கல்வியில் மிகுந்த அக்கறை செலுத்தினேன்.

மிகுந்த பிரயாசைப்பட்டு அந்த நாள் எஸ்.எஸ்.சி. பாஸ் செய்து, ஸ்கந்தவரோதயா கல்லூரியில் எச்.எஸ்.சி யில் சம்ஸ்கிருத கல்வி பயிலும் ஆசையில் சேர்ந்து படித்தேன். அந்த நேரம் பெருமை மிக்க பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகளிடம் வேதாத்யயனம் செய்தேன். இந்த நேரம் கீரிமலை இராமையர் லண்டன் ஜி.சி.ஈ உயர்தரம் பற்றி என்னிடம் கூறி எனக்கு சமஸ்கிருது கல்வியை ஊட்டி அந்த பரீட்சையில் சித்தியடைய வைத்தார். தொடர்ந்து லண்டன் பி.ஏ. படித்துக்கொண்டிருக்கும்போது திடீரென இந்தியா செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அங்கு 2 வருடங்கள் தங்கின காலத்தில் வேதபாடங்கள் அமரம், சப்தம் முதலிய சம்ஸ்கிருத இலக்கண பாடங்களையும் கற்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. பின்பு வேதங்கள் கற்ற திருப்தியுடன் இலங்கை திரும்பினேன்.

நான் முதலில் வேதம் கற்ற ஆசிரியர் நமஸ்காரத்திற்குரிய வராகிய பிரம்மஸ்ரீ. கே. சிதாராம சாஸ்திரிகள் மேற்கொண்டு பிரம்மஸ்ரீ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் கோண்டாவில் பிரம்மஸ்ரீ. இ. நாராயண சாஸ்திரிகள், கீரிமலை பிரம்மஸ்ரீ ப. இராமையர் ஆகியோரிடமும் பயின்றேன். என்னிடம் படித் துப் பயிற்சி பெற்ற மாணவர்கள் பல இடங்களிலும் பல நாடுகளிலும் ஆலயப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

என்னிடம் பயிற்சி பெற்ற மாணவர்களில் தெல்லிப்பளை நாராயணர், மயிலணி வரதராசர், அளவெட்டி சந்திரர் ஆகிய மூவரும் மிகுந்த ஆர்வத்துடன் கற்று ஏனையவர்களுக்கு முன்னோடிகளாகச் செயற்பட்டார்கள்.

**கே: தாங்கள் பங்கு கொண்ட சிறப்பான நிகழ்வுகள் பற்றி?**

ப:- திருக்கேதீஸ்வர கும்பாபிஷேக நிகழ்வு, திருகோணமலை பத்ரகாளி அம்மன் கோவில் கும்பாபிஷேக நிகழ்வு, நயினாதீவு நாகபூசணி அம்மன் கும்பாபிஷேக நிகழ்வுகள், ஈழத்து சிதம்பரம் காரைநகர் கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் என்பன மறக்க முடியாத சிறப்பான நிகழ்வுகளாகும்.

**கே: தாங்கள் சென்ற வெளிநாட்டு அனுபவங்கள், பெற்ற கௌரவங்கள்?**

ப: இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் சுவிஸ், லண்டன் முதலான நாடுகளில் உள்ள இந்து ஆலயத்தினர், இந்து அமைப்புக்கள் என்னை அழைத்து கௌரவப்படுத்தியுள்ளன. லண்டனில் "வேதவிசாரத" என்னும் பட்டடும், இலண்டனில் உள்ள வேதாகமசபா "சாதரத்தனாகரர்" என்னும் பட்டமும் வழங்கி கௌரவித்துள்ளனர். புங்குடுதீவில் 33 கும்பங்கள் கும்பாபிஷேக நிகழ்வில் முதன் முதலாக "வேதசிவாகம பாஸ்கரர்" என்னும் கௌரவம் வழங்கியுள்ளனர். இந்துக்குருமார் ஒன்றியம், கொழும்பு அகில இலங்கை சிவர்பிரமாணசங்கம், சர்வதேச இந்துக் குருமார் சங்கம் கொழும்பு என்பன என்னை மிகவும் கௌரவ விழாக்கள் செய்து மகிழ்ச்சிப்படுத்தியுள்ளன.

**கே: அந்தணச் சிறார்களுக்கு கூறும் கருத்துக்கள்?**

ப: சிறார்கள் சந்தியாவந்தனம், சமிதாதானம் எனபவற்றைக் கட்டாயம் செய்ய வேண்டும் பாடசாலையில் கல்வி கற்றலுடன் பூணூல் அணிந்த பின்னர் வேதபாரயணம் கற்றுக்கொள்ள வேண்டும். கூடிய வரையில்

எல்லாவிதமான வைதீகக் கிரியைகளையும் விஷேடமாகக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆலயங்களில் நடைபெறுகின்ற ஆகமக் கிரியைகள் வைதீக கிரியைகளில் பங்குகொண்டு செய்யும்பொழுது பூரணமான கல்வி அறிவைப் பெற்ற பின்னர் ஆத்ம சுத்தியுடன் செய்வது சிறப்பானதாகும்.

**கே: மறக்கமுடியாத சம்பவங்கள்?**

ப:- என்னிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர் சிறப்பாகக் கும்பாபிஷேசக் கிரியைகள் செய்து வருவது மறக்க முடியாத நிகழ்வுகள் ஆகும். சதாசிவ பிரசீன பாட-சாலை யில் கல்வி கற்பித்த போது அங்கு வந்து நயினை ஐ.கைலாசநாதக் குருக்கள் என்னைப் பாராட்டிப் போனமை எனது வாழ்வில் மறக்க முடியாத சம்பவ மாகும்.

உதயன் 22-01-2012

## ஓர் உண்மை

சுய ஆராய்ச்சியில் ஈடுபட விரும்புபவர்கள் ஒன்றை முக்கியமாக நினைவில் கொள்ள வேண்டும். கடந்தகாலத்தை எதிர்கொள்வது என்பதன் பொருள், கடந்த காலத்தை எண்ணியெண்ணிக் குமைந்து கண்ணீர் பெருக்குவது என்பதல்ல. உண்மைதான், சில சம்பவங்கள் நினைவில் எழும்போது நம் இதயம் கசக்கிப் பிழியப்படலாம். அதனால் நெகிழ்ச்சியும் பச்சாதாபமும் ஏற்படலாம். 'என் வாழ்வில் இப்படி நடந்துவிட்டதே' என்கின்ற இந்த நெகிழ்ச்சி, இனி என் வாழ்வில் அப்படி ஒன்று நடக்க விடமாட்டேன்' என்ற திடமான மன உறுதியையும், அப்படியே வாழ்ந்து காட்டுகின்ற மன வலிமையையும் அளிப்பதாக இருக்க வேண்டும். எதிர்கொள்வது என்பது இதுதான். ஆனால் இந்த நெகிழ்ச்சி பலவீனத்தை அளிக்குமானால் அது நம்மை நாம் எதிர்கொள்வது ஆகாது.

# பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களின் நினைவலைகள்



பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சமஸ்கிருதத் துறை பேரறிஞராக விளங்கியவரும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இந்து நாகரிகத்துறையில் முதலாவது பேரா சியராகவும், துறைத் தலைவராகவும் விளங்கிய போராசி ரியர் கா.கைலாசநாதக் குருக்கள் அவர்கள், 07-08-2000 திங்கட்கிழமை அவுஸ்திரேலியாவில் அமரத்துவம் அடைந்தார் என்ற செய்தி அறிந்து யாழ்ப்பாண சமூகத்தவரிடையே உணர்ச்சிபூர்வமான ஒரு பேரதிர்ச்சி ஒன்று ஏற்பட்டது. மறைந்த மாபெரும் மேதை இவ்வுலகில் செய்த சேவை ஈடு இணையற்றது. எத்தனையோ பேரறிஞர்களை உருவாக்கினார். அவர் தமிழுக்கு செய்த சேவை, சைவ உலகத்திற்கு செய்த சேவை இந்துக் குருமார்களுக்கு வழிகாட்டியாக அமைந்த சேவை, ஏன் எமது சமூகத்திற்கு தான் வாழ்ந்து காட்டி, அந்தணப் பெருமக்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்று வழி காட்டி வைத்துள்ளார். இவை யாவும் எம் மனக்கண்முன் தோன்றுகின்றன.

பேராசிரியர் குருக்கள் அவர்களின் நடை, உடை, பாவனை எல்லாம் எல்லோர் மனத்திலும் நன்கு படிந்துள்ளன. தூய உள்ளம் கொண்டவர். சிரித்த முகத்துடன், வெள்ளை வேஷ்டி தேசிய உடையும் அணிந்தவர். விரைவான நடையும் சிறிய குடுமியும் வட்ட வடிவமுடைய முகமும் கொண்டவர். இவர்

பேராதனையில் இருக்கும்போது, தனது ஈ.எல். 3586 பியட் காரில் சென்று வருவதை, காணக்கூடியதாக இருக்கும்.

பேராசிரியர் எல்லோர் மனத்தையும் கவர்ந்து உள்ளார். பேராதனையில் 3ம். இல. வடமுனையில் உள்ள அவருடைய இல்லத்தில் தங்கி இருந்து எத்தனையோ அந்தணர்கள் பல்கலைக் கல்வி கற்பதற்கு வாய்ப்பு அளித்துள்ளார். 1964ம் ஆண்டு காலப்பகுதியில் அவருடைய இல்லத்தில் 20 பேருக்கு குறையாது இருந்து கல்வி கற்பதற்கும், அவர்களுக்கு வேண்டிய உணவுகளையும் சுவை குன்றாது அவரும், அவரது துணைவியாரும் அளித்துள்ளமையினை மறக்க இயலாது. அக் காலத்தில் நாங்கள் எல்லோரும் அவரைக் "கண்டிமாமா" என்றே அழைத்து வந்தோம்.

பேராசிரியர் அவர்கள், அவர்களின் செயற்பாடுகளை நோக்கும்போது அவர் உண்மையிலே ஒரு பெரிய வல்லமை கொண்ட ஆளுமையுடைய அறிஞராக வாழ்ந்து காட்டி உள்ளனர். அவர் விடியற்காலை 4.00 மணிக்கு தவறாது எழுந்து விடுவார். எழுந்ததும் ஸ்நானம் செய்து தனது சுவாமி அறையைத் துப்பரவு செய்து பாராயணம் செய்வார். காலை 5.30 மணிக்கு தனது விரிவுரைக்கான ஆயத்தங்களை செய்த பின்னர் எம்மில் சிலரை அழைத்துக்கொண்டு காரில் கண்டி சென்று காய்கறிகள் முதலியன வாங்கி வருவார்.

பின்னர் 8.00 மணிக்கு பல்கலைக்கழகம் சென்று விடுவார். மதியம் 12.00 மணிக்கு தவறாது உணவு அருந்தி சிறிது நேரம் ஓய்வு எடுப்பார். 2.00 மணிக்கு விரிவுரை ஆற்ற சென்று விடுவார். மாலை 5.30 மணிமுதல் பாராயணம் நடைபெறும். பின்னர் எல்லோருமாக இருந்து லலிதா சகஸ்ரநாமம் செய்வோம். இரவு 7.00 மணிக்கு இரவுச்சாப்பாடு நடைபெறும். இரவு 9.00 மணிக்கு அவர் படுக்கச்சென்று விடுவார். வீட்டில் பலர் இருந்தாலும் வீடு மிக மிக அமைதியாக இருக்கும். ஏதாவது சத்தங்கள் வருமானால் உடனே எழுந்து வந்து

இரு தடவை நடந்து விட்டு தனது அறைக்கதவினை அடித்து மூடுவார். உடனே அமைதி ஏற்பட்டுவிடும்.

குருக்கள் அவர்கள் பூசை செய்யும் பொழுது பார்ப்பதற்கு மிகவும் பக்திபூர்வமாகவும் மற்றவர்களையும் ஈர்க்கும் வகையில் இருக்கும். அவரது பூசையில் பௌர்ணமியில் ஸ்ரீசக்ர பூசை மிகவும் சிறப்பானதாக அமைந்திருக்கும். அவர் வடிவாம்பிகா அம்மையுடன் மனமுருகிப் போய்ப் பூசையினைச் செய்வார். பல மணி நேரமாக உட்கார்ந்து பூசை செய்யும் பொழுது, எவ்வாறு தான் அப்படி இருக்கின்றாரோ என்று வியக்கத்தோன்றும். அவரது பூசை செய்யும் சிறப்பினை எம்மால் சொல்லி விபரிக்க முடியாது. அந்தப் பக்திபூர்வ நிகழ்ச்சியைப் பார்த்தவர்கள் கட்டாயம் அனுபவித்திருப்பார்கள்.

குருக்கள் அவர்களிடம் காணக்கூடிய மற்றொரு சிறப்பு குருவினை மதிக்கின்ற பண்பு, இவர் தனது குரு-வாக காலஞ்சென்ற தி.கி. சீதாராம சாஸ்திரிகள் அவர்களை ஏற்றுக் கொண்டவர். குருவிற்கு செய்யும் மரியாதை பணி விடை யாவும் எமக்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்துள்ளது. குருக்கள் அவர்கள் இந்தியா சென்ற சமயம் காஞ்சி காம கோடிகள் (பெரியவர்) அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள். அதனைக் குருக்கள் யாழ்ப்பாணம் சென்றதும் தனது குருவிற்குத் தான் அப்பெருமை சேர வேண்டும் என்று அப்பொன்னாடையினை தனது குருவான தி.கி. சீதா ராம சாஸ்திரிகள் அவர்களுக்குப் போர்த்தி தனது குரு வணக்கத்தினைத் தெரிவித்துக்கொண்டார்கள். இவ்வாறாக குருவிற்குச் செய்த சேவைகள் ஏராளம். தனது குரு அவர்கள் காலஞ்சென்ற போது அவரது இறுதிக் கிரியைகளை முன்னின்று செய்து வைத்தவர் பேராசிரியர் குருக்கள் ஆவார்.

இவ்வாறு குருக்கள் அவர்கள் வைதீக ஆகம மதச் சடங்குகளான கும்பாபிஷேகம் கல்யாணம், உபநயனம் போன்ற பல கிரியைகளை செய்து எமது சமூகத்திற்கு அளப்பரிய சேவைகள் ஆற்றியுள்ளார்.

பெருமையினைச் சற்றும் விரும்பாத குருக்கள் பல் வேறு மட்டங்களில் பல விரிவுரைகள், சொற்பொழிவுகள் என்பன ஆற்றி சமூகத்திற்கு தொண்டாற்றினார். "நியந்த்ரி" ஸ்தாபனத்தின் போஷகராகவும் கடமையாற்றி வேண்டிய ஆலோசனைகளை புரிந்தார். இவ்வாறாக எமது சமூகத்திற்கும் யாழ்ப்பாண மக்களுக்கும் எம் நாட்டிற்கும் அளப்பரிய சேவை புரிந்த குருக்கள் அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாதது. அவர் காட்டிய வழியில் அவர்புரிந்த சேவையினை தொடர்ந்து நாம் கடைப்பிடித்து வருவதே அவருக்கு நாம் செய்யும் சேவையாக அமையும். அவரது ஆன்மா ஸ்ரீகமலாம்பிகையின் பாதகமலங்களை அடைய பிரார்த்திக்கின்றோம்.

**வெற்றிக்கான உங்கள் பார்வையை உயிர்ப்புடன் வைத்திருங்கள்**



ஒரு புதிய லட்சியத்தை அல்லது திட்டத்தை நீங்கள் உங்கள் மனதில் இடம் பெறச் செய்ய வேண்டும். உங்கள் வாழ்விற்கு அம்முயற்சியில் நீங்கள் வெற்றி பெறவேண்டும் என்று எண்ணுவது இன்றியமையாததாகும். அதன் நிறைவேற்றம் பற்றிய அச்சங்களையும் ஐயங்களையும் விட்டொழியுங்கள். உளவியலாளர்கள், அதை வெற்றிகரமாக முடிக்கும் திசையில் உங்கள் மனநிலை இருந்ததென்றால் அந்தப் போரில் நீங்கள் பாதி வெற்றி பெற்று விடுவீர்களென்று உறுதியளிக்கின்றனர். உங்கள் மனச் சித்திரம் உறுதி பெற்றுவிட்டதென்றால் எதிர்மறை சிந்தனைகள் களைந்தெறியப்படுவதோடு மட்டுமின்றி அதே திசையில் மேலும் முன்னேற நீங்கள் தூண்டப்படுவீர்கள், கவரப்படுவீர்கள்.மேலும் சாதகமான பலனைப் பெறுவதற்கான தளத்தையும் தயார் செய்வீர்கள். உங்களுடைய முயற்சியில் நீங்கள் திரும்ப வெற்றிபெறும் பொழுது உங்கள் செயலிலிருந்தும் அதன் பயனிலிருந்தும் பின்வாங்குவது உண்மையில் கடினமாகும். உங்கள் இலக்கு எளிதில் அசைக்கவோ, பிடுங்கவோ முடியாத நன்கு வேர்விட்ட மரம்போல் ஆகிவிடும்.

# யாழ் நாவலர் வீதியில் பிரம்ம ஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் குடும்பம்



வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி.கி. சீதாராம சாஸ்திரிகள் குடும்பம் யாழ் நாவலர் வீதியில் வாழ்ந்து வந்த காலம் எம் மனதில் இன்றும் நினைவில் நிலைத்து நிற்கின்றது. சாஸ்திரிகள் அவர்களும் அவரது உத்தம பத்தினியான சீதா லட்சுமி அம்மா அவர்களும் இணைந்து எமது நாட்டில் பல வைபவங்களை, நற்காரியங்களை, சேவைகளைப் புரிந்து மக்களின் உள்ளங்களில் இடம் பிடித்துச் சென்றுள்ளார்கள். அண்மையில் தமது தொண்ணூற்றி நாலாவது வயதில் 02.03.2011 அன்று சிவராத்திரி தினத்தில், சீதாலட்சுமி அம்மா அவர்கள் இறைவனுடன் கலந்து விட்டதனை நினைத்துப் பார்க்கும்போது, அவர்கள் இருவரும் எம் இனத்திற்கு, சமூகத்திற்குச் செய்த சேவைகள் யாவும் மனக்கண்ணில் தோன்றுகின்றன.

ஈழ நாட்டில் ஐம்பது வருடங்களுக்கு மேலாக சுடர் ஒளி வீசிய வியாகரண சிரோமணி அவர்கள் 12.11.1988 அன்று கந்தசஷ்டித் திருநாளில் சிவபதம் எய்தினார். தமிழகத்திலிருந்து எமது நாட்டிற்கு வந்து ஈழநாட்டைத் தமது தாயமாகக் கொண்டு, இங்குள்ளவர்களையே தமது உற்றார், உறவினராகக் கருதியும் அவர்களுடன் அன்பு, பண்பு, அறிவு கொண்டவராக மிகவும் உத்தமமாக வாழ்ந்து காட்டியவர்கள் இத் தம்பதியினர். சாஸ்திரிகள் அவர்களின் வேதசாஸ்திர

சம்பிரதாயங்களுக்கும், உபாசனை, பூஜை முதலிய காரியங்களுக்கும், உற்ற துணைவியாக விளங்கி, உத்தம பத்தினியாக வாழ்ந்து காட்டியவர் அவரது பாரியாரான சீதாலட்சுமி அம்மா அவர்கள். சீதாலட்சுமி அம்மா பாரதநாட்டில் அம்பாசமுத்திரம் எனும் ஊரில் 1916 ஆம் ஆண்டு பிறந்தவர். சீதாராமசாஸ்திரிகள் அவர்கட்கும் சீதாலட்சுமி அம்மாவுக்கும் இளம் பிராயத்திலேயே பால்யவிவாகம் நடைபெற்றது. அம்மா அவர்கள் அதிகம் படிக்காவிட்டாலும் உலக விஷயங்கள் முதல் பல விஷயங்களை அறிந்தவராகவும், எல்லாக் காரியங்களையும் பாராட்டும் படியாகச் செய்யும் வல்லமை கொண்டவராகவும், விளங்கினார்.

1946 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் சாஸ்திரிகள் குடும்பம் சிறப்பாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் அங்கு வாழ்ந்த காலம் மகிழ்ச்சியான காலம். சாஸ்திரிகள் பரமேஸ்வராக் கல்லூரியில் சமஸ்கிருத ஆசிரியராக தொழில் பார்த்துக் கொண்டும், அவர்கள் வீட்டின் முன் விறாந்தையில் சமஸ்கிருத வகுப்புக்கள் நடாத்திக் கொண்டும், வாரநாட்களில் நாவலர் பாடசாலையில் வகுப்புக்கள் நடாத்திக் கொண்டும் வந்தார். மாணவர்கள், பண்டிதர்கள், நண்பர்கள், கல்விமான்கள் முதலான பலரும் சாஸ்திரிகள் அவர்களுடன் தொடர்பு கொள்வதும் பாடங்கள் கேட்பதும், சோதிடங்கள் கேட்பதும், கோவில் விஷயங்களில் எழுகின்ற சந்தேகங்களை அவரிடம் வந்து கேட்டுத் தெளிந்து கொள்வதும் நாவலர் வீதியில் உள்ள அவரின் வீட்டில் தான் பகல்- இரவு என எந்நேரமும். இங்கு பலர் வந்து போவதைக் காணமுடியும். இவற்றுக்கு எல்லாம் உற்ற துணையாக சாஸ்திரிகள் அவர்களின் மனைவி சீதாலட்சுமி ஈடுகொடுத்து எல்லோரையும் உபசரித்து பதிவிரதா தர்மபத்தினியாக விளங்கினார்.

நாவலர் வீதியில் தம்பதிகள் இருவரும் நடந்து செல்கின்ற காட்சி மிகவும் அற்புதமானது. வண்ணைச் சிவன்

கோயில், சாந்தையார் மடம் பிள்ளையார் கோயில், பெருமாள் கோயில் என இவர்கள் சேர்ந்து செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

அக் காலத்தில் சாஸ்திரிகள் அவர்களும் அம்மா அவர்களும் எமது சமூகத்தில் இடம் பெறும் மங்களகரமான வைபவங்களை சிறப்பாக நடாத்தி வைப்பதனைக் காண இயலும். அந்தண குலத்தவர்களின் கல்யாண வைபவங்களையும், ருது, சாந்தி வைபவங்களையும் உபநயன வைபவங்களையும் சாஸ்திரிகள் சிறந்த முறையில் நடாத்தி வைப்பார். அதற்கு ஏற்றாற் போல அம்மா அவர்கள் துணைநின்று ஊஞ்சல் வைபவங்களையும், நலங்கு முதலான சடங்குகளையும் ஆலாத்தி நிகழ்வுகளையும் தம் தனித்துவமான திறமைகளை வெளிக்காட்டி சிறப்பாக நடாத்துகின்ற தன்மை எல்லோர் மனத்தையும் கவர்ந்தனவாக அமைந்திருந்தன. சாஸ்திரிகள் திருமண வைபவங்களை செய்து வைக்கின்ற முறைகளும், ஆசீர்வாத மந்திர உச்சரிப்புக்களும், அதன் ஒலிகளும் தனித்துவம் வாய்ந்தன. அவரது வீட்டில் இடம்பெறுகின்ற ஆவணி அவிட்ட உபாகர்மம் ஸ்ரீராம நவமி பூஜை, ராமர் பட்டாபிஷேகம், கிருஷ்ண ஜெயந்தி என் பன மிகச் சிறப்பாக நிகழ்கின்றபோது அக்காரியங்களில் ஈடு பட்டுள்ள அம்மா மடிசார் புடவையுடன் அழகாக எல்லாக் காரியங்களையும் பக்தி சிரத்தையுடன் செய்து வருவார். அம்மா அவர்கள் பக்தியுடன் பாடுகின்றபோது அவரது பெண் பிள்ளைகள் யாவரும் ஓடி ஓடி வேண்டியவற்றைச் செய்வதைப் பார்க்கின்றபோது பரவசம் மேலிடும்.

அம்மா அவர்கள் அறுசுவை உணவுகளை மிகவும் இனி மையாக தயாரிப்பதில் கை தேர்ந்தவர். அவர் பௌர்ணமி பூஜையின்போது செய்கின்ற பாயாசம் இன்றும் எமது நாவில் இனித்துக்கொண்டே உள்ளது. அவர் தயாரிக்கின்ற கைமுறுக்கு, கொழுக்கட்டை, திரட்டிப்பால், காரடை, அடைத்தோசை என்பன அவர் கைவந்த கலையம்சங்கள் கொண்டனவாகும்.

அம்மா அவர்களின் ஞாபகசக்தி அபாரமானது. பழைய சம்பவங்களை நினைவூட்டி பேசுவது கேட்போருக்குச் சுவார சியமாக விருக்கும். சாஸ்திரிகள் பாடம் சொல்லிக் கொடுக்கும் அழகு தனியானது. கருத்துக்களைப் பல கோணங்களில் இருந்து படம் பிடித்துக் காட்டுவதால் கருத்துக்கள் மாண வர்களின் மனதில் இலகுவிற் பதிந்து விடும். மேலும் சாஸ்தி ரிகளின் குரலில் இயல்பாகவே அமைந்து விளங்கும் கம்பீரம் மாணவர்களை அங்குமிங்கும் அசையாதவாறு கட்டிப் போட்டுவிடும். தமக்குரிய கணீரென்ற ஒலியுடன் இனிமை நிறைந்த சீரிய உச்சரிப்புடன், சமஸ்கிருத வாக்கியங்களை, பாடங்களைச் சொல்லிக் கொடுக்கும் பொழுது யாவரும் வசீ கரிக்கப்பட்டு மகுடிக்கு கட்டுட்பட்ட நாகம் போன்று மயங்கி நிற்பர். சாஸ்திரிகள் நகைச்சுவை புகுத்தி உரையாடும்பொழுது கேட்போருக்கு உற்சாகமூட்டி அவதானிக்கும் ஆற்றலை உண்டு பண்ணுபவையாக அமைந்திருக்கும். இக்காட்சிகள் யாவும் அவர் வாழ்ந்த நாவலர் இல்லத்தில் தினமும் காணும் காட்சிகளாகும். அம்மா அவர்கள் எல்லோரையும் அன்பாக வரவேற்று விருந்து படைத்து குறிப்பறிந்து காரியங்கள் செய்வதில் பதிவிரதையாகத் திகழ்ந்தார். மேலும் அந்தண சமூ கத்தவர்களின் பூஜை முதலான காரியங்களை உரிய முறை யில் செய்யவும் கலாச்சார முறைகளைக் கடைப்பிடிக்கவும் ஆலோசனை வழங்குவார். அம்மா அவர்கள் தமது வீட்டிற்கு அன்றாடம் தேவைப்படும் பொருட்களைப் பெறுவதற்காக மொட்டையன் கடைக்கு மடிசார் புடவையுடன் கூனி வளைந்து கொண்டு செல்லும் பொழுதும் திரும்பி வரும் பொழுதும் கணக்கு வழக்குகளை மனத்தில் கணித்தவாறோ, ஸ்ரீ இராம நாமத்தை உச்சரித்தவாறோ, வருகின்றகாட்சி இப்போதும் கண்முன்னே நிற்கின்றது.

பகவானுடைய இராம நாமத்தின் மகிமையை சாஸ்திரிகள் குடுபத்தவரின் வாழ்க்கையில் நாம் கண்டுள்ளோம். நாட்டில் பிரச்சனைகள் பல ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்களது

குடும்பம் பல இடங்களுக்கும் செல்ல வேண்டிய நிலை ஏற் பட்டது. எங்கு சென்றாலும் எவ்விடர் ஏற்பட்டாலும் இராம நாம ஜெபம் செய்த வண்ணம் இருப்பவர் அவர்கள்.

1985 காலப்பகுதியில் வண்ணார் பண்ணையில் அவர்கள் வசித்த 15ம் இல பி.ஏ. தம்பிலேன், வீட்டின் அருகில் குண்டுகள் வந்து வீழ்ந்து வெடித்தன. ஆனால் அவருக்கோ அல்லது குடும்பத்தவர் எவருக்குமோ காயம் ஏதும் ஏற்படவில்லை. மேலும் 1987 காலப்பகுதியில் நீர்வேலி கந்தசுவாமி கோயில் வீதியில் உள்ள குருக்கள் ஐயா வீட்டில் இருந்தபோதும் 1987 ஒக்டோபரில் நவாலி அட்டகிரி கந்தசுவாமி கோயிலில் தங்கியிருந்தபோதும் பயங்கரமான குண்டுகள் வந்து வீழ்ந்தன. அப்போதும் அவர்கள் அனைவரையும் காப்பாற்றியவை ராம நாம மந்திரமே ஆகும்.

நாட்டில் ஏற்பட்ட பிரச்சனைகள் காரணமாக அவரது பிள்ளைகள் பலர் நாட்டை விட்டு வெளிநாடு சென்றபோதும் சாஸ்திரிகள் தமது மகள் பார்வதியின் அரவணைப்பில் வாழ்ந்து தமது 77 வது வயதில்1988ஆம் ஆண்டு கந்தசஷ்டித் திருநாளில் சிவபதம் எய்தினார்.

அம்மா அவர்கள் ஏழு ஆண்டுகளாக தமது மகளுடன் வாழ்ந்து வந்தார். நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக தனது மகன் பாலசுப்பிரமணியன் அவர்களுடன் வாழ விரும்பி கனடா சென்றார். இங்கும் அவர்கள் ஏறத்தாழ14 வருடங்கள் தமது பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுடன் சந்தோஷமாக வாழ்ந்து, தனது 94 வது வயதில் 02-03-2011 சிவராத்திரி தினத்தன்று இறைவனுடன் கலந்து விட்டதனை அறிந்தபோது அம்மா அவர்களது வைதீக வாழ்வின் பெருமை யைக் கண்கூடாகக் காணமுடிந்து. அம்மா அவர்களது வாழ்க்கை முறையை அவரது புதல்விகள் ஓரளவாவது கடைப்பிடித்து வருவது மிகவும் போற்றத்தக்கதாகும். யாழ்ப்பாணத்தில் சமீபகாலமாக நடைபெற்று வருகின்ற மங்கள வைபங்களில்

அவரது புதல்வி பார்வதி முன்வந்து சிறப்பாக ஊஞ்சல், நலங்கு முதலான வைபங்களையும், சாமத்திய சடங்கின் போதும் வேண்டிய ஆலாத்தி முதலான நிகழ்ச்சிகளையும் பாடிப்பாடிச் செய்து வைக்கின்றமை இன்று பலராலும் பாராட் டப்படுகின்றது. சீதாலட்சுமி அம்மா சீதாராம சாஸ்திரிகள் செய்து வந்த சேவைகளை, வாழ்க்கை முறைகளை நாம் கடைப்பிடித்து வருவதே நாம் அவர்களுக்குச் செய்யத்தக்க சிறந்த சேவையாகும். "குரு சாஷாத் பரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம"

*தினகரன் 18-04-2011*

## தோல்விகளில் நல்வாய்ப்புகளை தேடுங்கள்

மனிதனின் எந்தவொரு முயற்ச்சியிலும் வெற்றிக்கு உத்தரவாதமில்லை. ஆனால் சிறிய சறுக்கலை தோல்வியாக நீங்கள் ஒரு போதும் கருதக்கூடாது. பந்தயத்தில் இரண் டாம் இடம் பெறுவது தோல்வியன்று. ஒரு புதிய அணுகுமுறை இது வரை செய்யாத முயற்சி போன்றவை அடுத்தமுறை நீங்கள் வெற்றி பெறுவதற்கு நிச்சயம் உதவும். இம்மாதிரி சூழ்நிலைகளில் தோல்வி என்னும் வார்த்தையைத் கூடப் பயன்படுத்தாதீர்கள். இது அடுத்தமுறை திருத்திக்கொள்ளக்கூடிய ஒரு தவறு. ஒரு பிழை. தவறான அடி மற்றும் ஒரு தவறான கணக்கேயாகும். வார்த்தைக்கு இவ்வாறு பயன் கண்டு உங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இதே மன நிலை உடையவராக இருந்தால் நீங்கள் ஏற்கனவே ஓர் வலுவான நிறைகாண்பவராகி விட்டீர்கள் என்று பொருளாகும். உண்மை என்னவென்றால். நீங்கள் பொறுமையான. அமைதியான தேடுத லில் ஈடுபட்டீர்களென்றால் கரிய மேகத்திலும் மின்னல் கீற்றுக்களை உங்களால் காண முடியும். "அசாத்தியம் என்பது முயற்சி இன்மையேயாகும்" - ஜிம் குட்வின்.

# இயல் 05

**பார்த்த, அனுபவித்த இசை நிகழ்ச்சிகள் பதிவுகள்**

- சென்னையில் மார்கழி இசைவிழா - 2008
- யாழ்மண்ணில் டென்மார்க் பாடகியின் இசை
- பலரையும் பரவசப்படுத்திய இசை நிகழ்ச்சி - 2010
- யாழ்ப்பாணத்தில் மேடையேறிய காளிதாசரின் நாடகம்
- இளங்கலைஞர் மன்ற தெய்வீக இசையரங்கு - 2005
- நல்லூர் முருகன் தெய்வீக இசையரங்கு - 2009
- இளங்கலைஞர் மன்ற தெய்வீக இசையரங்கம் 2010
- கலைமாமணி பூஷணி கல்யாணராமன் இசை 2011
- நல்லூர் சூழலில் உற்சவகால இசை - 2012
- திருச்சியல் செல்வி சௌவர்ணியின் நடன அரங்கேற்றம் - 2012
- யாழ்ப்பாணத்தில் நாதஸ்வர கலைஞர்கள்



# சென்னையில் மார்கழி இசைவிழா 2008

ஆண்டுதோறும் சென்னை மாநகரம் மார்கழி மாதத்தில் விழாக்கோலம் பூண்டு எங்கும் மக்கள் இசை வெள்ளத்தில் மூழ்குவதனைக் காணக்கூடியதாக உள்ளது. எங்கு பார்த்தாலும் சபாக்கள் அலங்காரமுடன் காட்சி கொடுத்து வெகு உற்சாகமாக இசைக்கலைஞர்களும், இசை ரசிகர்களும் சந்தோசமாக கலந்துகொள்வது மிகவும் சந்தோசமாக உள்ளது. சென்ற 2008ம் ஆண்டு மார்கழி இசைவிழா உற்சவம் சென்னையில் பற்பல புதிய சபாக்கள் உருவாக்கப்பட்டு இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தமை இசைப்பிரியர்களுக்குக் கண்கொள்ளாக் காட்சியாகவும், செவிக்குப் பெருவிருந்தாகவும் அமைந்தது.

சென்னையில் மிகவும் பிரபல்யம் பெற்ற சபாக்களில் இசை நிகழ்ச்சிகள் செய்வதற்கு மிகவும் தரம் வாய்ந்த சிறந்த கலைஞர்களுக்கே முதலிடம் வழங்கப்படும்.

மாலை நிகழ்ச்சிகள் தான் சிறப்பானதாக சிறந்த புகழ்பூத்த கலைஞர்கள் பங்குகொள்வர். இத்தகைய சபாக்களில் இசை நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு முற்கூட்டியே பருவச்சீட்டுக்கள் விற்பனை ஆகிவிடுகின்றன.

இங்கு சபாக்களில் வாராந்த நாள்களில் பகல், மாலை, இரவு என இசை நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்ற வண்ணம் இருக்கும். பகல் நிகழ்ச்சிகள் இலவசமாகப் பார்க்கமுடியும். இசைக்கலைஞர்கள் ரசிகர்களை மிகவும் கவரும்வண்ணம் தமது வித்துவத்தன்மையினை வெளிப்படுத்துவர். ரசிகர்களும் அதனை மெய்மறந்து மிகவும் உற்சாகமாக ரசித்து, பாராட்டி, கைதட்டி, தமது பாராட்டுதல்களை தெரிவிப்பர். சென்னையில் நடைபெறும் இத்தகைய இசைவிழாக்களில் ஆண்டுதோறும் ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் கீழைத்தேய இலங்கை போன்ற நாடுகளில் இருந்தும் பல தமிழர்கள் தவறாது வரு கின்றமை காணக்கூடியதாக உள்ளது.

சென்னையில் உள்ள சபாக்களில் மிகவும் பிரபல்யம் வாய்ந்தனவாக மிளிர்பவை மியூசிக் அக்கடமி, நாரத கான சபா தமிழ் இசைச் சங்கம், பாரதிய வித்யாபவன் கிருஷ்ணகானசபா இந்தியன் பைன் ஆட்ஸ், வாணி மகால் பிரம்மகான சபா, கலாரசனா ஸ்ரீபார்த்தசாரதி சபா என்பன குறிப்பிடத்தக்கனவாகும்.

பிரபல்யம் பெற்ற சிறந்த இசைப்பாடகர்களான ரி.என். சேஷகோபாலன், சஞ்சேய் சுப்பிரமணியம், ரி.எம்.கிருஷ்ணா, அருணா, சாயிராம், நெய்வேலி சந்தானகோபாலன், ஓ.எஸ். தியாகராஜன், ஓ.எஸ். அருண், ரி.வி. சக்கரநாராயணன், சுதா ரகுநாதன், நித்யஸ்ரீ மகாதேவன், பிரியா சகோதரிகள், ரஞ்சனி, காயத்திரி, உன்னிகிருஷ்ணன், யேசுதாஸ், மல்லாடி சகோதரர்கள் ஆகியோரது இசை நிகழ்ச்சிகள் சபை நிறைந்து சிறப்பாக அமைந்தன. அவர்கள் ராக ஆலாபனை ராகம்,

தானம், பல்லவி ராகமாலிகையில் பாடி நிரவல் செய்து மிகவும் சாரீர சுத்தமாகவும் கம்பீரமாகவும் இனிமையாகவும் பாடி ரசிகர்களின் பலத்த பாராட்டுதல்களைப் பெற்றனர்.

வாத்தியக் கலைஞர்களில் தனியாக வாத்தியங்கள் வாசித்த வயலின் ஜி.ஜே.ஆர். கிருஷ்ணன் விஜயலக்சுமி, கணேஸ், குமரேஸ் ஆகியோரும் மெண்டலின் யு.ஸ்ரீனிவாஸ் என்பவரும் சித்தர வீணை ரவிக்கிரன், சக்சப்போன் கதிரி கோபிநாத், புல்லாங்குழல் என். ரமணி ஆகியொரும் கிறப்பாக வாசித்த முதல்தர இசைக்கலைஞர்கள் ஆவர். மிருதங்க கலைஞர்களான உமையாள்புரம் சிவராமன், திருவாரூர் வைத்தியநாதன், வி. பிரசாத், பி. கணபதிராமன், ஸ்கந்த சுப்பிரமணியன், திருச்சி சங்கரன், குருவாயூர் துரை, ரி. பக்தவத் சலம், மன்னார்குடி ஈஸ்வரன் ஆகியோர் சிறப்புவாய்ந்த இசைக்கலைஞர்களின் கச்சேரிகளில் சிறப்பாக மிருதங்கம் வாசித்து பலத்த பாராட்டுக்களைப் பெற்றவர்களாவர்.

சென்னை இசைவிழாக்களில் பல்வேறு சபாக்களிலும் கண்ணிற்கும் காதுக்கும் இசை விருந்தாவதுடன் பல வகைகளான அறுசுவை உணவுகளையும் உண்டு மகிழ்வதற்கும் முடிகின்றது. உண்மையில் சென்னையில் கடந்த மார்கழி மாதம் முழுவதும் மெய்மறந்து இத்தகைய சிறந்த இசையினை ரசிக்க, பார்க்கமுடிந்தமை மறக்கமுடியாத நிகழ்வாகும். இதுபோன்று எமது நாட்டிலும் இசைவிழாக்கள் முன்னைய காலங்களில் நடைபெற்றன போன்று எதிர்காலத்தில் எமது கலைஞர்களும் தென் இந்திய கலைஞர்களும் பங்குகொள்ளவும் ரசிகர்கள் பார்க்கக்கூடியதாகவும் அமைய காலம் கைகூட வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

*உதயன் 18.04.2009*



# யாழ். மண்ணில் டென்மார்க் பாடகியின் இசை

அண்ணாமலைப் பல்கலைக்கழக பட்டதாரியும் முது கலை மாணிப் பட்டத்தை சென்னைப் பல்கலைக்கழகத்தில் பெற்றவரும் டென்மார்க்கினை வதிவிடமாகக் கொண்டவரும் எமது நாட்டினரு மான . செல்வி. அபர்ணா குகதாசனின் இசை அரங்கம் நல் லூர் துர்க்கா மணி மணிமண்டபத்தில் அமைதியான முறையில் சிறப்பாக கடந்த 2010, 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஆறு திருமுருகன் அவர்களின் தலைமையில் நடந்தேறியது. இந் நிகழ்வு பலராலும் பாராட்டப்பட்டதாகும். இருபத்திரண்டு வயதே நிரம்பிய இவ் இளம் பாடகி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முறையாக இசை பயின்று பட்டங்களைப் பெற்றுள்ளார் என்பத னைத் தனது இசைஞானத்தின் மூலமாக வெளிக்கொண்டு வந்து பாடி ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றதன் மூலம் நிரூபித் துள்ளார்.


டென்மார்க்கை வதிவிடமாகக் கொண்டதால் அன்னிய மொழியில் மட்டும் திறமையும், தமிழை சிறிதளவும் அறிந்த செல்வி அபர்ணா, பெற்றோரின் விருப்பத்தினாலும் அவரது இசை ஆர்வத்தினாலும் சென்னை சென்று முறையாக கர்நாடக இசை பயின்று பட்டம் பெற்று நல்ல குரல் வளத்துடன் இசை ஞானம், ஆர்வம், உற்சாகம் என்பன கூடிவர அமையப்பெற்று பாடி ரசிகர்களின் உள்ளங்களைக் கவர்ந்தார். பாரம்பரிய முறையில் மிகவும் எளிமையாக நடை, உடை, பாவனையுடன் அமர்ந்திருந்து அரங்கேற்ற நிகழ்வினை நடத்தினார் எனலாம்.

சாவேரி ராக வர்ணத்துடன் ஆரம்பித்த இவரது இசை நிகழ்வு கம்பீர நாட்டை ராகத்தில் அமைந்த விநாயகர் கீர்த் தனையினை வெகு லாவகமாக சுரக் கோவைகளுடன் பாடி ஆரம்பத்திலேயே வரவேற்பினைப். பெற்றமை குறிப்பிடக்கூய அம்சமாகும். தொடர்ந்து பீம்பிளாஸ் ராகத்திலும் பின்னர் காம்போதி ராக ஆலாபனை செய்து "எவரிமாற்ற வின்ன" என்னும் தியாகராஜ கீர்த்தனையினை மிகவும் விரிவாகச் சிறப்பா நிரவல் சுரங்கள் செய்து பாடியமை பாராட்டத்தக்கது. தோடி ராகத்தில் ஆலாபனை செய்து அதில் தானம் செய்து "அம்மா மாதம்மா" என்னும் பல்லவியினை சிறப்பாகப் பாடியமையும் குறிப்பிடக்கூடியனவாகும். தொடர்ந்து சபையின ரைக் கவரக்கூடிய விதமாக இனிமையான பாடல்கள் பாடிய மையும் சிறப்பானதாகும்.

இவரது இசை நிகழ்ச்சிக்கு அணிசெய்த இசைக் கலை ஞர்களான வயலின் கா.குகபரன் இணைந்து பவ்யமாக வாசித் தமையும், மிருதங்க கலைஞர் நா. மாதவன் அவர்களின் மிருதங்க இசையும், கெஞ்சிரா முகர்சிங் இசையும் கச்சேரி சிறப்பாக அமையக் காரணமாக இருந்தன.

ஆரம்பத்தில் செல்வி அபர்ணா பயந்த வண்ணம் இருந் தாலும் பின்னர் துணிவுடன் பாடி பாராட்டுக்கள் பெற்றார். செல்வி அபர்ணா அவர்களின் அரங்கேற்ற நிகழ்வு ஆரம்பந்தான். இவர் கற்றுக்கொள்ளவேண்டிய இசை நுட்பங்கள், பயிற்சி கள், சாதகங்கள் ஏனைய பெரிய வித்துவான்களின் இசை நிகழ்ச்சிகளைப் பார்ப்பதன்மூலமும் கேட்பதன் மூலமும் தனது இசை அறிவினைப் பெற்றுக்கொள்ளமுடியும். தமது சொந்த மண்ணில் தமது நண்பர்கள், உறவினர்கள், ரசிகர்கள் மகிழும் வண்ணமாக இங்கு வந்து பாடி எம்மவர்களின் சிறப் புக்களை நாம் காண அரிய வாய்ப்பினை வழங்கிய கலை-ஞர் குடும்பத்தினரை எல்லோரும் பாராட்டியமை மகிழ்ச்சிக் குரியதாகும். தொடர்ந்தும் எமது நாட்டுக் கலைஞர்கள் வெளி நாட்டிலிருந்து வந்து தமது திறமைகளை எம் மக்கள் காண சந்தர்ப்பம் அமைவதற்கு இந்த நிகழ்ச்சி ஓர் உதாரணமாகும்.

உதயன் *05.06.2010*



# பலரையும் பரவசப்படுத்திய இசை நிகழ்ச்சி

சென்ற செவ்வாய்க்கிழமை 2010ம் ஆண்டு 8ம் திகதி மாலை 6 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இந்தியாவிலிருந்து வந்த அக்கரைச் சகோதரிகளான சுபலக்ஷ்மி, சொர்ணலதா என்னும் இரு இளம் இசைக் கலைஞர்களின் வயலின் வாத்திய விருந்தினை பிரபல தொழில் அதிபர் ஈ.எஸ். பி. நாகரத்தினம் அவர்களின் ஏற்பாட்டில் இசைத்துறை சார்ந்த ரசிகர்களும் கலைஞர்களும் ஆர்வலர்களும் காணும் வகையில் ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

இந்திய தேசம் இசைத்துறையில் மிகவும் உயர்ந்து பெரும் கலைஞர்கள் உருவாகி நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றனர். அந்த வகையில் இவ் இளம் வயலின் கலை ஞர்களும் தனித்திறமை படைத்தவர்கள். அவர்கள் இருவரும் இணைந்து வெகு சிறப்பாகவும் இனிமையாகவும் ரசிகர்களைக் கவரும் வண்ணம் பாடல்களைத் தெரிந்து வாசித்து பெரும் பாராட்டுக்களைப் பெற்றனர்.

சாவேரி ராக வர்ணத்துடன் வயலின் இசை ஆரம்பமானது. ஹம்சத்வனி ராகத்தில் வாதாபி கணபதிம் எனும் விநாயகர் கீர்த் தனையை ஆலாபனை செய்து வாசித்து சுரங்கள், பல சங்கதிகள் என்பன விரைவுடன் துரிதமாக வாசித்தமை பாராட்டத்தக்கது. தியாகராஜரின் பஞ்சரத்தின் கீர்த்தனைகளில் ஒன்றான ஆரபி ராகத்தில் அமைந்த 'சாரஞ்சனி' என்னும் கீர்த்தனையை வெகு

சுருக்கமாக வாசித்து பின்னர் வராளி ராக ஆலாபனை செய்து அதில் மிகவும் பிரசித்தமான 'காவா வா கந்தா வா' என்னும் பாபநாசம் சிவன் பாடலினை பல நிரவல்கள் செய்து இணைந்து வாசித்தனர்.

பிலகரி ராக 'பரிதாப மிச்சி தே' எனும் பாடலினைத் தொடர்ந்து சண்முகப்பிரியா ராகத்தில் ஆலாபனை மிகவும் பிரமாதமாகவும், விஸ்தாரமாகவும் வாசித்து அதில் தானம் செய்து பல்லவியினை ராக மாலிகையில் கம்சானந்தி: பெகாக்: தேஷ் முதலான ராகங்களில் வாசித்தமை பிரமாதமாக அமைந்தது.

பக்க வாத்தியக் கலைஞர்களின் தனி ஆவர்த்தனம் நிகழ்வில் மிருதங்கக் கலைஞர் என் மாதவன் தனது தனித்திறமையினை மிருதங்க வாசிப்பின்மூலம் வெளிக்காட்டி சபையினரின் பலத்த கரகோசத்தினைப் பெற்றார்.

'சின்னஞ்சிறு கிளியே' என்னும் பாடலினை ராகமாலிகையில் வாசித்து சிந்து பைரவி ராகத்தில் "விஸ்வேஸ்வர தரிசனமே" என்னும் பாடலினை இணைந்து இனிமையாக வாசித்து தில்லானாவுடன் பலத்த கரகோசத்தின் மத்தியில் நிறைவு பெற்றது. அவர்கள் இடையிடையே ராகங்களின் பெயரினையும் பாடலினையும் கூறியமையினால் பலரும் பயன் அடைந்தனர். ஒலிவாங்கி மட்டும் குளறுபடி செய்யாது அமைந்து இருந்தால் இசை நிகழ்வு மிகவும் ஒலி அமைப்புடன் சிறப்பாக இருந்திருக்கும்.

இசைத்துறை சார்ந்த மூத்த கலைஞர்கள் பலரும் நுண்கலைப்பீட இசைத்துறை சார்ந்தோர்களும் இசை பயில்பவர்களும் பெருமளவு கலந்துகொள்ளாமை பெரிய குறைபாடாகப் பலரும் கூறினர். அழைப்பிதழ்கள் தனித் தனியாக எவருக்கும் விடுக்காதபோதும் இது ஓர் பொது நிகழ்ச்சி என்பதனால் ரசிகர்கள், ஆர்வலர்கள், மூத்த இசைக் கலைஞர்கள் பெருமளவாக வந்து கலந்து சிறப்பித்து இருந்தால் எல்லோருக்கும் பெருமையாக அமைந்திருக்கும். எதிர்காலத்தில் இவ்வாறான இசை நிகழ்வுகள் நடக்கும்பொழுது எமது மூத்த இசைக்கலைஞர்கள் தவறாது கலந்து ஆதரவு கொடுப்பார்கள் என இசை உலகம் எதிர்பார்க்கின்றது.

*30.06.2010*



# யாழ்ப்பாணத்தில் மேடையேறிய காளிதாசரின் அபிஞ்ஞன சகுந்தலா நாட்டிய நாடகம்

இந்திய - இலங்கை நட்புறவுக் கலாசார நிகழ்வாக இம்மாதம் மே 5ம் திகதி மாலை வீரசிங்கம் மண்டபத்தில் மிகப் பிரமாண்டமான ரசிகர்கள் கூடியிருக்க காளிதாசரின் அபிஞ்ஞன சகுந்தல் நாட்டிய நிகழ்வு மேடையேறியமை நினைவுகூரத்தக்கது. அரு ஸ்ரீ கலையகம், கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதனின் நெறியாள்கையில், புதிய யுத்திகளும், கற்பனை வளங்களும் கொண்டதாகக் காளிதாசரன் அபிஞ்ஞன சகுந்தலை என்னும் கவிதை நாட்டிய நாடகம் வெகு சிறப்பாக மேளவாத்தியங்கள் ஒலிக்க மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது.

அபிஞ்ஞன சகுந்தலம் என்னும் நாடகம் சமஸ்கிருத மொழியில் அமைந்த காவியம் - கதையின் சாராம்சம் - தேவலோகத்தில் இந்திரசபையில் இந்திர தேவர்கள், ஊர்வசி, மேனகை, ரம்பை, திலோத்தமை ஆகியோரின் நாட்டியத்தில் மகிழ்ந்திருக்கும் வேளையில் விஸ்வாமித்திரரின் உக்கிரமான தவத்தால் யாகத்தை கலைக்க மேனகை விஸ்வாமித்திரரை மயக்கி யாகத்தைக் குலைக்கின்றாள்.

முனிக்கும் தேவலோக மங்கைக்கும் பிறந்த குழந்தையை அங்கு அழைத்துச் செல்லமுடியாத மேனகை விட்டுச் செல்கிறாள். சகுந்தலை கன்வரிஷியால் வளர்த்து சகுந்தலை அழகிய பெண்ணாக வளர்கிறாள். துஷ்யந்த மன்னன் சகுந் தலையின் அழகில் மனம் பறிகொடுத்தான். இருவரும் காந் தர்வ மணம் புரிந்து பிரியும் வேளையில் ஞாபகமாக தனது கணையாளியைக் கொடுத்துச் செல்கின்றான் துஷ்யந்தன். பிரி வின் வேதனையால் மனம் கலங்கிய சகுந்தலை துர்வாச முனிவரின் சாபத்திற்கு உள்ளாகிறாள். சாப விமோசனமாக துர்வாச முனிவர் அடையாள ஆபரணத்தைத் துஷ்யந்தன் காணும்போது சாபவிமோசனம் கிடைக்கும் எனக் கூறிச் செல்கிறார். சகுந்தலை புனித நதியில் நீராடியபோது அவள் விரலிலிருந்த கணையாழி நதியில் விழுகிறது. மீன் வயிற்றில் ஒரு மோதிரம் இருப்பதனைக் கண்ட மீனவத் தலைவன் அதனை எடுத்து விற்கச் சென்றபோது அரச காவலாளியால் கண்டு அவனை ராஜ சபைக்கு இழுத்துச் சென்று முறையிடு கிறான். கணையாளியைக் கண்ட துஷ்யந்தன் சகுந்தலையின் நினைவு வரவே மனம் வெதும்புகிறான்.

துஷ்யந்த மஹாராஜன் இந்திரனுடன் சென்று இருந்த வேளையில் ஆச்சிரமத்தில் சிறு பையன் ஒருவன் சிங்கத்துடன் விளையாடிக்கொண்டு நிற்பதைக் கண்டான். முனி காசிபரால் சிறுவனின் பாதுகாப்பிற்காக அணியப்பட்ட ரட்சை தந்தை, தாயைத் தவிர வேறு யாராவது தொட்டால் பாம்பாக மாறிக் கொத்திவிடும். துஷ்யந்தனுக்கு ஒரு தீங்கும் நேராத தால் இது சிறுவனின் தந்தையாக இருக்கும் என ஊகித்து சகுந்தலையிடம் தெரிவிக்கின்றனர். சகுந்தலையைக் கண்ட துஷ்யந்தன் மனம் உருகி மன்னிப்பு வேண்டுகிறான். இதுதான் கதைச்சுருக்கம்.

துஷ்யந்தனாக நடித்த திரு பி.என். விகாஸ் என்பவர் இந்திய கலாச்ஷேத்திராவில் விரிவுரையாளர் கேரளாவைச் சேர்ந்தவர். இவரது அழகும் உடல் தோற்றமும், வசீகரமும் ரசிகர்களை மிகவும் கவரத்தக்கதாக அமைந்தன. மிகச் சிறப்பாக நடித்து பாராட்டினைப் பெற்றார். சகுந்தலையாக நடித்த லக் சுமி சுப்பிரமணிய சர்மா என்பவர் எமது நாட்டினர். இவரது

அழகும் மென்மையும் கவர்ச்சிகரமான தோற்றமும் நடிப்பும் மிகவும் சிறப்பானதாக அமைந்தது. இவரது முகபாவங்களும் முத்திரைகளும் வெகு அழகாக இருந்தது. மேனகாவாக அபிராமி காண்டீபன் அவர்களும் சிறப்பாக நடித்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றார். இந் நாடகத்தில் நடித்த சிங்கள, தமிழ் நடிகர்கள் வெகு சிறப்பாக நடித்து விறுவிறுப்பாக நடைபெற ஆவன செய்தனர். இதில் நாட்டிய நாடகம் இடைவேளையின்றி தொடர்ந்து காட்சிகள் அமைந்தமை பாராட்டத்தக்கது.

இந்நிகழ்வில் பாடிய ஸ்ரீ.ஏ. ஆரூரனின் கம்பீரமான இனிய குரல் இசையும் அபர்ணா அருணாசலம் என்பவரின் இனி மையான குரலும் நாட்டிய நாடகத்திற்கு வெகு சிறப்பினை வழங்கின. அத்துடன் பக்கவாத்தியக் கலைஞர்களின் மிருதங்க இசை, வயலின் இசை, புல்லாங்குழல் இசை, தபேலா இசை, கீபோட் இசை என்பன அவர்களின் கைவண்ணங்களினால் ஒருங்கே வாசிக்கப்பட்டு நாட்டிய நாடகத்தினை மிகவும் மெருகூட்டிச் சிறப்பாக அமையக் காரணமாகின. பக்கவாத்திய கலைஞர்களின் முகங்களினையும் அவர்களின் வாசிப்புத் திறனையும் நேரில் பார்க்கமுடியாது போனமை வருந்தத்தக்கது.

இந்நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியவர்கள் எவ்வளவு சிறப்பாகச் செய்தபோதும் ஒலி அமைப்பில் தெளிவு இன்மை சில குறைபாடுகளினை ஏற்படுத்தியது. பாடியவர்களின் குரல்கள் தெளிவாகக் கேட்க முடியாத வண்ணம் அதன் ஒலிவாங்கி அமைந்தமை குறைபாடாக இருந்தன. நிகழ்ச்சியின் ஆரம்பத்தின்போது நாட்டிய நாடகத்தின் கதையின் சுருக்கத் தினை தெரிவித்திருந்தால் ரசிகர்கள் கதையினை முழுமை யாகப் பார்த்து அறியமுடிந்திருக்கும்.

பல ஆண்டுகளின் பின்னர் இத்தகைய ஒரு சிறப்பான நிகழ்ச்சியினை யாழ். மக்கள் பெருந்திரளாக வந்து பார்க்க ஏற்பாடுகள் செய்தவர்களுக்கு மக்கள் தமது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றனர்.

உதயன்



# இளங்கலைஞர் மன்ற தெய்வீக இசையரங்கு கண்ணோட்டம் 2005

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி இளங் கலைஞர் மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தெய்வீக இசை யரங்கு வழமைபோன்று இந்த ஆண்டும் 2005 நல் லூர் துர்காதேவி மணிமண்டபத்தில் 27 நாட்கள் ஒரு மணி நேர நிகழ்வாக நடைபெற்று வந்தது. இளங்கலைஞர் மன் றம் இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடனும், இசை ஆர்வலர்களுக்கு ஒரு விருந்தாகவும் வருடாவருடம் நடத்தி வரும் இசை நிகழ்வு மிகவும் பாராட்டத்தக்கது.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கச்சேரிகள் நடத்தப்பட்டு வந்தன. இதில் இணுவில் கே. ஆர். சுந்தரமூர்த்தி குழுவி- னரின் நாதஸ்வரக் கச்சேரியும், பி. ரஜீந்திரன் குழுவினரின் கெஞ்சிராக் கச்சேரியும் வெகு சிறப்பாக ரசிகர்களைக் கவர்ந்த வையாக அமைந்தன.

பொதுவாக இந்த நிகழ்வில் கலந்துகொண்ட இளங்கலைஞர்கள் தாம் கற்ற இசைக்கலையை மேடையில் அப்படியே பாடி, ஒப்படைத்தமை ரசிகர்களை அதிகம் கவரவில்லை. அவர்கள் தாம் பாடமாக்கி, பயின்ற இசையை மேடையில் ஏறி, மீட்டுப் பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பமாகவே இதனைப் பயன் படுத்தினர். இந்த நிகழ்வில் பாடிய எஸ். உமாரமணசர்மா, கே.ஜே. யேசுதாஸின் பாணியில் பாடல்களைப்பாடி, ரசிகர்களிடம் பாராட்டுப்பெற்றார் எனலாம். அவர் இன்னமும் இசைநுணுக்கங்களை கற்கவேண்டியுள்ளது.

செல்வி தாரணி ரஞ்சன் நல்ல குரல்வளம் உள்ளவர். அவராக ஆலாபனை நிரவல், கரங்கள் என்பன கற்று எதிர் காலத்தில் சிறந்தகலைஞராக வரமுடியும்.

திருமதி. வாஸஸ்பதி ரஜீந்திரன் வழமைபோன்று தனது தனித்துவமான திறமைகளைக் காட்டி, நித்தியஶ்ரீயின் பாணியில் பாடி, பாராட்டுதல்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. எஸ். குமாரசாமி என்பவர் பலத்த குரலில் சீர்காழி கோவிந்தராஜனின் மெருகில் பாடினார். செல்வன் அருணந்தி ஆரூரன் என்னும் இளைஞர் மிகவும் சிறப்பாக, அனுபவமுடைய வித்துவான் போன்று பாடி, ரசிகர்களின் பலத்த கரகோஷத்தைப் பெற்றார். இவர் எதிர்காலத்தில் தரமான வித்துவானாக வர வாய்ப்புகள் நிறையவுள்ளன.

பொன் ஶ்ரீ வாமதேவன் அன்று தொட்டு, இன்றுவரை நிலைத்து நிற்கும் தரமான பாடகராக உள்ளார். இவரது கச்சேரியையும் அதிக ரசிகர்கள் பார்த்து ரசித்தனர். பக்க வாத்தியங்களும் இவருக்கு அனுசரணையாக வாசிக்கப்பட்டு, இவரதுகச்சேரியை சிறப்படையச் செய்தனர். ஏ.கே.கருணாகரன் தரமான, சிறந்த முதன்மைக் கலைஞர். அவர் பாடினால் இந்திய பெரும் கலைஞரின் கச்சேரியைக் கேட்பது போன்று அமைந்துவிடுகிறது. கே. இராமநாதன் இன்னிசை நிகழ்வு மிகவும் களைகட்டியதாக அமைந்தது. அவரும் இந்திய

பெரிய வித்துவான் பாடுவது போன்று ராக ஆலாபனை, சுரம், நிரவல் என்பன செய்து கற்பனாசுரம் செய்து பாடி மகிழ்வித்தார். அவர் பாடிய பந்துவராளி ராக ஆலாபனை நிரவல் என்பன ரசிகர்களின் மிகுந்த பாராட்டுகளைப் பெற் றன. தரமான நிகழ்வுகளுக்கு ஒரு மணிநேரம் போதியதாக அமையவில்லை.

இளங்கலைஞர் மன்றத்தால் வழங்கப்பட்ட நிருத்தியாஞ் சலி என்னும் நடன நிகழ்வை பூங்காவனத் திருவிழாவன்று மண்டபம் நிறைந்த இசை ரசிகர்கள் ரசித்தமை சிறப்பாக அமைந்தது. எந்த நிகழ்வானாலும் தரம் மிக்கதாக, கவரக் கூடியனவாக அமைந்தால் அதை ரசிகர்கள், ஆர்வலர்கள் விரும்பிப் பார்பதைக் காணமுடியும். ஆனால், இந்த முறை இங்கு நடைபெற்ற இசை நிகழ்ச்சிகளுக்கு ரசிகர்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டனர். சில ஆண்டுகளுக்கு முன்னர் பொன் சுந்தரலிங்கம் முதலான கலைஞர்கள் முன்னின்று நடத்திய இசைநிகழ்வுகளில் பல ஆயிரம் ரசிகர்கள் கலந்து சிறப்பித்தனர். எதிர்காலத்தில் இளங்கலைஞர்களை தரமான தாக்க இத்தகைய மன்றங்கள் முன்வரவேண்டும். இராம நாதன் நுண்கலை மன்றம் அதன் இசைத்துறைத் தலைவராக் சிறந்த அனுபவம்மிக்க, தரமான ஒருவரை நியமித்து கலை ஞர்களை ஊக்குவிக்க முன்வந்தால் எதிர்காலத்தில் எம் இசைக்கலைஞர்கள் தரமான சிறந்த கலைஞர்களாக வர முடியும்.

ஈழநாடு
21.09.2005

"நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவிபுரிவதும் உலகிற்கு நன்மை செய்வதும் தான்"

● சுவாமி விவேகானந்தர்



# நல்லூர் முருகன் தெய்வீக இசையரங்கு நிகழ்வு 2009

வருடம்தோறும் நல்லூர் முருகன் உற்சவ காலத்தின் போது இளங்கலைஞர் மன்றத்தினரால் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கு மிகவும் பாராட்டத்தக்கதாக அமைந்துள்ளது. இளங்கலைஞர் மன்றத்தின் ஆரம்பகால செயலாளராக இருந்த பொன், சுந்தரலிங்கம் அவர்களால் நல்லூரில் உற்சவகாலங்களில் முருகன் அடியார்களும் இசை ஆர்வலர்களும் இளம் பாடகர்களும் மூத்த கலைஞர்களும் பங்குகொண்டு மகிழ்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட இத்தெய்வீக இசைவிழா நிகழ்வு தொடர்ந்து பல ஆண்டுகளாக சேவை ஆற்றிவருவது எல்லோராலும் வரவேற்கப்பட்டதாக அமைந்துள்ளது. தெய்வீக இசையரங்கில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சங்கள் இங்கு தமிழ் கீர்த்தனங்கள் பாடப்படுகின்றன. முருகப்பெருமான்மீது பாடப்பட்ட சாகித்தியங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றன. எல்லா நிகழ்வுகளும் குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பித்து குறித்த நேரத்தில் நிறைவுசெய்யப்படுகின்றன. இளங்கலைஞர்களுக்கும் மூத்த கலைஞர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படுகின்றன.

இவ் ஆண்டு 2009 நடைபெற்ற தெய்வீக இசையரங்கு நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை மாறி மக்கள் பட்ட துயரங்கள், இழப்புக்கள், பயப்பீதிகள் யாவற்றையும் சி-றிய நேரமாவது மறந்து இசையின் மூலம் மனத்தினைச் சாந்தப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. முதல் சில தினங்கள் இளங்கலைஞர்கள் நிகழ்வுகளும் மஞ்சத் திருவி ழாவின் பின்னர் மூத்த கலைஞர்களும் பங்குகொண்டு இசை நிகழ்வினை வழங்கினர்.

எஸ். குமாரசாமி அவர்களின் இசைநிகழ்வு சீர்காழி கோவிந்தராஜனின் மெருகில் அமைந்தது. திருக்கார்த்திகை உற்சவ தினம் செல்வி பரமேஸ்வரி கணேசன் மிகவும் இனி மையாக யாவரும் பாராட்டக்கூடியதாக பாடினார்.

கைலாய வாகனத் திருவிழாவன்று திருமதி வாஸஸ்பதி ரஜீந்திரன் அவர்களின் இசை நிகழ்வு மிகவும் தரமானதாக அமைந் தது. அவர் சாவேரி ராகத்தில் பாடிய "முருகா முருகா என்றால் உருகாதோ" என்ற கீர்த்தனம் மிகச் சிறப்பாக இருந்தது. அவருக்கு அணிசெய் வயலின் வாசித்த கலைஞர் செல்வி பாக்கியலட்சுமி நடராசா அவர்கள் மிகவும் உறுதுணையாக மெருகூட்டி வாசித்தமையினை ரசிகர்கள் பாராட்டினர்.

தங்கரதத் திருவிழாவன்று மூத்த கலைஞர் எல். திலக நாயகம் போல் அவர்களின் இசை நிகழ்ச்சியில் தர்பார் ராக ஆலாபனை சிறப்பாக அமைந்தது. சிந்து பைரவி ராக தில் லானா நன்றாக இருந்தது.

இவர் இளமைக்காலத்தில் பாடியபோது மிகவும் விரி வாக ஆலாபனை செய்து, துரிதமாக விரைவுடன் சுரங்கள் செய்து பல சங்கதிகளுடன் பாடுவது இன்றும் ரசிகர்களின் மனக்கண்ணில் தெரிவதாகக் கூறினர். இவரது கச்சேரி திருப் புகழ்பாடி நிறைவுற்றிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

தண்டாயுதபாணி உற்சவ நாள் வயலின் சோலோ நிகழ் வாக ஆர். ராதாகிருஸ்ணன் குழுவினர் நிகழ்த்திய இசையரங்கு சபையினரை வெகுவாகக் கவர்ந்தது. இந்திய வயலின் கலை ஞர்கள் லால்குடி சி.ஜே.ஆர். கிருஷ்ணன் போன்று வாசித்தமை உணரமுடிந்தது. அவர் அன்று கம்பீர நாட்டையில் மல்லாரி மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. பூர்வ கல்யாணி ராகத்தில் "ஆனந்த நடனமாடுவார்" என்ற கீர்த்தனம் வெகு சிறப்பாகக் காணப்பட்டது. வலர்ஜிராக "கூவி அழைத்தால் வருவான் குமரன்" என்பதும் மத்தியமாவதி ராகத்தில் "கற்பகமே கடைக்கண்பாராய்" என்ற கீர்த்தனங்கள் நன்றாக அமைந்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றன. இறுதியாகச் சிந்து பைரவி ராக தில்லானாவுடன் நிறைவு செய்தபோது ரசிகர்கள் அசையாது மேலும் வாசிப்பார்கள் என்று இருந்தனர். இவருடன் சேர்ந்து வாசித்த வயலின் கலை ஞர் குகபரன் இணையாக வாசித்தமை பாராட்டத்தக்கது.

இரதோற்சவ நாள் பொன்.ஸ்ரீ.வாமதேவன் முருகன் கீர்த் தனைகளை மிகவும் நிதானமாக, மென்மையாகப் பாடினார். எமது நாட்டின் கர்நாடக இசையில் மூத்தகலைஞரும், இந்தியா, சிங்கப்பூர் நாடுகளில் பெரும் புகழ் பெற்றவருமான ஏ.கே. கருணாகரன் தீர்த்தோற்சவதினம் தெய்வீக இசையரங்கில் மகு டம் சூட்டியது போன்று மிகமிகச் சிறப்பாகப் பாடி ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றார் எனலாம். அவருக்கு அணிசெய் இசைக்கலைஞர்களாக வாசித்த வித்துவான் ஏ. ஜெயராமனின் வயலினும், மிருதங்கம் வாசித்த கலைஞர் எஸ். மகேந்திரனும் மிகவும் சிறப்பாக வாசித்துப் பாராட்டுதல்களைப் பெற்றனர்.

சுனாதவினோதினி ராகவர்ணத்துடன் கச்சேரி ஆரம்ப மாகியது. சாவேரி ராகத்தில் "முருகா ·முழுமதி உந்தன் மருகா"என்ற கீர்த்தனையினைக் கருணாகரன் இனிமையாகப் பாடினார். ஆடானா ராகத்தில் "எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம்" என்ற பாடலும் பேகடா ராகத்தில் "கடைக்கண்

வைத்து என்னை" என்ற கீர்த்தனமும் ஆபோகி ராகத்தில் "வரவேணும் வடிவேலனே" என்ற கீர்த்தனமும் சிறப்பாகப் பாடிக் கரகோஷத்தினைப் பெற்றார். சண்முகப்பிரியாராக ஆலா பனை செய்து "நின்பாதமே துணை" என்ற கீர்த்தனையினை நிரவல் சுரங்கள் செய்து பாடிப் பலத்த பாராட்டுதல்களைப் பெற்றார். நிறைவாகத் தில்லானா பாடி கம்சாநந்தி ராகத்தில் திருப்புகழ்பாடி முடிவுற்றமை முழுமையான இசைக் கச்சேரி யினை யாழ். ரசிகர்கள் பெற்றனர் எனலாம்.

பூங்காவனத் திருவிழா அன்று நிகழ்ந்த நடனம் கண் களுக்குக் குளிர்மையாகவும், செவிகளுக்கு இனிமையாகவும் இருந்தமையினால் ரசிகர்கள் கூட்டம் அதிகம் காணப்பட்டது. இத்தகைய இசை நிகழ்வுகளை ஏற்பாடு செய்த இளங்கலைஞர் மன்றத்தினரின் சேவை.

*உதயன் 2009*



**கர்ம யோகத்தின் விதி**

கர்ம யோகத்தின் விதியின்படி, ஒருவன் செய்த ஒரு கர்மத்தை, அது தனக்கு உரிய பலனை விளைவித்து முடிக்கும் வரையிலும் அழிகககமுடியாது. கர்மம் தனக்கு உரிய பலனை விளைவிப்பதை இயற் கையிலுள்ள எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. நான் ஒரு தீய செயலைச் செய்தால், அதற்கு உரிய துன்பத்தை நான் அனுபவித்தே ஆகவேண்டும். இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எந்தச் சக்தியாலும் இதைத் தடுக்கவும் முடியாது; நிறுத்தி வைக்கவும் முடியாது. அதேபோல, நான் ஒரு நல்ல காரியத்தைச் செய்தால் அது தனக்கு உரிய நல்ல பலனை விளைவிப்பதைப் பிரபஞ்சத்திலுள்ள எந்தக் சக்தியாலும் தடுக்கமுடியாது.

- சுவாமி விவேகானந்தர்-



# இளங்கலைஞர் மன்ற தெய்வீக இசையரங்கம் – 2010

நல்லூர் முருகன் உற்சவ காலத்தில் இளங் கலைஞர் மன்றம் வருடந்தோறும் நடாத்தி வருகின்ற தெய்வீக இசை யரங்கம் அண்மையில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பொன். சுந்தரலிங்கம், பத்மலிங்கம் முதலான கலை ஞர்களால் இளம் பாடகர்கள் மூத்த கலைஞர்கள் இசை ஆர் வலர்கள் பயன்பெறும் வண்ணம் ஆரம்பித்துவைக்கப்பட்ட இந்த மன்றத்தின் இசை விழா மக்களின் பெரும் பாராட்டுதல்களைப் பெற்று தொடர்ந்து பல ஆண்டுகளாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதன் ஆரம்பகால நிர்வாகிகளில் திரு. சோ.பத்மநாதன், திரு. வி. சிவஞானசேகரம் ஆகியோர் தொடர்ந்தும் சேவை ஆற்றி வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது.

இங்கு பாடுபவர்கள் தமிழ் கீர்த்தனைகளையும் முருகன்மீது பாடப்பட்ட பாடல்களையும் பாடுவது, இளங்கலைஞர்களுக்கு

முக்கியத்துவம் கொடுக்கின்றமை முக்கியமான அம்சங்கள். இளங்கலைஞர்கள் போதிய பயிற்சியும் சாதகமும் செய்து பாடினால் மேலும் சிறப்படையமுடியும்.

இம்முறை 2010ம் ஆண்டு வெளிநாட்டில் வாழும் நம் நாட்டினர் சிலர் வந்து கலந்து பாடியமையும் சிறப்பானது. நல்லூர் கந்தசுவாமி ஆலய கொடியேற்ற நாளன்று ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் திரு. ஆறு திருமுருகன் ஆகியோரின் ஆசி உரையையடுத்து கே.ஆர். சுந்தரமூர்த்தி குழுவினரின் நாதஸ்வர இசையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

செல்வி தாரணி ரஞ்சன் இனிய குரலில் ஹிந்தோள ராக ஆலாபனை செய்து "வருவாய் வருவாய் முருகன்" என்னும் கீர்த்தனையை சிறப்பாகப் பாடிப் பாராட்டுக்களைப் பெற்றார். சிங்கப்பூர் கலாமன்ற ஆசிரியர் செல்வி சுஸ்மா சோமசேகரம் இரசிகர்களைக் கவரத்தக்கனவாக ஜனரஞ்சகமான பாடல்கள் பாடி மகிழ்வித்தார். திரு. எஸ். குமாரசாமி வழமைபோன்று சீர்காழியின் பாணியில் பாடினார். சக்ஸபோன் என்னும் மேற்கத்திய வாத்தியத்தினை எமது நாட்டு இரு இளம் கலைஞர்களான யசோதரன் நவரூபன், காண்டீபன் இருவரும் இணைந்து கவர்ச்சிகரமாக ரசிகர்களைக் கவர்ந்து வாசித்து பாராட்டுகளைப் பெற்றனர். லண்டனில் இருந்து வந்த செல்வி கிருஷ்ணி றமேஷ், செல்வி கார்த்திகா றமேஷ் ஜனரஞ்சகமான பாடல்களைத் தெரிந்து இனிமையாகப் பாடி பலத்த கரகோசம் பெற்றனர். திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் சுமாராகப் பாடினார்.

செல்வி தனசொரூபி நவரத்தினம் உயர்ந்த தொனியில் பாடி சபையினரின் பாராட்டுதலுக்கு உரியவரானார். திரு. பொன். வாமதேவன் வழமைபோன்று சிறப்பாக காம்போதி ராக ஆலாபனை செய்து பாடினார். எமது நாட்டின் மூத்த கர்நாடக இசைக்கலைஞரான திரு. ஏ.கே. கருணாகரன்

மிகவும் சிறப்பாகப் பாடினார். மகாராஜபுரம் சந்தானம் அவர்கள் பாடும் "சதாசிவன் மைந்தனே" என்னும் "ஹம்சத்வனி" ராகப் பாடலுடன் ஆரம்பித்து சங்கராபரண ராக ஆலாபனை செய்து அதில் "முத்துக்குமார் ஐயனே" என்னும் கீர்த்தனை பாடி நிரவல்கள் சுரங்கள் என்பன செய்து சிறப்பாகப் பாடினார்.

இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் திரு. என்.வி.எம் நவரத்தினம் அவரது மகன் என். பரந்தாமன் இருவரும் இணைந்து மத்திமாவதி ராக ஆலாபனையைச் சிறப்பாகச் செய்து பாடியமை இரசிகர்களைக் கவர்ந்தது.

பூங்காவனத் திருவிழாவன்று திரு. என். செல்வச் சந்திரனின் இசை நெறியாள்கையில் இடம்பெற்ற நடன நிகழ்ச்சி அனைவரினதும் பெரும் பாராட்டைப் பெற்றது.

*வீரகேசரி 9.10.2010*



**அமைதியும் ஆறுதலும் பெற...**

என் மகனே! உனக்கு எனது சொற்களின் பெயரில் ஏதாவது மரியாதை இருக்குமானால், முதலாவதாக உன்னுடைய அறையின் எல்லாக் கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்துவிடு. இதவே நான் உனக்குத் தரும் முதல் அறிவுரையாகும். கீழ்நோக்கிச் சென்றபடியும் துன்பத்தில் மூழ்கியபடியும் ஏராளமான ஏழைமக்கள் நீ வாழும் பகுதியில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். நீ அவர்களை அணுகிச் சென்று உன் ஆர்வத்தையும் உற்சாத்தையும் செலுத்தி அவர்களுக்குத் தொண்டு செய். நோய்வாய்ப்பட்டவர்களுக்குத் தேவையான மருந்து வகைகைள வழங்க ஏற்பாடு செய். உன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்தி, அந்த நோயாளிகளுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய். பசியால் வாடுபவனுக்கு உணவுகொடு. அறியாமையில் உள்ளவனுக்கு உன்னால் முடிந்த அளவிற்குக் கல்வியறிவைப் புகட்டு. என் மகனே! நான் உனக்குச் சொல்கிறேன் - இந்த முறையில் உன்னுடைய சகோதரர்களாகிய மக்களுக்கு நீ தொண்டு செய்ய ஆரம்பிப்பாயானால், நிச்சயமாக உனக்கு அமைதியும் ஆறுதலும் கிடைக்கும்.

- சுவாமி விவேகானந்தர் -



# கலைமாமணி
# பூஷணி கல்யாணராமன்
# இசை நிகழ்ச்சி – 2011

யாழ்ப்பாணத்தினை பிறப்பிடமாகக் கொண்ட கலைமாமணி பூஷணி கல்யாணராமன் அவர்கள் 28 வருடங்களின் பின்னர் யாழ். வந்து இசை நிகழ்ச்சிகள் செய்து எமது மக்களினதும் தம் உறவினர்களினதும் நண்பர்களினதும் உணர்வுபூர்வமான பாராட்டுக்களையும் ஆவல்களையும் பகிர்ந்துகொண்டமை கண்கொள்ளாக் காட்சிகளாக அமைந்தன. கைலாசபதி கலையரங்கில் செப்ரெம்பர் 1ம் திகதி 2 1/2 மணி நேரமும் இளங்கலைஞர் மன்ற நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் 3ம் திகதி 2 மணிநேரமும் நிகழ்ந்த கர்நாடக சங்கீத இசை நிகழ்ச்சி யாழ். சங்கீத ரசிகர்களுக்கு கலைஞர்களுக்கு கேட்கின்ற பொன்னான வாய்ப்பினை ஏற்படுத்தியது.

பேராசிரியர் துணைவேந்தர் என். சண்முகலிங்கன் அவர்கள் தலைமையுரையில் பூஷணி கல்யாணராமன் அரங்கேற்ற

நிகழ்வில் தான் அறிவிப்பாளராக இருந்ததாகவும் இன்று அவரை வரவேற்று தலைமை தாங்கி பாராட்டும் சந்தர்ப்பம் கிடைத்தமையினையும் நினைவுகூர்ந்தார். பூஷணி அவர்கள் இரு இடங்களில் செய்த இசை நிகழ்சிகள் ஒரே தன்மையாக இல்லாது கீரத்தனைகள் ராகங்கள் சங்கதிகள் யாவும் வெவ் வேறாக அமைந்தமை அவரது கலைநுண் அறிவின் சிறப் பினை வெளிப்படுத்தின. அவர் தனது அபாரசாதனைகள் மூலம் பயிற்சிகள் பல செய்து தென்னிந்திய கலைஞர்களுடன் ஒப்பிடக்கூடியவாறு முன்னணியில் திகழ்வது அவரது தனித்துவமான சாதனைகளின் வெளிப்பாடாகும். சென்னை மியூசிக் அக்கடமி 2000 ஆண்டு இசை விழாவில் அவருக்கு பாடகருக்கான கற்பனா விருது வழங்கி கௌரவித்தனர்.

கைலாசபதி கலையரங்கில் நிகழ்ந்த இசைநிகழ்வில் ரசிகர்கள் குறைவாக இருந்தமை அதிகம் சோபிக்காமலும் துர்க்கா மணிமண்டப நிகழ்வில் ரசிகர்கள் அதிகம் கூடி இருந்தமையினால் அவர்களது பலத்த கரகோஷங்களினால் வெகு உற்சாகமாக, அணிசெய் கலைஞர்கள் துணையாக, மிகவும் அபாரமாக பாடியமையும் நேரம் சென்றமை தெரியாது ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. ஹம்சத்வனி ராகத்துடன் ஆரம்பமான கச்சேரி ஹிந்தோள ராகத்தில் அமைந்த "மால்மருகா முருகா சண்முகா" எனும் கீர்த்தனையுடன் விறு விறுப்பாக களை கட்டத் தொடங்கியது. மோகன ராக ஆலா பனை செய்து முருகனே மயில்வாகனா என்னும் பாடல் பாடிய போது கரகோசம் பலமாக இருந்தது. பூசணி இங்கு பாடிய பாடல்கள் தமிழ் கீர்த்தனங்களாகவும் முருகன் மீது பாடிய பாடல்களாகவும் அமைந்தன.

மத்தியமாவதி ராக ஆலாபனையும் அதில் பாடிய "சரவணபவ குகனே" எனும் கீர்த்தனை நிரவல்கள், கற்பனா சுரங்கள் செய்து பக்கவாத்தியங்களின் உற்சாகமான, தீர்மானங்கள் தொடர்ச்சியான ஆதரவினை தெரிவித்தன. தோடிராக ஆலாபனை உன்னதமாக அமைந்ததுடன் அதில் அவர் பாடிய "தாமதமேன் சுவாமி" என்னும் கீர்த்தனம் நிரவல், சுரம் என்பன பாடியமை கச்சேரி மிகவும் பிரமாதமாக அமையக்

காரணமாக அமைந்தன. கூவி அழைத்தால் வருவான் எனும் வலசி ராகப்பாடல் பிபல்யமானது. தில்லானா, திருப்புகழ் பாடி கச்சேரி பலத்த கரகோஷத்தின் மத்தியில் நிறைவுற்றன.

வயலின் வாசித்த மயிலாப்பூர் திருமதி கல்யாணி சங்கர் பாடகருக்கு அணிந்து மெருகூட்டி வாசித்து தனது வாசிப்பு வல்லமையை இடையிடையே வெளிக்காட்டி ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றார்.

மிருதங்கக் கலைஞர் கும்பகோணம் சுவாமிநாதன் அவர்களின் கைவண்ணத்திறன் வெகு அற்புதமானது. மிகுந்த உற் சாகத்துடன் வாசித்து தனி ஆவர்த்தனத்தில் ஒரு சில நொடிகளில் மிகவும் பிரம்மாதமாக வாசித்தமை ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றன. எமது நாட்டு கலைஞர் திரு. நா. மாதவன் கடம் வாசித்தும், திரு. சி. செந்தூரன் முகர்ச்சிங் வாசித்தும் ஈடுகொடுத்து இணைந்து வாசித்தமையும் பெரும் பாராட்டுக்களைப் பெற்றன.

இராமநாதன் நுண்கலையக்கழகத்தில் இசைத்துறைசார் மாணவர்கள் பயன்பெறும் வண்ணம் இசை சம்பந்தமான பல்வேறு நுட்பங்களைப் பூஷணி கல்யாணராமன் குழு-வினர் செய்து காட்டி கர்நாடக சங்கீதக் கச்சேரி எவ்விதம் அமையவேண்டும் என பல விளக்கங்களுடன் பயிற்சி செய்து காட்டியமை பலராலும் பெரிதும் வரவேற்பினையும் பாராட்டுக்களையும் பெற்றன.

இந்நிகழ்ச்சி யாழ் மண்ணில் இடம்பெற ஆவன செய்த லண்டனில் இருந்து வந்து கலந்துகொண்ட ஆர். சுப்பிரமணியன் குடும்பத்தினர் பாராட்டப்பெற்றனர். அத்துடன் அவற்றை சிறப்புற அமைத்த திரு. வீரசிங்கம் (வீரா) அவர்களும் பாராட்டிற்குரியவர்.

நீண்டகாலமாக எமது மண்ணில் இசைநிகழ்ச்சிகள் இடம்பெறாமையும், பாடுபவர்கள் அருகியும், ரசிகர்கள் குறைவடைந்தும், காலசூழ்நிலைகளும் ரசிகர்கள் ஆதரவு குறைந்தமைக்கு காரணம். இவை மாற்றம்பெற்று முன்னர் போன்று ஆதரவு பெருக இசை உலகம் எதிர்பார்க்கின்றது.

# நல்லூர் சூழலில் உற்சவகால இசை நிகழ்வுகள் – 2012



நல்லூர் உற்சவ காலத்தில் அதன் சூழல் இவ் ஆண்டும் மிகவும் அழகாகவும் புனிதம் மிகுந்த நகரமாகவும் எங்கும் காணப்பட்டது. முருகன் வீதிவலம் வரும் காட்சி அற்புதமானது. "டான்" தொலைக்காட்சி உற்சவ நிகழ்வுகளை தினமும் தமது ஓம் சேவையில் ஒளிபரப்பியமை அடியார்கள் வீடுகளில் இருந்தும் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தது. நல்லூர்ச் சூழல் எங்கும் உற்சவம் முடிந்தபின்னர் கலை நிகழ்வுகளையும் காணும் சிறப்பும் வாய்க்கப்பெற்றன.

நல்லூர் முருகன் உற்சவ காலத்தில் இளங்கலைஞர் மன்றம் வருடந்தோறும் நடாத்தி வருகின்ற தெய்வீக இசையரங்கம் 2012 ஆண்டு துர்க்காதேவி மணிமண்டபத்திலும் சிறுவர்களுக்கான இசை நடன நிகழ்வுகள் மனோன்மணி ஆலய மண்டபத்திலும், நல்லை ஆதீன மண்டபத்தில் பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா அவர்களினால் கந்தபுராண

கதாப் பிரசங்கமும், மகேஸ்வரன் மணிமண்டபத்தில் இசை நிகழ்ச்சிகளுமாக நல்லூர்ச் சூழல் தெய்வீக மணம் கமழும் ஓர் அரும்காட்சிகளாக அடியார்களுக்கு அருள்பாலித்தது.

திரு பொன். சுந்தரலிங்கம், திரு. பத்மலிங்கம் முதலான கலைஞர்களால் ஸ்ரீமுருகன் தண்ணீர்ப்பந்தலில் ஆரம்பித்த இளங்கலைஞர் மன்ற தெய்வீக இசையரங்கு தொடர்ந்து நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் திரு சோ. பத்மநாதன், திரு. வி. சிவஞானசேகரம், திரு. ஆறு. திருமுருகன் ஆகியோரினால் நடாத்தப்பட்டு வருகின்றமை பாராட்டத்தக்கதொன்றாகும். இங்கு பாடும் கலைஞர்கள் தமிழ் சாகித்தியங்களைப் பாடுவதோடு இளங்கலைஞர்களாகவும் காணப்படுகின்றனர். எமது நாட்டு இளங்கலைஞர்கள் போதிய பயிற்சியும் சாதகமும் செய்து பாடினால் சிறப்பாக அமையும். இவ் ஆண்டும் வெளி நாட்டில் இருந்து வந்த நமது கலைஞர்கள் சிறப்பாகப் பாடி அனைவரது பாராட்டைப் பெற்றனர்.

கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் ஆசியுரையுடன் மங்கல இசையினை திரு. வி. கே. பஞ்சமூர்த்தி குழுவினர் அவர்களின் நாதஸ்வர கான இசையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி நடந்தன.

மஞ்சத் திருவிழா திரு. ஆர். இராதாகிருஷ்ணன் குழுவின் வயலின் சோலோ இசை காதுகளை குளிர வைத்தது. நாட்டை ராகத்தில் "ஞான முதல்வனே" எனும் பாடல் நன்றாக அமைந்தது. திரு. ராதாகிருஷ்ணன் வாசித்த பாடல்கள் யாவும் ரசிகர்கள் அதிகம் விரும்பிக் கேட்கும் ஜனரஞ்சகமான இனிய பாடல்களாக, குன்னக்குடி வைத்தியநாதன் வயலின் பாணியில் நல்ல நாத ஒலியுடன் அமைந்து ரசிகர்களின் பலத்த கர கோஷத்தினைப் பெற்றார்.

இராமநாதன் நுண்கலைப்பீட, மூத்த விரிவுரையாளர் செல்வி பரமேஸ்வரி கணேசனின் ரஞ்சனிராக ஆலாபனை நன்றாக அமைந்தது. வராளி ராகத்தில் "காவாவா கந்தா

வா"எனும் பாடலும் கிளிக்கண்ணி பாடலும் சிறப்பாக இருந்தது. திருமதி. குணபூஷணம் அவர்களின் நிகழ்வு நல்ல தொனியில் இருந்ததுடன் அவர் பாடிய பிருந்தாவனி ராக "கலியுகவரதன்" எனும் பாடல் சிறப்பானது.

சிங்கப்பூரில் இருந்து வந்து பாடிய செல்வி சுஷ்மா சோமசேகர் எல்லோரையம் நன்கு மகிழ வைத்தார். அபோ-கி ராக "குருவருளும் திருவருளும்" பாடலுடன் ஆரம்பமான கச் சேரி முடியும் வரை சிறப்பாக அமைந்தது. காம்போஜி ராக ஆலோபனையும் அதில் பாடிய "திருவடி சரணம்" எனும் கீர்த்தனையும் கவர்ச்சிகரமாக இருந்தது. சிறப்பாகப் பாடிய கலைஞர்களுக்கு நேரம் ஒரு மணிநேரம் போதாது.

திரு. எஸ். கோபிதாஸ், திரு. கே. குகபரன் ஆகியோரின் இரு வயலின் இனிமையாக அமைந்தது. மிருதங்கம் வாசித்த கண்ணதாசனும், கடம் வாசித்த பிரம்மஶ்ரீ சிவந்தர சர்மாவும் மிக வும் அனுசரணையுடன் கச்சேரி சிறப்பாக அமைய வாசித்து பாராட்டைப் பெற்றனர். திருமதி. தாரணி ராஜ்குமார் என்பவர் முன்னர் சிறு பாடகியாக இருந்தவர். இப்போ அனுபவம் மிக்க பாடகியாகப் பாடுவது சிறப்பு அம்சமாகும்.

மூத்த இசைக் கலைஞர்களான திரு. பொன். வாமதேவன், திரு. ஏ.கே. கருணாகரன், என்.வி.எம். நவரத்தினம், திருமதி, வாசஸ்பதி ரஜீந்திரன் ஆகியோர் தவறாது இங்கு நடை பெறும் இசையரங்கில் சிறப்பாகப் பாடி ரசிகர்களின் ஆவ லினை பூர்த்தி செய்து வருவது முக்கிய அம்சமாகும். இவர் களது இசை நிகழ்வினை காண்பதற்காக மண்டபம் நிறைந்த ரசிகர் கூட்டம் காணப்படுவது அவர்களது கச்சேரிகள் சிறப்பாக அமைவதனாலேயாகும்.

இளங்கலைஞர் மன்றம் கலைஞர்களுக்கு ஆதரவு கொடுத்து ரசிகர்களை கவரும் வண்ணம் இசை நிகழ்ச்சிகளை இங்கு வருடந்தோறும் நடாத்தி வருவதனை யாவரும் பாராட்டுகின்றனர்.

*2012*



# திருச்சியில் நடைபெற்ற செல்வி சௌவர்ணியின் நடன அரங்கேற்றம்

திருச்சி கருணாஸ் மஹால் சென்ற மாதம் 18ம் நாள் 2012 ஆண்டு வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் போட்டிருந்தது. அன்று கலைக் காவிரியை உருவாக்கிய நாட்டிய மங்கை திருமதி வின்சன் சகாயராணி யிடம் பரதநாட்டியத்தினை முறையாக சிறப்புற பயின்ற ஈழத்து செல்வி. சௌவர்ணி அவர்களின் அரங்கேற்றம் நிகழ இருந்தது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வண்ணார்பண்ணை, சுழி புரம் வதிவிடத்தைச் சேர்ந்த பாரிஸில் வாழ்ந்து வரும் திரு. ஜெயக்குமாரசர்மா அபர்ணா தம்பதியினரின் புதல்வி செல்வி சௌவர்ணியின் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வு மிக வும் கோலாகலமாக மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் நிறைந்திருக்க மிகவும் பக்தி பூர்வமாக ஆரம்பமாகியது. எமது

ஈழநாட்டைச் சேர்ந்தவர்களும் பாரிஸ் நாட்டில் வாழ்ந்து வரும் உற்றார், உறவினர்கள் பலர் பார்வையாளர்களாகவும் திருச்சி கலைக்காவிரி ரசிகர்களுமாக பெருமளவானோர் கலந்து பார்வையிட மிக மிக சிறப்பாக அரங்கம் அமைந்தது.

பரதக்கலை தமிழ் மக்களுடைய பொக்கிசம் இப்புனித கலையானது சமயம் கலாச்சாரம் பண்பாடு ஆகியவற்றுடன் பின்னிப் பிணைந்து நிற்கிற நவரசங்களையும் வெளிப்படுத்தி தெய்வத்தோடு ஒன்றிடக்கூடிய ஓர் உன்னதமான கலையாகும். கம்பீரநாட்டை ராகத்தில் மல்லாரியுடன் ஆரம்பமான நாட்டிய நிகழ்வு இறைவணக்கம், குருவணக்கம், சபை வணக்கம் செய்து சபையினரை தன்வசப்படுத்திவிட்டார் செல்வி. சௌவர்ணி. நாட்டைக் குறிஞ்சி ராக வர்ணம் விரைவாக விறுவிறுப்பாக அங்க அசைவுகள் முக பாவங்கள் என்பன யாவும் சிறப்புற அமைய சபையினரின் பலத்த பாராட்டினைப் பெற்றார். இவர் ஆடிய பதம், வீரம், கோபம், பயம், அற்புதம், வெட்கம், வெறுப்பு, கருணை, நகை, சாந்தம் முதலான ஒன்பது வகை உணர்வுகளையும் பிரதிபலித்தமை சிறப்பானது. கேரளத்தின் நடனக்கலையில் ஒன்றான மோஹினியாட்டம் கிருஸ்ணரைப் போற்றும் காவடிச்சிந்து என்பன இவ் அரங்கேற்றத்தில் மிக வும் அழகாக அமைந்தது.

பிரதம விருந்தினராக கலந்து இவ் அரங்க நிகழ்வினை சிறப்படையச் செய்த கலைமாமணி வெண்ணிற ஆடை புகழ் நிர்மலா அவர்கள் தமது தலைமையுரையில் பேரழகும் மெல்லிய மென்மையான உடலும் அளவான உயரமும் அவரது அரங்கேற்றம் சிறப்பாக அமைய நன்கு ஒத்துழைத்தது என்றார். சௌவர்ணியின் துணிச்சலான நாட்டியத்தின் எல்லாச் சிறப்புக்களையும் வியந்து பாராட்டிய தென்னிந்தியத் திரை யுலகின் பரதக்கலாமணி நிர்மலா இங்கு நடைபெற்றது அரங்கேற்றம் அல்லாது நன்கு தேர்ச்சி பெற்ற ஓர் நாட்டிய நிகழ்ச்சியாகும் என வர்ணித்தார்.

இவ் அரங்கேற்ற நிகழ்வினை தொகுத்து வர்ணனை செய்து தனது இனிய தொனியில் மிகவும் சிறப்பாக வழங்கிய வின்சன் அவர்களையும் பலரும் பாராட்டினர். திருமதி. சகா யராணியின் நட்டுவாங்கமும் குரலிசை செய்த திரு. பிரவீன், மிருதங்க இசைவாசித்த திரு. செந்தில்குமார், வயலின் வாசித்த திரு. ஸ்ரீவாசன், புல்லாங்குழல் இசைத்த திரு.சந்திரசேகரன் ஆகிய கலைஞர்கள் நாட்டிய அரங்கம் அற்புதமாக அமைய மெருகூட்டியமை பாராட்டத்தக்கன. ஒளி அமைப்பும் மேடை அமைப்பும் மேலும் சிறப்புற அமைந்திருந்தால் பரதநாட்டிய அரங்கேற்றம் எல்லா வகையிலும் சிறந்ததாக அமைந்திருக்கும். ஈழத்திருநாட்டின் இளம் நாட்டிய செல்வி சௌவர்ணி திருச்சியில் பாரத மக்கள் யாவரும் பாராட்டத்தக்க வகையில் நடன அரங்கேற்றம் நிகழ்த்தியமை மிகவும் பாராட்டத்தக்கன.


தமிழமுதம், 2012



முதலில் பெரிய மகான்களின் வழிபாட்டைக் கொண்டுவரவேண்டும். அழியாத உண்மைகளைக் கண்டறிந்த அந்த மகான்களின் வாழ்க்கையை, மக்கள் பின்பற்றுவதற்கான லட்சியங்களாக வழங்க வேண்டும். இந்தியாவிலுள்ள ராமர், கிருஷ்ணர், ஹனுமான், ஸ்ரீராமகிருஷ்ணர் முதலியோர் அத்தகையவர்கள்.

இங்கு ஸ்ரீராமருடையவும் ஆஞ்சநேயருடையவும் வழிபாட்டை உன்னால் கொண்டுவரமுடியுமா? தற்போதைய சூழ்நிலைக்கு, பிருந்தாவனக் கண்ணன் தேவையில்லை, ஒதுக்கிவிடு. சிங்கக் குரலில் கீதையைக் கூறிய கிருஷ்ணனின் வழிபாட்டை நாடு முழுவதும் பரப்புங்கள். அன்றாட வாழ்வில் ஆற்றல் அனைத்திற்கும் இருப்பிடமான சக்தி வழிபாட்டைக் கொண்டுவாருங்கள்.

# யாழ்ப்பாணத்தில் நாதஸ்வரக் கலைஞர்கள்






கலாசூரி என்.கே. பத்மநாதன்

யாழ்ப்பாணம் நாதஸ்வர கலையில் முதன்மை பெற்றிருந்தது. பற்பல நாதஸ்வர தவில் கலைஞர்கள் எமது மண்ணில் தோன்றி புகழ்பெற்று வாழ்ந்து சென்றுள்ளனர். மங்கள நிகழ்வுகளில் கோவில் மகோற்சவ தினங்களில் நாதஸ்வரம் முக்கிய இடம்பெறுகின்றது. குறிப்பாக கல்யாண வைபவங்களிலும் கும்பாபிஷேக வைபவங்களிலும் மகோற்சவம் நடைபெறும் சமயங்களிலும் நாதஸ்வர தவில் வாத்தியங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. நாதஸ்வரம் மங்கள வாத்தியம் என சிறப்பித்துக் கூறப்படுகின்றது. நாதஸ்வர இசையானது எல்லோரையும் மகிழ்வித்து சந்தோசப்படுத்தும் வாத்தியமாகும்.

பல வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரபல்யம் மிக்க சிறந்த நாதஸ்வர தவில் வாத்திய இசைக்கலைஞர்கள் பலர் வாழ்ந்தனர். இந்தியா சென்று

அந்நாட்டு நாதஸ்வர வித்துவான்களுடன் போட்டி போட்டு வாசித்து பெரும் புகழ் படைத்தவர்களாக மிளிர்ந்தனர். தற்பொழுது எமது நாட்டில் நாதஸ்வர கலைஞர்கள் குறைந்து காணப்படுகின்றனர். இக் கலையை அனுபவித்து ரசிக்கும் கூட்டமும் அருகிக் காணப்படுகின்றது. அதற்கு எமது நாட்டின் சூழ்நிலையும் முக்கிய காரண-மாகும். ஆனால் வெளிநாடுகளில் இக் கலைஞர்கள் மிகவும் போற்றப்படுகின்றார்கள்.



பி.எஸ். பாலமுருகன்
நாதஸ்வர வித்துவான்

கோண்டாவில் எம்.பி. பாலகிருஷ்ணன் அளவெட்டி என்.கே. பத்மநாதன், இணுவில் என். ஆர். கோவிந்தசாமி, அளவெட்டி பாலகிருஷ்ணன் இணுவில் கே. ஆர் சுந்தரமூர்த்தி, வண்ணை அப்புலிங்கம், சாவகச்சேரி பஞ்சாபிகேசன், இணுவில் கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்கள் அளவெட்டி சிதம்பரநாதன், அளவெட்டி கேதீஸ்வரன் சாவகச்சேரி நாகேந்திரன், நல்லூர் பி. ரஜீந்திரன் கோண்டாவில் சிவதாஸ் இன்னும் பல மிகப் பெருமைவாய்ந்த நாதஸ்வர வித்துவான்கள் எமது மண்ணில் தம் கம்பீரமான இனிய வாசிப்பின் மூலம் எம் மக்களைக் கவர்ந்த பெருமை மிக்க கலைஞர்களாவர். இவர்கள் தமது வித்துவத்தன்மையினை வெளிக்காட்டி பட்டங்கள் பல பெற்று பாராட்டப்பெற்றவர்கள்.

நாதஸ்வர இசைக்கு தவில் வாத்தியம் மிகவும் இணைந்தது. தவில் வாத்தியக் கலைஞர்கள் பலர் எம்மண்ணில் தோன்றி உலகப் புகழ்பெற்ற வித்துவான்களாக காணப்பட்டனர்.

தவில் மேதை எனப் போற்றப்படும் லய ஞான பூபதி திரு. தெட்சணாமூர்த்தியின் புகழ் அகில உலகம் எங்கும் பாராட்டப்பெறும் பெரும் கலைஞர் ஆவார். இவரது தவிலின் நாதம் அவர் வாசிக்கும் கணகணப்பு, விறுவிறுப்பு இன்றும் நம் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. தவில் மேதையான என். ஆர். சின்னராசா, நாச்சிமார் கோவில் கணேசன், இணுவில் புகழ்பெற்ற நித்தியானந்தன், கைதடி பழனி அளவெட்டி வித்துவான் குமரகுரு, அளவெட்டி உதயசங்கர் வண்-பழனிமலை, இணுவில் சுதாகரன், ரவி இன்னும் பல சிறந்த தவில் வாத்திய விற்பன்னர்கள் பலரும் தமது கைவிரல் கைவண்ணத்தில் தவிலை பேசவைத்து எம்மக்களைக் கவர்ந்த வித்துவான்களாவர். அக்காலத்தில் இவர்கள் கலந்துகொண்டு வாசிக்கின்ற கலை நிகழ்வுகளில் ரசிகர்களின் கூட்டம் நிரம்பி இருப்பதனை காணமுடிந்தது.

கோவில் உற்சவகாலங்களில் மேடைபோடப்பட்டு இக் கலைஞர்களின் நாதஸ்வர இசைநிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு மக்கள் கூடி மகிழ்வர். பல மணி நேரங்கள் இவர்களது இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றதனையும் மறக்கமுடியாதன. பல கோவில்களில் உற்சவ காலங்களில் போட்டிபோட்டு உபயகாரர்கள் இக்கலைஞர்களின் இசை கச்சேரியினை ஒழுங்குபடுத்துவதையும், அவை இரவு 9 மணி முதல் விடிய விடிய நடைபெற்றதனையும் காணமுடிந்தது. வித்துவான்களும் ராக ஆலாபனை கீர்த்தனங்கள் ராகம், தானம், பல்லவி எனவும் அவற்றில் சுரங்கள், சங்கதிகள், மகுடி, சினிமாப் பாடல்கள் என நீண்டுகொண்டே போகும். தவில் சமா தவில் கச்சேரி என்பன மக்களை மிகவும் உற்சாகப்படுத்தும் நிகழ்ச்சி ஆகும். தவில் சமாவில் தவில் வாத்திய கலைஞர்கள் பல வகைகளில் தமது வாசிப்பின் தன்மையை காண்பிப்பர். இவை ஓர் போட்டியாக அமைவதனையும் ரசிகர்கள் மிகவும் பார்த்து மகிழ்வதனையும் காணமுடியும். தவில் கலைஞர்களான என். ஆர். சின்னராசா, குமரகுரு, கணேசன், உதயசங்கர் ஆகியோர்

சேர்ந்து வாசிக்கும் அற்புதங்களை மக்கள் மெய்மறந்து கேட்டு பார்த்து ரசிப்பன எம் மக்களுக்கு அக்காலத்தில் கிடைத்தவை. இவை யாவும் முப்பது வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த சம்பவங்கள்.


நல்லூர் உற்சவ காலங்களில் நாதஸ்வர வித்துவான்கள் என். கே. பத்மநாதன் கேதீஸ்வரன் இணைந்து சுவாமி எழுந்தருளும்போது வாசிப்பது நாம் கண்ட காட்சிகள் ஓர் பெரிய ரசிக கூட்டம் சூழ்ந்து அதனை ரசித்து தலையாட்டி தாளம் போடுவன இன்றும் எம் கண்ணில் தெரிகின்றன. இதில் ஓர் ரசிகர் திரு. செல்வநாயகம் என்பவர் இவர் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியராக இருந்த புஷ்பா செல்வநாயகம் அவரது தந்தையார், நாதஸ்வர இசையினை ரசித்து தப்பாது தாளம் போட்டு வரும் காட்சியும் மறக்க இயலாதன. பத்மநாதனுடன் சில காலம் பாலமுருகன் என்பவரும் இணைந்து நாதஸ்வரம் வாசித்தனர். பாலமுருகன் சில காலமாக பத்மநாதன் வாசிக்கும் பாணியில் உற் சவ காலங்களில் மிக இனிமையாக ராக ஆலா பனை கீர்த்தனங்கள் வாசித்தமையும் மறக்க இயலாத நிகழ்வுகள்.

பல காலங்களாக எல்லோராலும் பாராட் டப்பெற்ற இணை சகோ தரர்களான கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி அவர்களின் நாதஸ்வர கானம் மிக வும் சிறப்பானவை. இவர்கள் இருவரும் இணைந்து ராக ஆலாபனை ராகமாலிகை, பலவித அபூர்வ சங்கதிகள், மிக உயர்ந்த தொனியில் விறுவிறுப்புடன் சண்முகப் பரியா, சாவேரி, நீலாம்பரி, கானடா, சகானா, அடானா ராகங்களில் ராகமாலிகை செய்வன யாவும் இவர்களின் தனிப்பட்ட கவர்ச்சிகரமான சிறப்பான அம்சங்களாகும். இவர்கள் இருவரின் புகழ் சில காலமாக கொடிகட்டிப் பறந்தன. கோண்டாவில் பாலகிருஷ்ணன் தலைசிறந்த நாதஸ்வர வித்துவான். அவரது வாசிப்பு அற்புதமானது பெரும் புகழ் ஈட்டியவர். சமீப காலங்களாக இரு இளம் சக்கரவர்த்திகள் பஞ்சமூர்த்தியின் புதல்வர் நாதஸ்வர


விநோதன் கே.பி. குமரேசன், பி.எஸ். பாலமுருகன் ஆகிய இருவரும் மிகவும் தரம் வாய்ந்த முறையில் மக்களை கவரும் வண்ணமாக மிகவும் இனிமையாக வாசித்து வருவது மிகவும் பாராட்டத்தக்கது. அவர்கள் இருவரும் மென்மேலும் பெருமை பெற்று பெரும் வித்துவான்களாக மிளிர வேண்டும் என ரசிகர்கள் பலரும் எதிர்பார்க்கின்றனர். பாலமுருகன் சிறு பையனாக 1992ம் ஆண்டு நுணாவில் வைரவர் கோவில் உற்சவத்தில் நல்ல கற்பனா சுரங்களுடன் நாதஸ்வரம் வாசிப்பதனை பார்த்தபோது அவனுடைய திறமையை உணர்ந்து பாராட்டி சிறந்த கலைஞன் ஆக வாருவாய் என வாழ்த்தினேன். இன்று அவன் சிறந்த நாதஸ்வர கலைஞனாக காண்பதைக் கண்டு பெருமை அடைகிறேன். சிட்னி முருகன் கோவிலில் பாலமுருகனும் குமரேசனும் இணைந்து சிறப்பாக வாசித்து அந்த நாட்டில் உள்ள எமது மக்களால் பாராட்டப்பெற்றதனை வரவேற்கின்றோம்.

மிக அண்மையில் கல்யாண நிகழ்வில் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் திரு. பஞ்சமூர்த்தியுடன் குமரேசன் இணைந்து மிகவும் சிறப்பாக மாறி மாறி பல கீர்த்தனைகள் வாசித்த சிறப்பினையும் கரவெட்டி கோவிலில் வல்வெட்டித்துறையில் கல்யாண நிகழ்வில் திரு பஞ்சமூர்த்தி ஆலாபனை செய்ய தொடர்ந்து குமரேசனும் பாலமுருகனும் ஆலாபனை செய்து கவர்ச்சிகரமாக வாசித்த சிறப்பையும் பாராட்டுகின்றோம். இதுபோன்று பற்பல நிகழ்வுகளில் இவர்கள் இருவரும் திரு பஞ்சமூர்த்தியுடன் இணைந்து சிறப்பாக வாசித்து பெரும் புகழ் பெற்றுள்ளனர். இவர்கள் இன்னமும் பயிற்சி செய்து எதிர்காலத்தில் மேலும் சிறந்த கலைஞர்களாக வரவேண்டும் என கலை உலகம் எதிர்பார்க்கின்றது.

*1.04.2014*



காட்டுத்துறை விநாயகர்



புதிய சித்திர தேரில்
விநாயகர்



பஞ்சமுக விநாயகர்



சஷ்டிஅப்த்த பூர்த்தி விழா 60வது வயது விழா - கொழும்பு



ஸ்ரீமதி பார்வதி அவர்களின் 60வது வயது நவக்ரஹஹோமம்



சகோதரருடன்



சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் தம்பதிகள்



பிரம்மஸ்ரீ சீதாராமசான்திரிகள் ஸ்ரீமதிசீதாலட்சுமி அம்மா
பேரன் கோகுலபாலன் உபநயனம்




நந்தகோபன் - உபநயனம் பிரம்மஸ்ரீ சீதாராமநாஸ்திரிகள்
கைலாசநாதக்குருக்கள்



பீமரத சாந்தி நிகழ்வில்



பீமரத சாந்தி நிகழ்வு - லண்டன்



பீமரத சாந்தி வைபவம்

இ. பகவதீஸ்வர ஐயர் புஸ்பராணி தம்பதிகள் - பிரான்ஸ்



பீமரத சாந்தி நிகழ்வு



பீமரத சாந்தி நிகழ்வு



முரளிதரன் சிந்துஜா - திருமணம்



பீமரத சாந்தி நிகழ்வு



குடும்பத்தினர்



பிள்ளைகளுடன்




அரசாங்க நிர்வாக அலுவலகத்தில்



நியந்த்ரி




பிரான்ஸ்



கனடா ரொறன்ரோ

7726 (P)

7726(P)



Noble Printers - Jaffna